விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 24 வெள்ளிக்கிழமை (08.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 079

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-5686)

முன்னாள் கடற்படைத் தளபதி

## அட்மிரல் வசந்தவை கைது செய்ய

### உச்ச நீதிமன்றம் தடை



24

## மன்னார் புதைகுழி எலும்புகள் 1499 - 1719 ஆண்டுகளுக்குரியவை

### கார்பன் அறிக்கையில் வெளியீடு

(மன்னார்)

மன்னார் நகர நுழைவாயிலில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளின் மாதிரிகள் 300 தொடக்கம் 500 ஆண்டுகள் இடைப்பட்டவை என்று கார்பன் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மாதிரிகளின் அறிக்கையில் 1499 தொடக்கம் 1719ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் புதைக்கப்பட்ட மனித உடலங்களின் எச்சங்களே இவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 24

## போர்க்குற்ற விசாரணையில் இலங்கை குத்துக்கரணம்

### ஏ.எவ்.பி செய்தி நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பாக இலங்கை குத்துக்கரணம் அடித்துள்ளதாக. அனைத்துலக செய்தி நிறுவனமான ஏ.எவ்.பி தெரிவித்துள்ளது. பழைய காயங்களைக் கிளற விரும்பவில்லை என்று ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்து தொடர்பாக ஏ.எவ்.பி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

2009 மே மாதம் முடிவுக்கு வந்த இலங்கையின் 30 ஆண்டுகால போரின் இறுதி மாதங் 23

## ஜெனிவாவில் என்ன கோர வேண்டும்

# எழுத்து மூலம் தருமாறு

# ஆளுநர் ராகவன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வில் மக்கள் சார்பில் முன்வைக்க வேண்டிய கோரிக்கைகள் ஏதாவது இருப்பின் அவற்றை எழுத்து மூலமாக சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கேட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

ஆட்சி மாறாவிடின்

## பொருளாதார தடை ஏற்பட்டிருக்கும்

### லக்ஸ்மன் கிரியெல்ல



23

## 35 இலட்சம் ரூபாய் பணம் கேட்டு 8 வயது சிறுவன் வவுனியாவில் கடத்தல்

(குருமன்காடு)

வவுனியா, நெடுங்கேணி பகுதியில் 35 இலட்சம் ரூபாய் பணம் கேட்டு 8 வயது சிறுவன் ஒருவன் கடத்தப்பட்டுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. திரிபரஞ்சன் தமிழவன் என்ற சிறுவனே கடத்தப்பட்டுள்ளார். இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,



வவுனியா, நெடுங்கேணி, பெரிய மடுப் பகுதியில் வசித்து 24

ஜெனிவா கூட்டத்தொடர் குறித்து

## அமெரிக்க தூதுவருடன் கூட்டமைப்பு யாழில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

ஜெனிவா கூட்டத்தொடர் தொடர்பிலும் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்க தூதுவருடன் யாழில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இச்சந்திப்பு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி 23

சர்வதேசத்துக்கு கொடுத்த வாக்குறுதியை

## இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

சர்வதேச கண்காணிப்பை நீடிக்கச்செய்வதோடு சர்வதேசத்துக்கு இலங்கை கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 24

பிரமாண்ட கடற்படை தளம் அமைக்க

## 232 ஏக்கர் தனியார் காணி வலி. வடக்கில் சுவீகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு, காங்கேசன்துறையில் பொதுமக்களுக்கு சொந்தமான 232 ஏக்கர் தனியார் காணிகளை சுவீகரிப்பதற்கு அரசாங்கம் இரகசிய முயற்சியில் ஈடுபட்டுள்ளது. காணி சுவீகரிப்பிற்கான ஆரம்பக்கட்ட பணிகள் துரிதமாக நடந்து வருவதாக தெரியவருகின்றது. 24

## வட மாகாணத்தில் வெப்பமான காலநிலை இன்றும் தொடரும்

(கொழும்பு)

வடக்கு. கிழக்கு. வடமத்திய மாகாணங்களிலும். புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகளில் இன்றைய தின 24

## வடக்கின் தற்போதைய நிலைமை குறித்து ஆளுநர் அமெரிக்க, நெதர்லாந்து தூதுவர்களுக்கு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் தற்போதைய நிலைமை குறித்து ஆளுநர் சுரேன் ராகவன் அமெரிக்க மற்றும் நெதர்லாந்து தூதுவர்களுடன் கலந்தாலோசித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா பி ரெப்லிட்ஸ்





(Alaina B. Teplitz) மற்றும் நெதர்லாந்து தூதுவரான ஜோன்னே டோர்னிவேர்ட் (Joanne Doornewaard) ஆகியோர் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை ஆளுநர் செயலகத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடினர். 24

## அரசியலமைப்பு கண்காணிக்கப்படுகிறது

### யாழில் அமெரிக்கத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்பு முயற்சிகள் குறித்து அமெரிக்காவின் கண்காணிப்பு தொடர்ந்துகொண்டிருப்பதாக அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி.டெப்ளிட்ஸ் யாழில் தெரிவித்துள்ளார். 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின்

# யன்னல் கண்ணாடிகள் இனந்தெரியாதோரால் அடித்துடைப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் யன்னல் கண்ணாடிகள் நேற்றையதினம் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரிகளின் மாணவர்கள் எனக் கருதப்படுபவர்களினால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

நேற்று பிற்பகல் பாடசாலை முடிவடைவதற்கு சற்று முன்னர் இரண்டு பட்டா ரக வாகனத்தில் வருகைதந்த 10ற்கு மேற்பட்ட மாணவர்கள் குறித்த பாடசாலை மதிலினால் பாய்ந்து உள்நுழைந்து யன்னல் கண்ணாடிகளை அடித்து நெருக்கியதுடன் ஆசிரியர்களுடன் அநாகரிகமான வார்த்தைப் பிரயோகத்திலும் ஈடுபட்ட னர்.

யாழ்ப்பாண பிரபல பாடசாலைகளின் பெருந்துடுப்பாட்ட போட்டி நடைபெறும் நிலையில் இக்கல்லூரிகளின் கொடிகளைத் தாங்கியவாறு வருகை தந்தவர்களே இவ் அநாகரிகமான செயற்பாட்டை மேற்கொண்டதாக பாதிக்கப்பட்ட பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் பாடசாலையின் அதிபரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3-10)

# வடக்கு மாகாண அதிபர் சங்கம் தொழிற்சங்கமாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அதிபர்கள் சங்கம் பதிவு செய்யப்பட்ட ஒரு தொழிற்சங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அதிபர்கள் சங்கம் இது வரை காலமும் பெயரளவில் இயங்கி வந்த போதிலும் தற்போது அச்சங்கம் தொழிற் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## மணமகள் தேவை

நட்சத்திரம்– கேட்டை 4ம் பாதம், கிரக பாவம்– 31 1/4, இந்து கௌரவ குடும்பம், கல்வி– HNDA பட்டதாரி (இலங்கை), பிறந்த திகதி– 14.10.1980, லண்டனில் சொந்தத் தொழில், PR இல்லை. தொடர்புகளுக்கு:

**077 466 1915**


## வாழ்த்துக்கள்




வட மாகாண நீர்ப்பாசனத்தின்
முத்தானவர் இன்றுடன் அரச
சேவைதனில் பெறுகிறார் ஓய்வு.

**எந்திரி ந.நவநேசன்**
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்
சேவைக்காலம்: 1983 - 2019

சேவையாளர்கட்கு
முன்னுதாரணமாக உன்னதமான
சேவையாற்றிய எமது பிரதி
நீர்ப்பாசனப் பணிப்பாளரை
எழில் மிகு வனப்புடனும்
சிறப்புடனும் வாழ பணிவுடன்
வாழ்த்துகிறோம்.

பணிவு கலந்த அன்புடன்
தங்கள் வழித்தடம் பற்றும் சிறியோர்.

(7783)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## கண்ணீர் அஞ்சலி



**அமரர் சுந்தரலிங்கம் செல்லம்மா (றெஜினா)**

எமது பிரதேச செயலக கிராம அபிவிருத்தி
சங்கத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்
அன்ரூ அவர்களின் அன்புத் தாயாரின்
மறைவையிட்டு மன வேதனை கொண்ட
நாம் அவரது குடும்பத்தினருக்கு எமது
ஆழமான துயரத்தை பகிர்ந்து
கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தி பெற வேண்டுகின்றோம்.

**யாழ்ப்பாண பிரதேச செயலக
மாதர் கிராம, கிராம அபிவிருத்தி
சங்கத்தின் சமாசம், யாழ்ப்பாணம்.**

(7090)


## இலவச பல் பரிசோதனை
## FREE DENTAL CHECK UP

மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிருக்கான இலவச பல் பரிசோதனை **இல.96, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.** (யா/இந்து மகளிர் கல்லூரி, பிறவுண் வீதி சந்தியில்) எனும் முகவரியில் அமைந்த Smile Line Dental Clinic இல் 8ஆம் திகதி, 9ஆம் திகதி - 4pm to 6pm, 10ஆம் திகதி - 9am to 12 Noon வரை நடைபெறவுள்ளது.

பதிவுகளுக்காக அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்.

**021 221 4989, 077 487 1028**

(7780)


## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர் தெரிவு 27.01.2019ஆம் திகதிய விபரப்படி கிளைக்குழு உறுப்பினர் தெரிவு நடத்தப்பட்டது. அன்றைய தினம் தெரிவு நடைபெறாத பதின்நான்கு (14) கிளைகளுக்கான கிளைக்குழு உறுப்பினர் தெரிவு பின்வரும் விபரப்படி 09.03.2019ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்**

**கூட்டம் நடைபெறும் திகதி : 09.03.2019 சனிக்கிழமை**

**நேரம் : முற்பகல் 10.00மணி**

| கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் பெயர்கள் |
|---|---|---|---|
| 03 | சித்தன்கேணி | பிள்ளையார் கோவிலடி சனசமூக நிலையம், சித்தன்கேணி. | பெ.சதீஸ் |
| 06 | சுழிபுரம் வடகிழக்கு | சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் சனசமூக நிலையம் | பா.குருபரன் |
| 08 | சுழிபுரம் குகன் | கலைமகள் சனசமூக நிலையம், சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். | நா.ஜெயவதனன் |
| 10 | பொன்னாலை | கலாசார மண்டபம், பொன்னாலை. | ம.கபிலன் |
| 12A | நெல்லியான் | கிளை 12 தொல்புரம், கிளைக்கட்டடம் | ச.பிறேமிலன் |
| 17 | வட்டு சிவன் | கிளை 17 வட்டு சிவன், கிளைக்கட்டடம் | தா.தவமன்னன் |
| 18 | வட்டு கிழக்கு | வட்டுக் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம். | ச.அருள்நாதன் |
| 20 | வட்டு மேற்கு | முதலிகோவிலடி பொது நோக்கு மண்டபம், வட்டுதெற்கு. | வ.நிதர்சன் |
| 21 | வட்டுக்கோட்டை | மூன்றாம்பனை ஐக்கிய நாணய சங்கம், வட்டுக்கோட்டை. | செ.பகீதரன் |
| 25 | அராலி விக்னேஸ்வரா | கிராம அபிவிருத்திச் சங்கம் அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. | சி.சியாந்தன் |
| 28 | துணவி | யா/சின்னம்மா வித்தியாசாலை சங்கரத்தை, வட்டுக்கோட்டை. | இ.கஜேந்திரன் |
| 29 | சங்கரத்தை துணவி | யா/சின்னம்மா வித்தியாசாலை சங்கரத்தை, வட்டுக்கோட்டை. | அ.வசீகரன் |
| 32 | சிலம்புப்புளியடி | யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். | இ.வேல்குமார் |
| 33 | சங்கானை கிழக்கு | யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். | பா.பாலரவி |

குறிப்பிட்ட கிளைகளின் கூட்டங்களுக்கு சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் எவரேனும் மேற்குறிப்பிட்ட தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு அறிவித்தல் கிடைக்காது விடினும் குறித்த கூட்டத்தில் இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு சமுகமளிக்க முடியும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

**கூ.அ.உ. ஆணையாளர் பணிமனை,
857, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
01.03.2019**

**ஒப்பம்
செல்வி. பரீன் ஹஸ்ஸானா அப்துல் சமீயூ
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
யாழ். மாவட்டம்**

(சி-5715)

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு
12 . 04 . 1938

உதிர்வு
06 . 03 . 2019

அமரர்

**DR. நடராஜா சிவராஜா**

நீர்கொழும்பில் வேர் கொண்டு ஆனைக்கோட்டைதனில்
அழகிய விருட்சமாகி சமுதாய மருத்துவத் தேர்
சரியாக விரைந்தோட சாதுரியச் சாரதியாய
குருத்துகளை மருத்துவராய் உருவாக்கும் ஆசானாய்
சிறப்பாகப் பணிசெய்த சிவராஜ தீபமே!
சிவனடியில் அமைதிபெற அனுதினமும் பிரார்த்திப்போம்.

(7781)

"யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியநிபுணர்களின் அமையம்"

### தமிழ் மக்களிடம் சிங்களவர்கள் மோசமாக நடந்துகொண்டனர்

# பிரபாகரன் உருவான காரணத்தை நியாயப்படுத்தினார் ஜனாதிபதி





(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரி, தான் சிறுவயதில் பெற்ற அனுபவம் ஒன்றைப் பகிர்ந்துள்ளார். தான் சிறுவனாக இருந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களிடம் சிங்கள மக்கள் மோசமாக நடந்துகொண்டதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புகையிரதப் பயணம் தொடர்பில் எனக்கு அனுபவம் உண்டு. பொலநறுவையில் இருந்து கொழும்பிற்கு 7, 8 மணித்தியாலங்கள் பயணிக்கும் தபால் புகையிரதச் சேவை உள்ளது. அந்தப் புகையிரதம் அதிகாலை 3 அல்லது 4 மணிக்கு கொழும்பு கோட்டையை அடையும்.

எனது பெற்றோர், அப்போது சிறுவர்களாக இருந்த எம்மை அழைத்துக் கொண்டு பொலநறுவை புகையிரத நிலையத்திற்கு செல்வார்கள். அப்போது கொழும்பிற்கு பயணிப்பதற்காக சுமார் 400, 500 பேர் புகையிரத நிலையத்தில் குவிந்திருப்பார்கள். அந்தப் புகையிரதம் மட்டக்களப்பிலிருந்து வரும்.

தேசிய நல்லிணக்கம் தொடர்பாக நாம் கதைக்கும் சந்தர்ப்பத்தில் நான் இந்த விடயத்தைக் கூறுகின்றேன். மட்டக்களப்பிலிருந்து வரும் புகையிரதத்தில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் நிறைந்திருப்பார்கள். பொலநறுவையில் புகையிரதத்தில் ஏறும்போது எமக்கு ஆசனங்கள் இருக்காது. அப்போது சிங்கள மக்கள் என்ன செய்தார்கள்? ஆசனங்களில் சிறு குழந்தைகளுடன் உறக்கத்தில் இருக்கும் தமிழ் மக்களை அடித்து துரத்திவிட்டு அந்த இருக்கைகளில் சிங்கள மக்கள் அமர்ந்துகொள்வார்கள். இதனை நான் ஒருநாளோ, இரண்டு நாட்களோ பார்க்கவில்லை. பல தடவைகள் கண்டுள்ளேன்.

அப்போது பயத்தில் 'ஐயோ சாமி' என கத்திக்கொண்டு, அழுதுகொண்டு மலசலகூடங்களிலும் மறைவான இடங்களிலும் சிறு குழந்தைகளுடன் தமிழ் மக்கள் ஒளிந்துகொள்வார்கள். எமது மதிப்பிற்குரிய சிங்கள மக்கள் அந்த ஆசனங்களில் அமர்ந்துகொண்டு உறங்குவார்கள். இவ்வாறுதான் பிரபாகரன்கள் உருவானார்கள்" என ஜனாதிபதி மைத்திரி நினைவு கூர்ந்தார். (இ-7)

## இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழையமுற்பட்ட 30 பேர் கைது

### புகலிடக்கோரிக்கையாளர்கள் எனத் தகவல்

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பிற்குள் சட்ட விரோதமாகப் படகு ஒன்றின் மூலம் பிரவேசிக்க முயன்றவர்களைக் கைது செய்துள்ளதாக இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாகப் படகு ஒன்றின் மூலம் இலங்கைக்குள் பிரவேசிக்க முயற்சி செய்த 30 புகலிடக்கோரிக்கையாளர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 30 புகலிடக் கோரிக்கையாளர்களையும் தெற்கு கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் கடற்படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இம்முறை வரவு-செலவுத்திட்டம் பெரும் தோல்வியைச்சந்திக்கும்

### விமல் வீரவன்ச எச்சரிக்கை

(கொழும்பு)

இம்முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் பெரும் தோல்வியைச் சந்திக்குமென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத்திட்டம் தொடர்பாக கொழும்பில் நேற்று முன்தினம் புதன் கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இம்முறை இந்த அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத்திட்டம் நிச்சயமாக பெரும் தோல்வியையே சந்திக்கும்.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிகளைக் கொண்ட திட்டங்கள் எதுவும் இந்த வரவு-செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

மேலும் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியினைக் கட்டுப்படுத்தி உள்நாட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கான திட்டங்கள் எதுவும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் காணப்படவில்லை.


எனவே இந்த வரவு-செலவுத்திட்டத்தைத் தோற்கடித்து தேர்தலொன்றிற்குச் செல்வதே நாட்டினது அரசியல் குழப்பநிலைக்குத் தீர்வாக அமையும்" என விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார். (இ-7)

### தனங்களப்பில் தலைமறைவாகியிருந்த

# வாள்வெட்டு வன்முறைகளின் பிரதான சந்தேக நபர் கைது!

### யாழ்.சிறப்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் அதிரடி





(சாவகச்சேரி)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் வாள்வெட்டு வன்முறைகளின் பிரதான சந்தேகநபர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை தனங்களப்பிலுள்ள வீடொன்றில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 2 வாள்கள் மீட்கப்பட்டன என்று பொலி ஸார் தெரிவித்தனர். கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக தலைமறைவாகியிருந்த இந்தச் சந்தேக நபரை யாழ்ப்பாணம் சிறப்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

"ஆவா குழுவிலிருந்து செயற்பட்ட இந்தச் சந்தேக நபர், மானிப்பாய் தனுறொக் என்பவர் மற்றும் அவருடன் தொடர்புடையவர்களின் வீடுகளைத் தாக்கி வந்த கும்பலைச் சேர்ந்தவர். அத்துடன் கடந்த ஆண்டு மருதனார்மடம் பகுதியில் சுன்னாகம் பொலிஸாரால் வாள்களுடன் கைது செய்யப்பட்ட கும்பலில் இருந்த இந்த நபர் தப்பித்திருந்தார்.

இந் நிலையில் கடந்த ஒரு வருடமாக தலைமறைவாகியிருந்த சந்தேகநபர் தனங்களப்பு பகுதியிலுள்ள வீடொன்றில் மறைந்திருக்கின்றார் என்று யாழ்ப்பாணம் சிறப்புக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவுக்கு தகவல் கிடைத்தது. அதனடிப்படையில் அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான ரஞ்சன் எதிரிசிங்க தலைமையிலான அணியினர் நேற்று முன்தினம் நள்ளிரவு குறித்த வீட்டைச் சுற்றிவளைத்தனர்.

பொலிஸார் சுற்றிவளைத்ததை அறிந்த சந்தேகநபர் தப்பிக்க முயற்சித்த வேளை கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து வாள்கள் இரண்டு, முகமூடிக் கப்புகள் மூன்றும் கைப்பற்றப்பட்டன. சாவகச்சேரி, சுன்னாகம் பொலிஸ் பிரிவுகளில் தலா 2 குற்றச்செயல்களிலும் மானிப்பாய் பொலிஸ் பிரிவில் 3 குற்றச்செயல்களிலும் இந்தச் சந்தேகநபருக்கு எதிராக வழக்குகள் உள்ளன. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்' என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சாவகச்சேரி பொலிஸாரால் சந்தேக நபர் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், சந்தேகநபர் கைது செய்யப்படாமல் மறைந்திருப்பதற்கு பொலிஸார் உதவினர் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதனாலேயே யாழ்ப்பாணம் சிறப்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் சாவகச்சேரி பொலிஸ் பிரிவிலுள்ள தனங்களப்புக்குச் சென்று சந்தேகநபரைக் கைது செய்து வந்தனர் என்று தெரியவருகிறது. (இ-89)

### மைத்திரி மீதான வெறுப்பு அதிகரிப்பு

## பிரதமர் என்ன கூறினாலும் எதிராகவே வாக்களிப்போம்

### ஐ.தே.க.பின்வரிசை எம்.பிக்கள் உறுதி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரும்பாத போதிலும் இடம்பெறும் விடயங்களை எம்மால் பொறுமையாக பார்த்திருக்க முடியாது எனவும், ஜனாதிபதிக்குரிய அமைச்சுக்களுக்கான வரவு-செலவுத் திட்ட பிரேரணைக்கு ஐ.தே.க. பின்வரிசை எம்.பிக்கள் எதிராக வாக்களிக்கவுள்ளதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தின் பின்னர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் 10 அல்லது 15 பேர் இணைந்து ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கவே நாம் தீர்மானித்திருந்தோம்.

இப்போது அந்த எண்ணிக்கை 50 ஐயும் தாண்டியுள்ளது. சில அமைச்சர்களும் எம்முடன் இணைந்து கொண்டுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பார். இருப்பினும், ஜனாதிபதியின் அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை எம்மால் இனியும் பார்த்திருக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதற்கு சந்திரிகா முழுமையான ஒத்துழைப்பு!

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதாக இருந்தால் தான் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

களனி பிந்துனுவெவ பிரதேசத்தில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு முதலில் யோசனை கொண்டு வந்தது தான் என்றும் சந்திரிகா தெரிவித்தார்.

அதேவேளை இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் வறுமையை ஒழிப்பதற்காக பல யோசனைகள் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

### இயலரசன், வியாஸ்காந்தின் 'வீரியமான' பந்துவீச்சு மத்தியில்

# விண்ணைத் தொட்ட டினோசனின் அரைச்சதம்

- சரிவின் பின் மீண்டெழுந்தது சென்.ஜோன்ஸ்
- யாழ்.மத்திய கல்லூரி அசத்தல் ஆரம்பம்

இயலரசன், வியாஸ்காந்த் ஆகியோரின் அனல் பறந்த பந்துவீச்சுக்கு மத்தியில் தனியொருவனாக துடுப்பாட்டத்தில் தூள்கிளப்பிய தெய்வேந்திரம் டினோசன், தட்டுத்தடுமாறிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் அவர் இரண்டு ஓட்டங்களில் சதத்தை தவறவிட்டு ஏமாற்றமளித்தார்.

புனித பரியோவன் கல்லூரி என அழைக்கப்படும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் மாபெரும் போரின் 113 ஆவது பெரும் சமர் 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

நாணயச்சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அணித்தலைவர் செல்வராசா மதுசன் முதலில் தமது அணி களத்தடுப்பில் ஈடுபடும் என தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள், என்.சௌமியன், சி.தனுஜன் ஜோடி வேகமாக ஓட்டங்களை எடுக்க எத்தணித்தது.

எனினும், அதனையெல்லாம் தவிடு பொடியாக்கினார் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பந்துவீச்சாளர் கமலராசா இயலரசன். ஆரம்ப விக்கெட்டுக்கள் விழ, தொடர்ச்சியாக 5 விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து வீழ்ந்தன. 100 ஓட்டங்கள் பெறுவதே கடினமாக நிலையில் இருந்த போது, சென்.ஜோன்ஸ் அணியின் அணித்தலைவர் முர்பின் அபினாஸ் - தெய்வேந்திரம் டினோசன் ஜோடி அணிக்கு நம்பிக்கையளித்தனர்.

இருவரும் களத்தில் நிற்க அணியின் ஓட்டம் அதிகரித்தது. அபினாஸ் 24 ஓட்டங்களுடன் வெளியேறினார். அதன் பின்னர் களம் நுழைந்தவர்களும் அதிகநேரம் தாக்குப் பிடிக்க முடியாமல் திணறினர். எனினும், இறுதி இரண்டு துடுப்பாட்ட வீரர்களையும் துணையாக வைத்து, டினோசன் வேகமாக ஓட்டங்கள் கடந்து அரைச்சதமும் கடந்தார்.

டினோசன் 98 ஓட்டங்களைப் பெற்ற போது, விஜயகாந்த் விஜஸ்காந்தின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் ராஜ் கிளினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அத்துடன் சென்.ஜோன்ஸ் அணியின் இன்னிங்ஸூம் முடிவுக்கு வந்தது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 46.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சார்பாக கமலராசா இயலரசன் 15 ஓவர்கள் பந்துவீசி 54 ஓட்டங்களுக்கு 5, விஜயகாந்த் விஜஸ்காந்த் 11.5 ஓவர்கள் பந்துவீசி 43 ஓட்டங்களுக்கு 3, கே.பிரவீன் ராஜ், செ.மதுசன் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு முதல் பந்திலேயே விக்கெட் சரிந்தது. மத்தியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சிறிதரன் சாரங்கன், டினோசனின் பந்துவீச்சில் வெளியேறினார்.

அதன் பிறகு மத்திய கல்லூரி, மிக மெதுவாகத் துடுப்பெடுத்தாடியது. நிலைத்து நிற்பதற்கு எத்தணித்த பாலரூபன் சிந்துஜனை (15), டினோசன் வெளியேற்றினார்.

இந்நிலையில் நேற்றைய முதல்நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த போது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 31 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களை எடுத்திருந்தது.

கமலராசா இயலரசன் 25, அன்ரனி டயஸ் ஜெயதர்சன் 8 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

போட்டியின் 2ஆம் நாளாட்டம் இன்றாகும். (26)



கிண்ணஅறிமுக நிகழ்வின் போது இரு கல்லூரி அணித் தலைவர்களும்



அரைச்சதம் அடித்து தூள் கிளப்பிய சென்.ஜோன்ஸ் கல்லூரியின் டினோஸன் பந்தொன்றை விளாசும்போது...



5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி சென்.ஜோன்ஸின் துடுப்பாட்டத்துக்கு முட்டுக்கட்டை போட்ட இயலரசன் பந்துவீசியபோது...



வீரர்களுக்கு உற்சாகமூட்டும் இந்நாள், முன்னாள் மாணவர்கள்

### ஆட்டத்தின் போதான காட்சிகள்



வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்



ஆட்டத்தை பார்வையிடும் யாழ். மேயர்




வீரர்கள் அறிமுகத்தின்போது...



படங்கள்: சிவசாந்தன்

## ஆசிய கிண்ண றோல் போல் போட்டி

## கிளி., உருத்திரபுர மாணவிகள் சாதனை



கிளிநொச்சி உருத்திரபுரத்தை சேர்ந்த செல்வி தினகராசா சோபிகா, செல்வி நடராசா வினுசா என்பவர்கள் தேசிய றோல் போல் அணியில் தெரிவாகி இந்தியாவில் இடம்பெற்ற (21.02.2019 தொடக்கம் 24.02.2019 வரை) ஆசிய கிண்ண போட்டியில் விளையாடி கிளிநொச்சிக்கு மட்டுமல்ல இலங்கைக்கே பெருமையை தேடிக் கொடுத்துள்ளனர்.

இப் போட்டித் தொடரில் இலங்கை அணி மூன்றாம் இடத்தையும் நடராசா வினுசா என்பவர் சிறந்த பந்து காப்பாளர் என்ற விருதையும் பெற்றுக் கொண்டனர்.

இவர்களையும் இவர்களை பயிற்றுவித்த கிளிநொச்சியை சேர்ந்த திரு. விக்ரர் சுவாம் பிள்ளையையும் கிளிநொச்சி மாவட்டம் சார்பாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு சுந்தரம் அருமைநாயகம் பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் குமாரசாமி சங்கீர்த்தனன்

பிறப்பு 1993 05 31



இறப்பு 2009 03 08

ஆண்டு பத்து ஆனதடா சங்கீர்த்தனா ஆண் சிங்கமாய் இருந்திருப்பாய்
அருகில் நீ இருந்திருந்தால் ஆறுதல் நாம் பெற்றிருப்போம்

பொறுப்பற்ற காலனவன் ஏவிவிட்ட எறிகணையால் மடிந்தாயோ
எம்முன்னே துடிதுடித்து எம் உயிரும் தளர்கிறது இன்று

முதுமையிலே எமைச் சுமக்கும் முதிர்ந்தவனாய் இருந்திருப்பாய்
முந்திச் செல்லும் காலமது எமக்கு முதுமையினைத் தந்ததுவே

பத்தாண்டு சென்றாலும் உன்னை பெத்த வயிறும் வலிக்கிறது
சுமந்த தோளும் கனக்கிறது உத்தமனே மீண்டும் வருவாயா

(7761)

2 ஆம் வட்டாரம்,
கோம்பாவில், புதுக்குடியிருப்பு.

குமாரசாமி குடும்பத்தினர்.
077 552 8816


# ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக பணி யில் இருந்து ஓய்வுபெற்ற கல்வியாளர்களை ஒன்றிணைத்து தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் எதிர்கொள் ளும் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கல்வியியல், சூழலியல் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து அவற்றை மேம்படுத்துவதற்காகக் குரல் கொடுப்பதற்கென பணி நிறை பல்கலைக்கழகக் கல்வியா ளர் ஒன்றியம் என்ற அமைப்பினை ஏற்படுத்துவதற்கான ஆர ம்ப ஆலோசனைக் கூட்டம்நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற வுள்ளது.

மேற்படி கூட்டம் யாழ்ப் பாணம் இலக்கம் 121 இர ண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சிந்தனைக் கூடம் கேட்போர் கூடத்தில் காலை 9 மணிமுதல் நண் பகல் 12 மணிவரை இடம் பெறும். பொருத்தமான உறுப் பினர்கள் நிகழ்விற்கு வருகை தந்து கலந்துரையாடி ஆலோ சனை வழங்கும்படி அமைப் பாளர் பேரா சிரியர் இரா. சிவ சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (5)


பழைமை வாய்ந்த

# ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


# திறந்த பல்கலைக்கழகத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத் துவ இள மாணி பட்டக் கற்கை நெறிக்குரிய (Bachelor of Management of Studies Degree Programme) 2019-2020 ஆம் ஆண்டிற்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன. விண் ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஏதாவது ஒரு துறையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்ப தாரிகள் www. ou.ac.lk என்ற இணையத் தள முகவரி ஊடாக 24 ஆம் திகதிக்கு முன்னராக விண் ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறி வித்துள்ளார்.

மேலதிக விபரங்களை யாழ்ப்பாண பிராந் திய நிலையத்திற்கு வருகை தரு வதன் மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமென மேலும் தெரிவித்துள்ளார். (5)

# சட்டவிரோத மதுபானம் குறித்து தகவல் வழங்க விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

(கொழும்பு)

சட்டவிரோத மதுபானம் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு மூன்று தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் பணிப்புரையின் கீழ் பொலிஸ்மா அதிபரால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, சட்டவிரோத மதுபானம் தொடர்பான தகவல் அறிந்தோர் 011 302 4820, 011 302 4848, 011 302 4850 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொண்டு அறிவிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## தொழில்நுட்பப்பீடச் சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல்

சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்கான பொறியிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல்நகர் பொது நிர்வாகக்கிளையில் 22.03.2019 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா இரண்டாயிரமும் (2000.00). மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா ஐந்நூறும் (500.00) தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கணக்கு இலக்கம் 162-1001-60000-880 இற்குச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை அறிவியல்நகர் பொது நிர்வாகக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில்நுட்பப்பீடச் சிற்றுண்டிச்சாலைக்கான விண்ணப்பப் படிவம்" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல் நகரில் அமைந்துள்ள பொது நிர்வாகக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம்: 021 206 0180.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
07.03.2019

(சி-5713)




# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 06.02.2019 அன்று
இறைபதமடைந்த எமது
அன்புத் தெய்வம்

அமரர் சின்னத்துரை பத்மநாதன்
(நாதன் சவுண்ஸ்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 08.03.2019 வெள்ளிக்கிழமை காலை 5 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(7740)

எள்ளங்குளம், நாச்சிமார் கோவிலடி,
கரணவாய் வடக்கு.

குடும்பத்தினர்.


# இராசி பலன்

**மீனம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசனசுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், ஆன்றோர் சந்திப்புண்டு.

**மேடம்:** தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சயன சுகக் குறைவான நாள்.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்:** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், அரசு வழியில் எதிர்பார்ப்புக்கள் கைகூடும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.

கிரகநிலை: சந் | செவ் | ராகு | சூரி, புத. | சுக் | சனி கேது | குரு

சந்திராஷ்டமம் பூரம், உத்தரம்

08.03.2019
மாசி 24, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
துதியை பின்னிரவு 1.07 மணிவரை
உத்தரட்டாதி முன்னிரவு 10.53 மணிவரை
சுபநேரம் 6.24-7.54 மணிவரை
இராகுகாலம் 10.54-12.24 மணிவரை
சர்வதேச மகளிர் தினம், சித்தாமிர்தம்

வளவன்

**தனுசு:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:** ஒளிமயமான எதிர்காலம் அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வார்த்தைகளில் நிதானம் தேவை, தேவையற்ற குழப்பங்கள் தோன்றி மறையும்.

**துலாம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போட்டிகளைச் சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

**கன்னி:** பொறுமையால் பெருமை சேரும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

## இலங்கை அரசு மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க

# மேலும் 2 வருட கால அவகாசம் வழங்கி தமிழ் மக்களை ஏமாற்ற வேண்டாம்!

## அரசியல் அறமற்றோருக்கு குருபரன் இடித்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் நடைபெறும் 40 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கம் மீது சுமத்தப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க 2 வருட கால அவகாசத்தை வழங்கி தமிழ் மக்களை ஏமாற்றுபவர்கள் அரசியல் அறம் அற்றவர்கள் என யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் சட்டத்துறைத் தலைவருமான கே.குருபரன் தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற "ஜெனிவாவும் ஈழத்தமிழர்களின் மனிதவுரிமை நகர்வும்'' என்ற தொனிப்பொருளிலான கருத்தமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை ஐ.நா. மனித உரிமை பேரவையில் இருந்து அமெரிக்கா வெளியேறிய நிலையில் பிரித்தானியா, கனடா, ஜேர்மனி உள்ளிட்ட 5 நாடுகளும் இலங்கையுடன் மிக நட்புறவான ஓர் நாடும் இணைந்து ஐ.நாவில் இலங்கை பொறுப்புக்கூறல் விவகாரத்தை வற்புறுத்தும் நகல் பிரேரணையை தயாரித்துள்ளன.

ஐ.நா.மனித உரிமைப் பேரவையால் வெளியிடப்பட்ட நகல் பிரேரணையின் அநேகமான முகவுரைப் பந்திகள் இலங்கை அரசாங்கத்தை புகழ்பாடும் வகையிலேயே அமைந்துள்ளன.

7 ஆம் முகவுரைப் பந்தி இலங்கை அரசாங்கத்தில்' கடந்த வருடம் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலையின் போது ஜனநாயகத்தை நிலைநாட்டியமைக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

8 ஆம் பந்தியில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தை அமைத்தமை, 9 ஆம் பந்தி ஐ.நா.அலுவலர்களை இலங்கைக்குள் அனுமதித்தமை, 10 ஆம் பந்தி சில தனியார் காணிகளை விடுவித்தமை, 11 ஆம் பந்தி இழப்பீடு தொடர்பான அலுவலகத்தை அமைத்து உண்மை, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நகல் வடிவத்தை தயாரித்தமை இவ்வாறு இம்முறை இலங்கை அரசாங்கத்திற்கு பாராட்டுப் பத்திரங்களே அதிகமாக குவிந்துள்ளன.

அரசின் கடந்த இரண்டு வருட கால மனிதவுரிமைகள் முன்னேற்றம் இலங்கை தொடர்பில் ஐ.நா.மனித உரிமை பேரவையில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் உரையாற்றவுள்ள நிலையில் இலங்கை அரசாங்கமோ நேரடியாக கால அவகாசம் வழங்க வேண்டுமென கோரிக்கை முன்வைக்கவில்லை.

இவ்வாறிருக்க இலங்கை அரசாங்கத்திற்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கக் கோரியவர்கள் யார்? என்ற கேள்விக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் விடையளிக்க வேண்டுமெனக் கேட்டார்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனத் தம்மை அடையாளப்படுத்த நினைப்பவர்கள் வெளிநாடுகளின் தாராளவாத அரசியல் ஒழுங்கின் கீழ் செயற்படும் வரை இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசத்தை வழங்கியே ஆக வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் யுத்தக் குற்ற விசாரணை தொடர்பில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இலங்கையில் அனுமதியில்லை எனத் தெளிவாகக் கூறிவிட்டார்கள்.

இந்நிலையில் இரண்டு வருட கால அவகாசத்தை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கியோரும் அதனை மறைமுகமாக ஆதரித்தோரும் எவ்வாறு இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பில் நீதியான விசாரணையை கோர முடியும்.

எனவே ஐ.நா.மனித உரிமை பேரவையின் மூலம் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைத்துவிடும் என்று ஆசைவார்த்தை கூறுபவர்கள் இனியும் தமிழ் மக்களை ஏமாற்ற வேண்டாம்.

முடிந்தால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஏற்படுத்தியதன் நோக்கம் அதன் செயற்பாடுகளை பின்பற்றி இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்துங்கள் எனக் கோரிக்கை விடுத்தார். (இ-10)




## மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி சனசமூக நிலையமும் கிராம அபிவிருத்திச்சங்கமும்இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தினம் இன்று 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் சனசமூக நிலையக் கட்டடத்தில் யாழ்.மாநகர சபை உறுப்பினர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் (ஜே.பி) தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு சர்வதேச மகளிர் அமைப்பின் பிரதிநிதியும் உழைக்கும் மகளிர் அமைப்பின் தலைவியுமான திருமதி.பத்மநாதன் மிதுலா, சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச சபை உறுப்பினர் இ.மயில்வாகனம், யாழ்.மாநகர சபை உறுப்பினர் எம்.எம்.எம். நிபாகீர், கௌரவ விருந்தினராக ஜே/83 கிராம உத்தியோகத்தர் திருமதி. கோபிசாலினி ஆகியோர் கலந்து கொள்வர். (5)

## விழிப்புக்குழு தெரிவு



(அராலி)

சுழிபுரம் பாண்டவட்டையில் (ஜே-174) நேற்று முன்தினம் புதன்கிழமை விழிப்புக்குழு தெரிவு செய்யப்பட்டது. போதைப்பொருட்களை ஒழிக்கவும் திருட்டு மற்றும் வன்முறை சம்பவங்களை தடுப்பதற்காக குறித்த குழு உருவாக்கப்பட்டது. இதில் வட்டுக்கோட்டை பொலிஸ் அதிகாரிகள், கிராம மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (5-104)

## முன் கற்கை மதிப்பீடு (RPL சான்றிதழ்)

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் (NAITA) NVQ (வாழ் தொழில் தகைமை சான்றிதழ் RPL (முன் அனுபவம்) முறையில் பெறுவதற்கான பரீட்சைகள் இலவசமாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கான விண்ணப்பங்களை இல.44,சோமசுந்தரம் அவன்யூ, சுண்டுக்குழியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்று 22 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாவட்ட முகாமையாளர் கே.கிருஷ்ணபாலன் கேட்டுக்கொண்டுள்ளார். (5)

## மாமனிதர் சிவநேசனின் 11 ஆம் ஆண்டு நினைவு



மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 11ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு நேற்று முன்தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் பிரிந்தா தலைமையில் நடைபெற்றது.

நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் சுடரேற்றி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

2008-03-06 அன்று கொழும்பிலிருந்து முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோது கண்டிவீதியில் மாங்குளம் பிரதேசத்திலுள்ள கொல்லர் புளியங்குளம் பகுதியில் வைத்து பேரினவாத படைகளின் ஆழ ஊடுருவும் அணியினரால் கிளைமோர் தாக்குதல் மூலம் மாமனிதர் கிட்டினன் சிவநேசன் படுகொலை செய்யப்பட்டார்.

அந்த சம்பவத்தில் அவரும் அவரது சாரதியும் உயிரிழந்தனர்.

சிவநேசனின் மறைவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரன் மாமனிதர் விருது வழங்கி கௌரவித்திருந்தார். (5-7)



யா/புத்தூர் மடிஹ பஞ்சசீஹ வித்தியா தின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆளுநா அலுவலக மக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர் க.செவ்வேள் கலந்து கொண்டார்.

# மந்திகை வைத்தியசாலையை தரமுயர்த்த பொதுமக்கள் கோரிக்கை

வடமராட்சி பிரதேசத்தில் வாழும் 3 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு நீண்ட காலமாக சேவையினை குறைந்த வளங்களோடு வழங்கி வருகின்ற மந் திகை ஆதார வைத்தியசா லையை மாவட்ட வைத்திய சாலையாகத் தரமுயர்த்த வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மந்திகை ஆதார வைத்தியசாலையின் மேலதிகமான உட்கட்டுமானங்களை அதிகரித்து சிறந்த வைத் திய சுகாதார சேவையை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்க ஜன் இராமநாதன் கடந்த மாதம் 26 ஆம் திகதி வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார். வைத்தியர்கள், துறை சார் அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலை நிர்வா கத்தினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் மக்களால் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டன.

மாகாண ஒதுக்கீடுகள் குறைவாகக் காணப்படுகின்றன. வெளிநோயாளர் பிரிவு, மருத்துவ ஆய்வுகூட வசதிகள், விபத்து பிரிவுகளுக்கான சத்திர சிகிச்சை வசதிகள் போன்றவற்றை விஸ்தரித்து வழங்குவதன் மூலம் வைத்திய சேவைகளை வடமராட்சியிலேயே நிறைவு செய்யக்கூடியதாகக் காணப்படும். 24 மணி நேர சேவையுடன் விடுதி வசதிகளும் ஏற்படுத்தித்தர வேண்டும் எனவும் கழிவறை, குளியலறை,நோயாளர் தங்கும் விடுதிகள் சீர் செய்யப்படுவதில்லை. இத னால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.


எனவே வைத்தியசாலையில் நிலவும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை சீர் செய்து பூர்த்தி செய்து தர வேண்டுமென பொதுழக்களால் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. (5-10)

## பெயர் மாற்றம்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு உடையார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா சுதர்சினி ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் தியாகராசா சுதர்ஜினி என தவறுதலாகப் பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் தியாகராசா சுதர்சினி என்ற பெயரைப் பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
தியாகராசா சுதர்சினி

(7089)




புளியம்பொக்கணை

## நாகதம்பிரான் ஆலய

## வர்த்தக நிலையங்களுக்கான ஏலம் விடுதல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 21.03.2019ம் திகதி நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவ காலங்களில் வியாபாரம் செய்கின்ற வர்த்தகர் களுக்கான 'கடை ஏலம் விடுதல்' எதிர்வரும் 10.03.2019ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும் என்பதை வியாபாரம் செய்ய ஆர்வமுள்ள வர்த்தகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு:
- ஏலத்தின்போது முழுத்தொகையும் செலுத்தப்படல் வேண்டும்.
- பொலித்தீன் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

வீ. இராமநாதன்
தலைவர்

தி.பிரபாகரன்
செயலாளர்

(C-5707)




## கச்சேரி நல்லூர் வீதி பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம்

விளம்பி வருஷம் – 2019

கொடியேற்றம் :- 09.03.2019 சனிக்கிழமை
காலை 9.00 மணி

சப்பைரதம் : - 21.03.2019 வியாழக்கிழமை
மாலை 6.00 மணி

ரதம் (தேர்) :- 22.03.2019 வெள்ளிக்கிழமை
காலை 8.00 மணி

தீர்த்தம் :- 23.03.2019 சனிக்கிழமை
காலை 9.30 மணி

பூங்காவனம் :- 24.03.2019 ஞாயிற்றுக்கிழமை
மாலை 5.00 மணி

கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆலய பரிபாலன சபை.

மஹோற்சவ காலத்தில் தினமும் நண்பகல் 12.00 மணிக்கு அன்னதானம் நடைபெறும்.

(சி-5704)

சுபம்

## மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்




இமையாணன் வடக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த

### திரு.பாஸ்கரன் குருபரன்

அவர்கள்

2017 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை (SLAS) திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து **தேசிய மட்டத்தில் முதலாவதாக** தேர்வு செய்யப்பட்டு எமது ஊருக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

05.03.2019 அன்று இலங்கை நிர்வாக சேவை நியமனத்தைப் பெற்ற எமது கிராமத்தின் மைந்தன் **குருபரனை** வாழ்த்துவதோடு எதிர்காலத்தில் நிர்வாகத்தில் மேலும் பல பதவி நிலைகளை அலங்கரித்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டி

**மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

(சி-5712)

ஊர்மக்கள், ஜோதி சனசமூக நிலையம்,
இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி.

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:பரணி 3
கி.பா: 31 ½ செவ் 7 இல்
உயரம்: 5’6”
தகைமை/தொழில்:A/L, சொந்த தொழில்
எதிர்பார்ப்பு:O/L, உள்நாடு
தொ.இ: B/9414

பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: திருவோணம் 2செவ் 12 இல்
உயரம்: 6’2”
தகைமை/தொழில்:O/L, Netharland
எதிர்பார்ப்பு: O/L, உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/9417

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி 2
கி.பா: 21 உயரம்: 5’8”
தகைமை/தொழில்:B.Com, BBA,AAT, Auditor, அரசதொழில்
எதிர்பார்ப்பு: அரசதொழில், சைவ, அசைவபோசனம் விரும்பத்தக்கது, உள்நாடு
தொ.இ: B/9418

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா: 33 உயரம்: 169cm
தகைமை/தொழில்: BBA, அரச கணக்காளர்
எதிர்பார்ப்பு: அரசதொழில், உள்நாடு
தொ.இ: B/9419

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை 4
சூரிசெவ் 12 இல்
c a uk; 5'6”
தகைமை/தொழில்:MBBS Doctor
எதிர்பார்ப்பு: உள்நாடு
தொ.இ: G/9425

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:அவிட்டம் 3
கி.பா: 40.5 உயரம்: 5’6”
தகைமை/தொழில்:MBA Reading, பட்டதாரி அரச அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச நிரந்தர தொழில், சைவ, அசைவபோசனம் விரும்பத்தக்கது, உள்நாடு
தொ.இ: G/9426

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: மகம்
தகைமை/தொழில்:College of Education (Student)
எதிர்பார்ப்பு: அரசதொழில், உள்நாடு, வெளிநாடு
தொ.இ: G/9427

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:அத்தம் 1
கி.பா: 35செவ் 12 இல்
உயரம்: 5’2”
தகைமை/தொழில்:B.Sc, M.Sc, அரச அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வங்கி மனைவியை இழந்தவர்கள், விவாகரத்தானவர்கள் விரும்பத்தக்கது
தொ.இ: G/9428

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சர்வதேச மகளிர் தினம் இன்று

வீட்டுக்குள்ளேயே முடங்கி இருந்த பெண்கள் தற்போது வெளி உலகத்தைக் காண்கின்றனர் என்றால் அதற்கு வித்திட்ட பல்வேறு போராட்டங்களின் வெற்றியே காரணமாகும். 1920 ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் செயின்ட் பீட்டர்ஸ் நகரில் நடந்த பெண்களின் போராட்டத்தில் கலந்து கொண்ட ரஷ்யாவின் அலெக்ஸ்சான்டிரா கெலஸ்ரா ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச பெண்கள் தினம் கொண்டாட வேண்டும் என பிரகடனம் செய்தார். பெண்ணின் மகத்துவத்தினை உலகிற்கு பறைசாற்றும் வகையில் இந்தப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்ட ஐக்கிய நாடுகள் சபை 1921 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச பெண்கள் தினத்தை கடைப்பிடிக்க வேண்டும் என தீர்மானத்தை நிறைவேற்றியது. அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச பெண்கள் தினம் (Internatinal Womens Day) கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறாக பல்வேறுபட்ட போராட்டங்களின் வெற்றியின் மத்தியில் வருடத்தில் ஒரு நாள் மட்டும் பெண்கள் தினத்தில் பெண்களை தாயாக மதிப்போம், பெண்களை போற்றுவோம் என கோஷம் போட்டு விட்டு மற்றைய நாட்களில் எல்லாம் பெண்கள் மீது வன்முறையை செலுத்துவது என்றாகிவிட்ட சூழலில் பெண்கள் தினம் என்பதே ஒரு சம்பிரதாயத்திற்காகத்தான் கடைப்பிடிக்கப்படுகின்றதோ எனத் தோன்றுகிறது.

வீடும், சமூகமும் நாடும் உலகமும் முன்னேறுவது என்றால் இன்றைய பெண்களினால் தான் இவ்வாறாக தன்னையும் உறவையும் ஊரையும் முன்னேற்றுவதற்கு பெண்கள் போராடிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். பெண் எங்கு போற்றப்படுகின்றாளோ மதிக்கப்படு கின்றாளோ அங்கேதான் வளர்ச்சியும் முன் னேற்றமும் இருக்கும். சமூக வளர்ச்சிகளில் மட்டுமல்லாமல் இலக்கியத்தினதும் கவிதையினதும் கதையினதும் கருப்பொருளே பெண்களேதான் என்பதை உலகமே அறியும். "ஆணுக்கு பெண் இளைப்பில்லை காண்" என்றார் பாரதியார். எனவே பெண்களுக்கு கொடுக்கப்படும் சுதந்திரம் இயல்பாக இருக்க வேண்டுமே தவிர போராடி பெறுவதாக இருக்கக் கூடாது.

பெண்களின் உடல் நலம் என்பது நாட்டின் பலம். நல்ல சத்துள்ள உணவுகளைச் சாப்பிட்டு நல்ல ஆரோக்கியத்துடன் இவர்கள் வளர்ந்தால்தான் நல்ல ஆரோக்கியமான குழந்தைகளை நாட்டிற்கு அளிக்க முடியும். ஆனால் இதற்கான சூழ்நிலைகள் இன்றையகால பெண் குழந்தைகளுக்கு இல்லை. காரணம் காலை 6 மணிக்கு எல்லாம் சாப்பிட்டும் சாப்பிடாமலும் பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்து நின்று பேருந்து நெரிசலில் சிக்கி பாடசாலையில் கல்வி கற்கச் செல்கின்றனர். அதற்குப் பிறகு தனியார் கல்வி நிலைய வகுப்பு என கல்வி கற்றுவிட்டு வீடு திரும்ப 7 மணி ஆகிவிடுகின்றது. கல்விக்கான இந்தப் போராட்டம் 5 ஆம் ஆண்டிலேயே ஆரம்பமாகி விடுகின்றது. இந்த பருவத்தில் தான் பெண் குழந்தைகளை பேணி வளர்க்க வேண்டும்.



குறிப்பிட்ட சில வருடங்களுக்கு முன் இளம் பெண்களை எதிர்காலத் தாயாகப் பார்த்தார்கள். ஆனால் இன்று பெண்களை மாணவிகளாக படிக்கும் இயந்திரங்களாகவே பார்க்கின்றோம். பெண்கள் மாணவியாக, மனைவியாக, தாயாக, நல்ல ஊழியராக பல அவதாரங்கள் எடுத்து குடும்பத்தின் வளர்ச்சிக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்டாலும் அவர்களை தொல்லைகள் துரத்திக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த நிலை மாறி இளம் பெண்கள் ஆரோக்கியமாக வளர வேண்டுமெனில் சில மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும்.

இன்று பல மாணவர்கள் கல்விக்காக நகரங்களையே தேடிச் செல்கின்றனர். காரணம் கிராமப் புறங்களில் போதுமான கல்விக்கான வசதி இல்லாமையே காரணம். இந்த நிலையைப் போக்கி நகரப் புறங்களில் கிடைப்பதைப் போன்ற கல்வி கிராமப் புறங்களிலும் கிடைக்க வழி செய்ய வேண்டும். இவ்வாறு கிடைப்பதால் மாணவர்களின் ஆரோக்கியம் பேணப்படும். மேலும் பேருந்து பயணங்களுக்காக செலவிடும் நேரம் கல்வி கற்பதற்கான நேரமாக மாற்றம் பெறும். வீண் அலைச்சல் தவிர்க்கப்படுவதால் சக்தி சேமிக்கப்படுவதோடு வீட்டில் பெற்றோர் கவனிப்பில் நல்ல உணவை உட்கொள்ள வாய்ப்பு கிடைக்கும். இவற்றை மேலோட்டமாகப் பார்க்காமல் ஆழ்ந்து சிந்தித்தால் அடுத்த தலைமுறை காக்கப்படும்.

அரசாங்கம் கல்விக்காக பல இலவச திட்டங்களை அறிமுகப்படுத்தி பல மாணவர்கள் நன்மையடையும் வகையில் நடைமுறைப்படுத்தி வருகின்றது. குறிப்பாக இலவச சீருடை, இலவசப் புத்தகம், இலவச மதிய உணவு இந்த வரிசையில் பெண் பிள்ளைகள் மாதவிடாய் காலத்தில் பயன்படுத்துவதற்கு நப்பீன்களை இலவசமாக வழங்குவதன் மூலம் பெண் பிள்ளைகள் பல அசௌகரிய சூழலில் இருந்து தம்மை மேலும் பாதுகாத்துக் கொள்வார்கள்.

இன்றைய கால கட்டத்தில் பெண்கள் பணிபுரியாத துறைகளே இல்லை. ஏன் நம் நாட்டின் முதலாவது பெண் பிரதமராக பதவியேற்ற திருமதி. சிறிமாவோ பண்டார நாயக்கா உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற வரலாற்றுப் பெயரையும் பெற்றார். பொதுவாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பெண்களின் நிலை கேள்விக்குறியாக இருந்தாலும் எமது நாட்டைப் பொறுத்த வரை ஒரு குறிப்பிடத்தக்கசிறந்த நிலையை அடைந்துள்ளார்கள் என்பதை காணக்கூடியதாக உள்ளது. ஆனால் தனியார்துறை வேலைக்குச் செல்லும் பெண்கள் நிலையைஎடுத்துக் கொண்டால் தான் பரிதாப நிலை தோன்றுகின்றது. குடும்பம், குழந்தைகள், கணவன்மார்கள், பெரியவர்கள் என எல்லாவற்றையும் தியாகம் செய்து வேலை செய்ய வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

காலை 8 மணி முதல் இரவு 7 மணிவரை தொடர்ந்து வேலை செய்துவிட்டு வரும் பெண்கள் குடும்பத்தைப் பார்ப்பது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அதிலும் நமது பண்டிகைகள் ஒவ்வொன்றும் ஒரு தனித்துவம் கொண்டது. தனியார் துறைகளில் வேலை செய்யும் பெண்களுக்கு பண்டிகைகள் பற்றி சிந்திப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. அத்தோடு உறவினர்களது சுபகாரியங்கள் மற்றும் வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்குக்கூட சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகி குடும்பமும் மன உளைச்சல் பெறுகின்றது என்பது கசப்பான வேதனை. இதனை நிவர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்றுவரை பெண்களை வர்ணிக்காத கவிஞர்களே இல்லை என நாம் பெருமை கொள்கின்றோம். பெண்களை வர்ணித்தால் மட்டும் போதாது.

பெண்களுக்கு சுதந்திரமான சூழல் அமைத்துக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் பெண்கள் கல்வி கற்கவும், வேலை செய்யவும் படைக்கவும் எந்தச் சூழலையும் எதிர்கொள்ளும் ஆற்றலும் வலிமையும் பெற்று விட்டார்கள்.

எனவே பெண்களை மதிப்பவராக பெண்களை இழிவு செய்யாதவராக எந்தச்சூழலிலும்பெண்ணுக்கு பாலியல் துன்புறுத்தல் தராதவராக மற்றும் காதல் என்ற பெயரில் பெண்கள் மீது வன்முறை நிகழ்த்தாதவராக இருக்க வேண்டிய கடமை அனைவருக்கும் இருக்கின்றது. எனவே இன்றைய பெண்கள் தினத்தில் பாதுகாப்பான பெண் சமுதாயத்திற்கான உறுதிமொழியை அனைவரும் ஏற்போமாக.

கு.சுகிர்தன்

## அன்பு நிறை மானிடத்தி...!

குடும்பத்தின் குல விளக்காய்
குலப்பெருமை காத்திடுவாள்...!
இடும்பைகள் சூழ்ந்த போதும்
இல்லத்தை மகிழ்விப்பாள்...

மனைவியாய்க் கரம் பிடித்து
மரணம் வரை துணையிருப்பாள்...!
உயிர்ச்செல்வம் தனையீன்று...
உயர்வாக்கி உலகுக்களிப்பாள்...!

மகளாக மடி வந்து..
மங்காத சுகம் சேர்ப்பாள்...
மனதெல்லாம் நிறைந்திருந்து...
மலராக மணம் சேர்ப்பாள்...

அகம் நிறைந்த அன்பைச் சுமந்து...
முகம் நிறைந்த முறுவலுடன்...
அறிவு நிறை அமைச்சைப் போல
அகத்தைச் சுகமாய் ஆக்கி வைக்கும்
அன்பு நிறை மானிடத்தி...!
அறிவுலகில் அவளுசக்தி...!

ஜெ.நந்தினி,
உஷன்







கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் "யாழ்ப்பாணப் பொது நூலகம் அன்றும் இன்றும்" நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் வரவேற்புரையையும் தொகுப்புரையையும் முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர் தங்க. முகுந்தன் நிகழ்த்தினார். அரச கருமமொழிகளின் ஆணைக்குழுத் தலைவரும் பேராசிரியருமான சோ.சந்திரசேகரம் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் மருத்துவர் காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன் நூல் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். நூலின் முதற்பிரதி திருமதி. சிவானந்தினி துரைசுவாமிக்கு வழங்கப்பட்டது.

# வரவு - செலவுத் திட்டம் மக்களுக்கு மாயமான்

## டக்ளஸ் எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

உறவுகளை காணாமல் ஆக்கப்பட்டவர்களாக தொலைத்துவிட்டு அவர்களுக்காக தெருக்களில் அமர்ந்து நீதிகேட்டுப் போராடிக் கொண்டு இருக்கும் தமிழ் மக்களுக்கு உதவித் தொகையாக மாதாந்தம் 6000 ரூபா கொடுப்பனவு வழங்கப்போவதாக அரசு கூறியிருப்பது அவர்களுக்குப் போதுமானதாக இருக்காது. கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இருந்தால் குறைந்தது 25,000 ரூபா மாதக் கொடுப்பனவாக வழங்கப்படவேண்டும். அத்துடன் இந்த 25,000 கொடுப்பனவானது உறவுகளை தொலைத்தகாலப் பகுதியை இன்றுவரை கணக்கிட்டு பயன்பெறக்கூடிய தொகையாக வழங்கப்படவேண்டும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா வரவு-செலவுத்திட்டம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில்



தெரிவித்துள்ளார்.

அந்தச் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, யுத்தகாலத்தில் பல சந்தர்ப்பங்களில் ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள் நடந்துள்ளன. ஆட்கள் காணாமல் போன விவகாரத்தை வெளியுலகுக்கு கொண்டுவரும் நோக்கத்துடன் ஈ.பி.டி.பியேமுதலில் காணாமல் போனோர்சங்கத்தை 1997 ஆம் ஆண்டு ஆரம்பித்தது.

நாம்காணாமல்போனோர் சங்கத்தை ஆரம்பித்ததன் நோக்கமானது, அந்தச் செய்தியை வெளியுலகுக்கு எடுத்துச் செல்வதற்கு ஊடாக காணாமல்போனவர்களைக் கண்டுபிடிப்பதும், அதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியையும், பரிகாரத்தையும் பெற்றுக்கொடுப்பதாகவுமே இருந்தது.

ஆனால் கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிகொண்ட கதையாக காணாமல் போனோர் விவகாரத்தை இன்று தவறானவர்கள் கையில் எடுத்துக்கொண்டு அதில் தமது சுயலாப அரசியலையும், பிழைப்பையும் நடத்திக்கொண்டு இருக்கின்றார்கள்.

நுண்கடன்களால் நாளாந்தம் தற்கொலை செய்துகொண்டிருக்கும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வியலை தூக்கிநிறுத்தவும், வறுமையில் வாழும் மக்களுக்கும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஆக்கபூர்வமான பரிந்துரைகள் எவையுமில்லை.

வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்களுக்கு வீடுகள் தேவையாக உள்ளன. ஆனால் சிறுபான்மை மக்களின் வாக்குகளால் ஆட்சி பீடமேறியதாகக் கூறிக்கொண்டிருக்கும் அரசாங்கமோ கடந்த நான்கு வருடங்களில் எத்தனை வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது என்ற கேள்விக்கு பூச்சியமே பதிலாகவுள்ளது.

இதேவேளை 10 இலட்சம் பெறுமதியான 15 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கப்போவதாக தெரிவித்துள்ள அரசாங்கம், புதிதாக திருமணம் முடிப்பவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் வீட்டுக்கடன் வழங்கப்போவதாகவும் தெரிவித்துள்ளது. அவ்வாறாயின் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு குடும்பங்களாக கஷ்டப்படும் குடும்பங்களுக்கான கொடுப்பனவை 10 இலட்சத்திலிருந்து இரண்டுமடங்காக அதிகரித்து வழங்கவேண்டும்.

பரிந்துரைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வரவு 2400 பில்லியனாகவும், துண்டுவிழும்தொகை 2150 பில்லியனாகவும் இருக்கையில் வடக்கில் பலதிட்டங்களை முன்மொழிந்துள்ள அரசின் வாக்குறுதிகள் மீது எமது மக்களுக்கு நம்பிக்கை இல்லை.

கிழக்கிலும் யுத்தம் நடந்தது. அங்கேயும்பெண்களைத் தலைமையாகக் கொண்ட சுமார் 30 ஆயிரம் குடும்பங்களும், அங்கவீனர்களும், மாற்றுத்திறனாளிகளும் வறுமையில் வாழ்கின்றார்கள். அங்கும் வேலைவாய்ப்புக்காக ஏங்கும் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளும் இருக்கின்றார்கள். அவர்களின் வறுமையைப் போக்கவும், வளமான எதிர்காலத்திற்காகவும் இந்த வரவு-செலவுத்திட்டத்தில் எவ்விதமான பரிந்துரைகளும் உள்ளடக்கப்படவில்லை அந்தமக்களுக்கு ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது.

சிறுபான்மை மக்களின் வாக்குகளால் ஆட்சிபீடமேறியதாக கூறிய இந்த அரசாங்கமும், அவர்களை ஆட்சி பீடமேற்றியதாகக் கூறிக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கடந்த நான்கு ஆண்டுகளாக வரவு-செலவுத் திட்டங்களாக முன்மொழிந்த ஒருதிட்டத்தையாவது இதுவரை நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை.

அரசாங்கம் என்னதான் திட்டங்களையும், முன்மொழிவுகளையும் வாக்குறுதிகளாக முன்வைத்தாலும் ஆட்சியை ஏற்படுத்தியதாகவும், ஆட்சியைப் பாதுகாப்பதாகவும் கூறிவரும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே அரசின் பரிந்துரைகள் செயல்வடிவம் பெறுவதற்கான வழிகாட்டலையும், அழுத்தங்களையும் அரசுக்கு கொடுக்கவேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்ற அக்கறையோ, ஆற்றலோ இல்லை என்பதாலேயே, தமிழ்மக்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் தீராப்பிரச்சினைகளாக தொடர்கின்றன என்றும் டக்ளஸ்தேவானந்தா மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# சம்பள அதிகரிப்பு குறித்து யாரும் குழப்பமடையத் தேவையில்லை

## அமைச்சர் மனோ தெரிவிப்பு



வழங்கிய வாக்குறுதிக்கு அமைய தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் யாரும் குழப்பமடையத் தேவையில்லை என்றும், அமைச்சரவை அனுமதியுடன், அது நிறைவேற்றப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தோட்டத் தொழிலாளர்களுக்கு நாம் மேலதிகமாக 50 ரூபா வழங்குவதாக கூறினோம். இது குறித்து நிதியமைச்சர் வரவு- செலவுத் திட்டத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.

நாம் ஓரிரு நாட்களில் அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து, அனுமதியைப் பெற்று அந்தத் தொகையைப் பெற்றுக் கொடுப்போம். இந்த விடயத்தில் யாரும் குழப்பமடையத் தேவையில்லை.

நாம்தான் இந்த மக்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும். நாம் சொன்னதைச் செய்வோம்" என அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொலை செய்யப்பட்ட வர்த்தகர்களின் பிள்ளைகளுக்கு ஜனாதிபதி நிதியுதவி

(கொழும்பு)

காலி - ரத்கமவில்கொலை செய்யப்பட்ட வர்த்தகர்கள் இருவரின் பிள்ளைகளின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிதியுதவி வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் நிதியுதவியை வழங்கினார்.

தமது பிள்ளைகளுடன் ஜனாதிபதி செயலகத்திற்கு வருகை தந்த வர்த்தகர்களின் மனைவிமார், ஜனாதிபதியைச் சந்தித்தனர்.



அவர்களின் விபரங்களை கேட்டறிந்த ஜனாதிபதி, அக்குடும்பங்களின் முன்னேற்றத்திற்காகவும் பிள்ளைகளின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்காகவும் இந்த நிதியுதவியை வழங்கினார். (இ-7)

## அரசிற்கும் சர்வதேசத்திற்கும் அழுத்தம் கொடுக்க

# கிழக்கில் 19 ஆம் திகதி இடம்பெறவுள்ள போராட்டத்திற்கு ஆதரவு வழங்குங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

இறுதிக்கட்டப் போரின் போது இராணுவத்திடம் கையளிக்கப்பட்டு மற்றும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி வடக்கு-கிழக்கெங்கும் போராட்டங்கள் இரண்டு வருடத்தை கடந்து இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அந்தவகையில் எதிர்வரும் 19 ஆம் திகதி மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக இடம்பெறவுள்ள மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் அனைத்து உறவுகளையும் கலந்து கொண்டு தங்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வை வழங்குவதற்கு அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் அழுத்தம் கொடுப்பதற்காக அனைவரும் ஒன்றிணையுமாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சியாக இரண்டு வருடங்களாக வீதியில் இருந்து போராடி வருகின்ற தமக்கு இதுவரை எந்தவொரு நீதியும் வழங்கப்படாத நிலையில் 40 ஆவது ஜெனிவா கூட்டத்தொடர் இடம்பெற்று வரும் நிலையில் ஜெனிவாவிலாவது தங்களுக்கு ஒரு தீர்வு ஒன்றை நிரந்தரமாக வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாக எதிர்வரும் 19 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

அந்தப் போராட்டத்திற்கு அனைத்துத் தரப்புக்களையும் பூரண ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2017.03.08 அன்று ஆரம்பித்த கவனயீர்ப்புப் போராட்டம் இன்று 8 ஆம் திகதி இரண்டாவது வருடத்தை கடந்து மூன்றாவது வருடத்தில் கால்பதிக் கும் இந்த வேளையிலே எட்டாம் திகதி தங்களுடைய போராட்ட இடத்தில் முற்பகல் 10 மணி முதல் 12 மணிவரை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகவும் அந்தப் போராட்டத்திற்கும் ஆதரவு வழங்குவதோடு 19 ஆம் திகதி நடைபெறும் போராட்டத்திற்கும் ஆதரவு கோரி முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தில் ஊடகச் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டு கோரிக்கை விடுத்துள்ளார். (இ-281)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 90 | 70 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 240 | 200 | 200 |
| தக்காளி | 60 | 50 | 40 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 100 | 80 | 60 |
| கோவா | 30 | 30 | 50 | 60 | 60 |
| கரட் | 120 | 90 | 90 | 80 | 120 |
| பூசணி | 50 | 30 | 40 | 30 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 65 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 70 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 85 | 55 | 80 |
| பாகற்காய் | 160 | 140 | 120 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | — | 40 | 100 |
| பயற்றங்காய் | 160 | 120 | 100 | 60 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 70 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 40 | 30 | 80 |
| கறிமிளகாய் | 140 | 140 | 100 | 75 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 400 | 300 | 400 |
| போஞ்சி | 120 | 100 | 80 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | — | 50 | 120 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 | 55 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 35 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 140 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 70 | 60 | 50 | 120 |
| முள்ளங்கி | 80 | 50 | 50 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 15 | 40 |
| வல்லாரை | 15 | 60 | 30 | 10 | 30 |
| ஈரப்பலா | 60 | — | — | 110 | 80 |

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவினால் வன்னி அறுசுவை உணவகம் திறப்பு





(குருமன்காடு)

வவுனியா நெடுங்கேணியில் வன்னி அறுசுவை உணவகம் நேற்றுக் காலை 9 மணியளவில் முன்னாள் ஜனாதிபதியும் செயலகத்தின் பணிப்பாளருமான சந்திரிகா குமாரதுங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

நெடுங்கேணி பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க செயலகத்தினால் வடக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள



வேலைத் திட்டங்கள் பற்றியும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் பொது மக்களுடன் கலந்துரையாடிய முன்னாள் ஜனாதி பதி அதன்பின்னர் உண வகத்தை திறந்து வைத் தார்.

இந்நிகழ்வில் முனனாள் மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ப.சத்தியலிங்கம், பிரதேசசபை தலைவர் இ.தணிகாசலம், அரச அதிபர் எம்.கனீபா, பிரதேச செயலர் க.பரந்தாமன், அரச அதிகாரிகள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# வடக்கில் நெசவு கைத்தொழிலை அபிவிருத்தி செய்து வேலை வாய்ப்புக்களை வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்படும்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு





(குருமன்காடு)

வடக்கில் நெசவுக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்து அதனூடாக வேலை வாய்ப்புக்களை வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க செயலகத்தின் பணிப்பாளருமான சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தின் மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா தலைமையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதியில் பலரும் இன்று பொருளாதார ரீதியாக பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். அதில் பெண்களின் நிலை அதிகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. அத்துடன் வடக்கில் வேலையில்லா பிரச்சினையும் அதிகரித்துள்ளது. இந்நிலையில் வடக்கில் நெசவுக் கைத்தொழிலை விருத்தி செய்ய இந்த அரசாங்கத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் பலர் வேலை வாய்ப்புக்களைப் பெறக் கூடியதாக இருப்பதுடன், பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும். இதனை எவ்வாறு முன்னேற்றுவது என்பது குறித்தே மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடப்பட்டது எனத் தெரிவித்தார்.

இதில் தொழில் துறைத் திணைக்களத்தின் மாவட்ட பணிப்பாளர் சிறிமோகன், தொழில் துறை திணைக்கள உத்தியோகத்தர்கள், அரச அதிகாரிகள், நெசவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (2-250)




# பாடசாலையில் தேன் கூடு; அகற்ற நிர்வாகம் நடவடிக்கை

(குருமன்காடு)

வவுனியா சாளம்பைக்குளம் அல் அக்ஷா மகா வித்தியாலயத்தில் தேன் கூடு காணப்பட்டுள்ளது. இதையடுத்து அதனை அகற்றுவதற்காக நேற்றைய தினம் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா சாளம்பைக் குளம் பகுதியிலுள்ள அல் அக்ஷா மகாவித்தியாலயத்தில் காணப்பட்ட தேன்கூடு காரணமாக பாடசாலையிலுள்ள மாணவர்களுக்கு ஆபத்து ஏற்படவாய்ப்புக்கள் காணப்படுவதாக பாடசாலையின் அதிபர் வவுனியா தெற்கு கல்வி வலயப்பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு சென்றார்.

இதையடுத்து நேற்றைய தினம் பாடசாலைக்கு விடுமுறை வழங்கி தேன் கூட்டை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிபருக்கு கல்வி வலயப் பணிப்பாளரினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் நேற்றையதினம் விடுமுறை வழங்கி வேறு ஒரு தினத்தில் பாடசாலை நடத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்து நேற்றுக்



காலை மாணவர்கள் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதுடன் பூவரசங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் மேலதிக நடவடிக்கைக்காக அதிபர் ஊடாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் கவனத்திற்குக் கொண்டு சென்ற போது தற்போது தேனீயை அகற்றுவதற்கு அனர்த்த முகாமைத்துவப்பிரிவிற்கு வசதிகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு வெளியிலிருந்து உதவி பெற்றுக்கொள்வதற்கு பாடசாலை அதற்குரிய பணம் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பாடசாலையிலிருந்து தேனீயை அகற்றுவதற்குரிய நடவடிக்கையை பாடசாலை நிர்வாகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# இலங்கைக்கான பிரித்தானிய தூதரக அதிகாரிகள் மனித புதைகுழியை பார்வை





(மன்னார்)

மன்னார் சதொச வளாகத்தில் நடைபெற்று வருகின்ற மனித புதைகுழி அகழ்வுப் பணியை பார்வையிடுவதற்காக இலங்கைக்கான பிரித்தானிய தூதரக அதிகாரிகள் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது அகழ்வுப் பணிகள் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொண்டனர். மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணிகளில் மீட்கப்பட்ட மனித எச்சங்களின் உடல்கூற்று காபன் பரிசோதனை அறிக்கையானது சட்டபூர்வமாக நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் நேற்றைய தினம் குறித்த அறிக்கையானது வெளியிடப்பட்டுள்ளது

மன்னார் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட சந்தேகத்திற்கு இடமான மனித எச்சங்கள் கடந்த மாதம் காபன் பரிசோதனைக்காக சட்ட வைத்திய அதிகாரி தலைமையில் அமெரிக்காவிலுள்ள புளோரிடாவில் உள்ள ஆய்வுகூடத்திற்கு மேலதிக ஆய்வுகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

குறித்த பரிசோதனை அறிக்கை 14 நாட்களில் கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்பட்ட போது சட்ட ரீதியாக கடந்த நாட்களில் கிடைக்கப்பெறாத நிலையில் நேற்றைய தினம் குறித்த அறிகையானது சட்ட ரீதியான ஆவணமாக மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்கு கிடைக்கப் பெற்றது.

அதேநேரத்தில் குறித்த அறிக்கை தொடர்பான எந்த விபரங்களையும் தன்னால் வழங்க முடியாது எனவும் அவ் அறிக்கை தொடர்பாக ஆ[illegible] உள்ளவர்கள் இவ்வறிக்கையை மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும் என நேற்று முன்தினம் சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்திருந்தார்.

அதை அடிப்படையாகக் கொண்டு நேற்றையதினம் குறித்த அறிக்கையை சட்டத்தரணி டினேசன் ஊடாக ஊடகவியளார் பெற்றுக் கொண்ட போதும் குறித்த மனித எச்சங்களின் ஆண்டுகளைத் துல்லியமாகப் பெற்றுக்கொள்ளும் விதமாக அவ்வறிக்கை இருக்கவில்லை. குறித்த விடயங்கள் தொடர்பான அதேநேரத்தில் குறித்த மனித புதைகுழியின் காலத்தை வெளிப்படுத்த முடியவில்லை.

குறித்த அறிக்கையின் விபரங்களை அறிவதற்கான செயற்பாடுகள் நிபுணர்குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை மனித புதைகுழியில் இருந்து 336 மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் 318 மனித எச்சங்கள் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# கிளிநொச்சி குளத்தின் எல்லைகளை வரையறை செய்து பாதுகாக்க வேண்டும்

(கண்டாவளை)

கிளிநொச்சிக் குளத்தை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.


கிளிநொச்சி நகரத்தின் மையப்பகுதியில் சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய வகையிலும் நகருக்கான நீர்த்தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அமைந்துள்ள கிளிநொச்சிக்குளத்தின் கரையோரப் பகுதிகள் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் எதிர்காலத்தில் குளம் இல்லாமல் போகின்ற நிலைமை காணப்படுவதாக பல்வேறு தரப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

அதாவது, கிளிநொச்சி கரைச்சி, கண்டாவளை, ஆகிய பகுதிகளுக்கான குடிநீரைப்பெற்றுக் கொள்வதற்கும் எதிர்காலத்தில் பூநகரி மற்றும் தட்டுவன் கொட்டிப்பகுதிக்கான குடிநீரைப்பெற்றுக்கொள்வதற்கும் பயன்படுத்துகின்ற இக் குளத்தின் இயற்கைத் தன்மையையும் குளத்தையும் பாதுகாக்க உரிய திணைங்களங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதாவது, கிளிநொச்சி குளத்தினுடைய கரையோரப்பகுதிகளின் எல்லைகளை வரையறை செய்து குளத்தைப் பாதுகாக்க வேண்டும். அத்தோடு மண் நிரவிக்காணப்படுகின்ற குளத்தினை ஆழப்படுத்தி அதன் இயற்கைச்சூழல் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2-315)

## சிலாவத்துறை கடற்படை முகாமை
# அகற்றுவதற்கு ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கப்படும்
### முசலி பிரதேச செயலக மீளாய்வுக் கூட்டத்தில் முடிவு



(மன்னார்)

சிலாவத்துறை கடற்படை முகாமை அவசரமாக அகற்றுமாறு ஜனாதிபதியிடம் அவசரமாக கோரிக்கை விடுப்பதுடன், மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளையும் எடுப்பதென அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முசலி பிரதேச செயலக மீளாய்வுக்கூட்டத்தில் ஏகமனதான முடிவெடுக்கப்பட்டது.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனுடன் அமைச்சர் றிசாத் பதியுதீன் தொலைபேசியில் தொடர்கொண்டு உரையாடினார்.

முசலி பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமாரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற மீளாய்வுக்கூட்டத்தில் முசலி பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர், முசலி பிரதேச சபை ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள், மண் மீட்பு போராட்ட பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

முன்னதாக, சிலாவத்துறை கடற்படை முன்பாக கடந்த 15 நாட்களாக மண் மீட்பு போராட்டத்தில் ஈடுபடும் முசலி பிரதேச மக்களை சந்தித்து அமைச்சர் விடயங்களை கேட்டறிந்துகொண்டார்.

அதன் பின் முசலி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மீளாய்வுக்கூட்டத்தின் போது, மண் மீட்பு போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தம்து போராட்டத்தின் நியாயங்களை எடுத்துரைத்தனர்.

தொடர்ந்தும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து எமது காணியை மீட்டுத்தர வேண்டும்.

இவ்வாறு மண் மீட்பு போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீளாய்வுக்கூட்டத்தின் போது உருக்கமான வேண்டுகோள் விடுத்தனர்.

இக்கோரிக்கைகளை கருத்திற்கு எடுத்த அமைச்சர், இது தொடர்பில் பிரதேச செயலக அதிகாரிகள், காணித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரிடம் அவசரமாக சில தகவல்களை கோரினார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் காணி அதிகாரியிடம் கேள்வியெழுப்பிய அமைச்சர் கடற்படையினருக்கு இந்த பிரதேசத்தில் எங்கே காணிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன? அல்லது வேறு ஏதாவது பொருத்தமான இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதா? என கேட்ட போது, மேத்தன் வெளியில் காணி ஒதுக்கப்பட்டதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

காணிப்பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவரும் வகையில், ஜனாதிபதியின் கவனத்திற்கு இந்த பிரச்சினையை நேரடியாக எழுத்து மூலம் கோரிக்கை விடுப்பதென மீளாய்வுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் ஊடாக ஜனாதிபதிக்கு இந்தக் கோரிக்கையை விடுப்பதெனவும் அதன் பிரதிகளை அமைச்சர் றிசாத் பதியுதீன், வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைப்பதெனவும் அங்கு முடிவு செய்யப்பட்டது. (2-285)

# மாவா போதைப்பொருளுடன் கற்குழியில் ஒருவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் கற்குழிப் பகுதியில் சட்டவிரோத மாவா போதைப் பொருட்களுடன் நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கற்குழி புகையிரதக்கடவைக்கு அருகில் மாமடுவ பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவரிடமிருந்து 820 கிராம் பொதி செய்யப்பட்ட மாவா போதைப் பொருட்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரம தலைமையின் கீழ் செயற்படும் புலனாய்வுப்பிரிவினர் வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப்பிரிவினருடன் இணைந்து மேற்கொண்ட இந்நடவடிக்கையின் போது போதைப்பொருட்கள் வியாபாரி ஒருவரிடமிருந்து மாவா போதைப் பொருட்களைப் பெற்றுக் கொண்டு சென்ற போதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250)

# தர்மலிங்கம் பிரதாபன் மன்னாரை வந்தடைந்தார்




(மன்னார்)

வவுனியாவைச் சேர்ந்த "தர்மலிங்கம் பிரதாபன்" மூன்று அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பித்துள்ள துவிச்சக்கரவண்டிப் பயணம் மன்னாரை வந்தடைந்தது.

வவுனியாவைச் சேர்ந்த தர்மலிங்கம் பிரதாபன் கடந்த மாதம் 10 ஆம் திகதி மூன்று அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா கோவில்குளம், சிவன் கோவிலிலிருந்து ஆரம்பித்த துவிச்சக்கர வண்டிப்பயணம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு மன்னார் நகரை வந்தடைந்தார்.

மன்னாரை வந்தடைந்த தர்மலிங்கம் பிரதாபன் நேற்று வியாழக்கிழமை காலை 6 மணியளவில் மீண்டும் மன்னாரில் இருந்து வவுனியாவை நோக்கிய தனது பயணத்தை ஆரம்பித்தார்.

தர்மலிங்கம் பிரதாபன் சுமார் 2125 கிலோமீற்றர் தூரம் துவிச்சக்கர வண்டியில் பயணிக்கவுள்ள நிலையிலே மன்னாரை வந்தடைந்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்கப்பட வேண்டும், லயன் அறைகளில் வாழும் தோட்டத் தொழிலாளர்களுக்கு தனி வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும், யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை தனி பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டும் எனும் மூன்று அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து அவர் இந்தப் பயணத்தை முன்னெடுத்துள்ளார்.

25 ஆவது நாளாக நேற்று வியாழக்கிழமை காலை மன்னாரில் இருந்து வவுனியா நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்துள்ள தர்மலிங்கம் பிரதாபன் வவுனியாவுடன் தனது பயணத்தை நிறைவு செய்ய உள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-285)

## ஜனாதிபதி செயற்றிட்ட இணைப்பாளராக யாழ்.,கிளிநொச்சிக்கு அங்கஜன் நியமனம்

(கிளிநொச்சி)

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் தேசிய ரீதியில் செயற்படுத்தப்படும் திட்டங்களை வினைத்திறனாக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்., கிளிநொச்சி மாவட்ட ஜனாதிபதி செயற்றிட்ட இணைப்பாளராக ஜனாதிபதி செயலகத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் செயற்படுத்தப்படும் கிராமசக்தி, சிறுநீரக நோய்த்தடுப்பு, போதைப் பொருள் தடுப்பு, பிள்ளைகளைப் பாதுகாத்தல், சுற்றாடல் பாதுகாப்பு, தேசிய உணவு உற்பத்தி ஸ்மாட் ஸ்ரீலங்கா மற்றும் நிலைபேறான நோக்கு முதலிய நிகழ்ச்சித்திட்டங்களை யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்துவதற்காக ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்னவினால் நியமனம் வழங்கப்பட்டது. (2-10-30-89)





### பொதுக் கூட்டமும் இயக்குநர் சபைத்தெரிவும்

(பூநகரி)

பூநகரி ப.நோ.கூட்டுறவுச்சபைக் கூட்டமும் இயக்குநர் சபைத் தெரிவும் நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பூநகரி ப.நோ.கூட்டுறவுச் சங்கத் தலைமை செயலகத்தில் மேற்படி சங்கத் தலைவர் து.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இப்பொதுசபைக் கூட்டத்தில் அனைத்துக்கிளைக் குழுக்களில் இருந்து தெரிவான பொதுச்சபை உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (2-84)

# வவுனியா கல்வியியல் கல்லூரிக்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கல்



(வவுனியா)

வவுனியா, பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரியில் குவைத் நாட்டின் நிதியுதவியுடன் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.சுவர்ணராஜா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக அல் கிம்மா முஸ்லிம் சேவைகள் அமைப்பின் செயலாளர் எம்.ஏ.ஏ. நூறுல்லா கலந்து கொண்டிருந்தார். மேலும் நிகழ்வில் வடக்கிற்கான அல்கிம்மா முஸ்லிம் சேவைகள் அமைப்பின் இணைப்பாளர் எம்.எஸ்.எம்.ஜாபிர், ஆகியோரும் கலந்திருந்தனர். (2)

## இனம் தெரியாதவர்களால்
# தாக்கப்பட்ட இளைஞன் வைத்தியசாலையில் அனுமதி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர்பகுதியில் கடந்த 4 ஆம் திகதி இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டு தலையில் படுகாயமடைந்த இளைஞன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இதன்போது கோம்பாவில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ச.துசிதரன் (வயது 22) என்ற இளைஞன் தலையில் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (2-281)

# வீதியை விட்டு விலகிய வாகனம் தடம்புரள்வு

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியை விட்டு விலகி தடம் புரண்டுள்ளது.


கிளிநொச்சி பரந்தன் ஏ-35 வீதியின் கண்டாவளை சந்திப்பகுதியில் நேற்று அதிகாலை கன்ரர் ரக வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டுள்ளது.

இந்த விபத்தின் போது சாரதி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-315)



# பாரதம்

## ஏழு பேரின் சிறைத்தண்டனை மனித உரிமை மீறலாகவே பார்க்கப்படுகிறது - ராமதாஸ்





▲ முருகன் ▲ சாந்தன் ▲ பேரறிவாளன்
▲ நளினி ▲ ரவிச்சந்திரன் ▲ ராபர்ட் பயஸ் ▲ ஜெயகுமார்

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கில் பேரறிவாளன் உள்ளிட்ட ஏழுபேர் கடந்த 28 ஆண்டு களாக சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நிலை யில் தொடர்ந்தும் அவர் களை சிறையில் தடுத்துவைத்திரு ப்பது மிகப்பெரிய மனித உரிமை மீறலாகவே பார்க்கப்படுகி றது என பா.ம.க நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பேரறிவாளன் உள்ளிட்ட எழுவரின் விடுதலையை வலி யுறுத்தி பிரதமர் நரேந்திர மோடிக்கு பா.ம.க நிறுவனர் ராமதாஸ் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

வண்டலூர் கேளம்பாக்கத் தில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற அ.தி.மு.க தலைமையிலான கூட்டணி கட்சிகளின் பரப்புரைக் கூட்ட த்தில் கலந்துகொண்ட அவர் பிரதமர் நரேந்திர மோடியிடம் கடிதத்தை கையளித்துள்ளார்.

குறித்த கடிதத்தில், ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட ஏழு பேரைவிடுதலை செய்யவலுவான காரணங்கள் உள்ளன. அவர்களின் விடு தலைக்கு எதிராக எந்த கார ணமும் இல்லை. அவ்வாறு இருக்கும்போது அவர்களின் விடுதலை தொடர்பான முடிவை ஆளுநர் தாமதிப்பது எந்த வகையிலும் நியாயம் இல்லை.

எனவே இனியும் தாமதிக் காமல் 7 பேரையும் விடு தலை செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள் ளும்படி இந்திய பிரதமரா கிய தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த கோரி க்கை நிறைவேற்றப்பட்டால் அதற்காக ஒட்டுமொத்த தமி ழகமும் தங்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கும்" என தெரி வித்துள்ளார்.

இதேவேளை ஏழு பேரின் விடுதலையை வலயுறுத்தி நாளையதினம் மனித சங் கிலி போராட்டம் முன்னெ டுக்கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (7)

## பேருந்தில் குண்டு வெடிப்பு; 18பேர் படுகாயம்




(ஜம்மு)

ஜம்மு-காஷ்மீர் பேருந்து தரிப்பிடத்தில் குண்டு வெடித் ததில் சுமார் 18 பேர் காய மடைந்து வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள் ளனர். அவர்களில் இருவ ரின் நிலை கவலைக்கி டமாக உள்ளதென பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

பேருந்து தரிப்பிடத்தில் நேற்று வியாழக்கிழமை தரித்து நின்ற பேருந்திற்கு அடியில் குறித்த குண்டு வெடி த்ததாக முதற்கட்ட தகவல் கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தில், பேருந் தில் அமர்ந்திருந்தவர்கள், பேருந்து நிலையத்தில் காத் திருந்த பயணிகள் என பல ரும் படுகாயமடைந்துள்ளார் கள்.

காயமடைந்தவர்கள், அரு கிலுள்ள வைத்தியசாலை யில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற இட த்தைச் சுற்றி பலத்த பாதுகா ப்பு போடப்பட்டுள்ளது. பாதுகா ப்பு படையினர் மற்றும் பொலி ஸார் இணைந்து அப்பகுதியை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். இக்குண்டு வெடிப்பிற்கு இதுவரை எவ் வித தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

ஜம்மு-காஷ்மீர் புல்வா மாவில் நடத்தப்பட்ட தாக்கு தலின் பின்னர் அங்கு பதற்ற சூழல் நிலவி வருகின்றது. இந்நிலையில், இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (7)

## சர்வதேச பயங்கரவாதம் உலக நாடுகளுக்கு பாரிய அச்சுறுத்தல்

### சுஷ்மா சுவராஜ் தெரிவிப்பு

(டில்லி)

சர்வதேச பயங்கரவாதம் உலக நாடுகளுக்கு பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ள தாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள கென்ய வெளி விவ கார அமைச்சருடன் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சந் திப்பின்போதே அவர் மேலும் தெரிவித்தார்.

டில்லியில் உள்ள வெளி விவகார அமைச்சில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது

இந்தியாவுக்கான மூன்று நாள் விஜயத்தை மேற்கொ ண்டுள்ள கென்ய வெளிவிவ கார அமைச்சர் மோனிக்கா ஜூமா நேற்று முன்தினம் இந் திய வெளிவிவகார அமைச் சரை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் இரு நாடு களுக்கும் இடையிலான உற வுகளை வலுப்படுத்துவது குறி த்து பேசப்பட்டுள்ளதுடன், இரு நாடுகளுக்கிடையிலும் பொரு ளாதாரம், உட்கட்டமைப்பு உள் ளிட்ட பல துறைகள் தொடர் பான ஒப்பந்தங்களும் கைச் சாத்திடப்பட்டுள்ளன. (7)

## ஆயிரம் ஆண்டுகள் தொன்மையான நூற்றுக்கணக்கான கலைப்பொருட்கள் மெக்சிக்கோவில் கண்டுபிடிப்பு



(மெக்சிக்கோ சிட்டி)

மெக்சிக்கோவில் உள்ள குகை ஒன்றில் நூற்றுக்கண க்கான கலைப்பொருட்கள்கண் டுபிடிக்கப்பட்டுள்ளன. மெக் சிக்கோ சீச்சென் இட்சாவில் உள்ள புராதன நகரான மாயன் நகருக்கு கீழ் உள்ள குகை ஒன் றிலேயே மேற்படி பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் சீச்சென் இட்சா மக்களின் தோற்றம், வாழ்க்கை முறை, நம்பிக்கை ஆகியவற்றைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள முடியும் என என்று மெக்சிக்கோ தொல் பொருள் ஆய்வாளர் கில்லர் மோ்டே அன்டா கூறியுள்ளார்.

அங்குள்ள மக்கள் 50 ஆண்டுகளுக்கு முன்னரே அந்தக் குகையைக் கண்டு பிடித்துள்ளனர். எனினும் அந்தக் குகைக்குச் சென்ற தொல்பொருள் ஆய்வாளர் ஒருவரால் காரணமின்றி மூடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் மற்றுமொரு இடத்தை ஆராய சென்ற போதே தற்செயலாக கில்ல ர்மோ அந்தக் குகையைக் கண்டுபிடித்துள்ளார். குகையை ஆராய்ந்த போது அதிலிரு ந்து தொன்மையான ஊது வர்த்தி கொளுத்தும் கலன் களையும் கண்டுபிடித்தனர். அவை கி.பி 700ஆம் ஆண் டிலிருந்து கி.பி.1000 ஆண்டு வரை தொன்மையானவை என அந்நாட்டு செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## பயங்கரவாதிக

## 16 பேர் பரிதா

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் நேற்றுக்காலை கட்டுமான நிறுவனத்தின் மீது பயங் கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.**

கிழக்கு ஆப்கானிஸ்தா னில் உள்ள ஜலலாபாத் விமான நிலையத்திற்கு அருகே கட்டுமான நிறுவனம் உள் ளது. இந்த நிறுவனத்தின் மீது பயங்கரவாதிகள் நேற்று அதி காலை தற்கொலைத் தாக்கு தல் நடத்தினர்.

பின்னர், சில பயங்கரவா திகள் நிறுவனத்திற்குள் புகு ந்து துப்பாக்கியால் சுட்டு தாக் குதல் நடத்தினர்.

இந்த தாக்குதல் நேற்று அதிகாலை 5 மணி அளவில் தொடங்கி 10.30 மணி வரை நடத்தப்பட்டதாக அதிகாரி கள் தெரிவித்துள்ளனர். இதில் 16 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் 9 பேர் படுகாயம் அடைந்துள் ளனர்.

இந்த தாக்குதலை 5 பயங்கர வாதிகள் நடத்தியுள்ளனர். இவர்களில் 2 பேர் தங்கள் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்த னர். மற்ற 3 பயங்கரவாதிகளும் பாது

## தெலுங்கானா

## 7பேர் உயிரிழப்பு;



(தெலுங்கானா)

தெலுங்கானாவின் நால் கொண்டா பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட வாகன விபத்தில் 7 பேர் பலியாகினர். 15 பேர் படுகா யம் அடைந்தனர். நால்கொ ண்டாவில் கொண்டமல்லே பள்ளி மண்டலிலுள்ள சென் னாரம் கிராமத்தில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

நேற்று முன்தினம் பிற்ப கல் 23 பயணிகளை ஏற்றிக் கொண்டு வந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்தது, ஐதராபாத்தை நோக்கிச்

## அவுஸ்திரேலியாவில்

## இந்திய பெண் வைத்

(கான்பரா)

அவுஸ்திரேலியாவில் காணாமல் போன இந்திய பெண் வைத்தியர் கொலை செய்யப்பட்டது தெரியவந் துள்ளது. சூட்கேசில் அடை த்து வைக்கப்பட்டிருந்த சடல த்தை பொலிஸார் கண்டறிந் துள்ளனர்.

அவுஸ்திரேலியாவின்சிட்னி நகரைச் சேர்ந்தவர் பிரீத்தி ரெட்டி. இந்திய வம்சா வளியைச் சேர்ந்த இவர், பல் வைத்தியராக பணிபுரி ந்து வந்தார். இவர் கடந்த 3ஆம் திகதி செயின்ட் லியோ னார்ட்ஸ் என்ற இடத்தில் நட ந்த பல் மருத்துவர்களுக்கான மாநாட்டில் கலந்துகொள்ள சென்றார்.

அதன் பின்னர் அவர் வீடு திரும் பவில்லை. இது தொடர்பாக பொலிஸா ருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. இத னையடுத்து பொலிஸார் பல இடங்க ளில் தேடும் பணியில் ஈடுபட்டனர். கடைசியாக அவர் சிட்னியின் பரபர ப்பான பகுதியான ஜார்ஜ் தெருவில் உள்ள மெக்டொனால்டில் வரிசையில் காத்திருந்தது கண்காணிப்பு காமி ராவில் தெரியவந்தது.

இதற்கிடையே அவர் சென்ற கார், கிங்போர்டு பகுதியில் உள்ள ஸ்டர ச்சன் லேன் என்ற இடத்தில் நின்று கொண்டிருந்ததை பொலிஸார் கண்டு பிடித்தனர். காருக்குள் ஒரு பெரிய சூட்கேஸ் இருந்தது. சந்தேகம் அடை ந்த பொலிஸார் அதை திறந்து பார்த்த




# ...திகள் தாக்குதல்

# ...தாபமாகப் பலி



காப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தாக்குதல் நிறைவடைந்த நிலையில், தற்போது ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழலை குறைக்கும் வகையில் பொலிஸார் தொடர்ந்து அப்பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு எந்த அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை.

எனினும், கிழக்கு ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்தி வரும் தலிபான் அல்லது ஐ.எஸ். அமைப்பினர் இந்த தாக்குதலை நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (7)

# ...ாவில் விபத்து;

# ...ு; 15பேர் படுகாயம்



சென்று கொண்டிருந்த மாநிலப் போக்குவரத்துக் கழகப் பேருந்தின் மீது மோதியது. டயரில் திடீரெனத் தீப்பிடித்ததால், வாகனம் தனது கட்டுப்பாட்டை இழந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 7 பேர் உயிரிழந்தனர். 15 பயணிகள் படுகாயமடைந்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த உள்ளூர் மக்களும் பொலிஸாரும் காயமடைந்தவர்களை மீட்டு, வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (7)

# ...வில் காணாமல் போன

# ...வைத்தியர் படுகொலை



...போது உள்ளே பிரீத்தி ரெட்டியின் சடலம் இருந்தது.

உடலின் பல இடங்களில் கத்திக்குத்து காயங்கள் இருந்தன. எனவே அவர் கொலை செய்யப்பட்டு அவரின் சடலம் சூட்கேசில் வைத்து வீசப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. (7)

# வெனிசுவெலாவின் முக்கிய அதிகாரிகள் 77 பேரின் விசாவை ரத்துச் செய்ய முடிவு

## அமெரிக்கா அதிரடி

(வோஷிங்டன்)

வெனிசுவெலாவில் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவுக்கு மேலும் நெருக்கடி அளிக்கும் வகையில், அந்நாட்டின் முக்கிய அதிகாரிகள் உள்ளிட்ட 77 பேரின் விசாவை அமெரிக்கா ரத்து செய்ய உள்ளது.

வெனிசுலொவில் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் குழப்பம் நீடித்து வருகிறது. ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவுக்கு எதிராக காய்நகர்த்திய, எதிர்க்கட்சி தலைவர் கொய்டோ தன்னை நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக பிரகடனம் செய்தார். அத்துடன், ஜனாதிபதி தேர்தலில் நிகோலஸ் வெற்றி பெற்றது செல்லாது என்றும், மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறார்.


கெய்டோவுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது. அவருக்கு பாதிப்பு ஏற்பட்டால் பதிலடி கொடுப்பதாகவும் எச்சரித்தது. இதனால், கடும் அதிருப்தி அடைந்த மதுரோ, அமெரிக்காவுடன் மோதல் போக்கில் ஈடுபட்டுள்ளார். வெனிசுலொவுக்கு அமெரிக்கா பல்வேறு பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

இந்நிலையில், வெனிசுவெலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவிற்கு மேலும் நெருக்கடி கொடுக்கும் வகையில் வெனிசுவெலா அதிகாரிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் விசாவை அமெரிக்கா ரத்து செய்ய உள்ளது.

மதுரோ அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அதிகாரிகள், அவர்களின் குடும்பத்தினர் என மொத்தம் 77 பேரின் விசாவை அமெரிக்க வெளியுறவுத்துறை அண்மையில் ரத்து செய்யும் பணியை தொடங்கியிருப்பதாக, துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் தெரிவித்தார். (7)

# ஜெய்ஷ் இ முகம்மது இயக்கம் பாகிஸ்தானில் செயற்படவில்லை

## பாக்.இராணுவ தளபதி மறுப்பு



(இஸ்லாமாபாத்)

புல்வாமா தாக்குதலுக்கு பொறுப்பேற்ற ஜெய்ஷ்-இ-முகமது. இயக்கம் பாகிஸ்தானில் இருந்து செயற்படவில்லை என்று இராணுவ செய்தித் தொடர்பாளரும் இராணுவ மேஜர் ஜெனரலுமான ஆசிப் கபூர் தெரிவித்துள்ளார்.

சி.என்.என் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பயங்கரவாத இயக்கத் தலைவர் பாகிஸ்தானில் தான் இருக்கிறார் என்பதை பாக். வெளியுறவுத் துறை அமைச்சர்ஷா முகம்மது குரேஷி கடந்தவாரம் சி.என்.என்னுக்கு அளித்த பேட்டியில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், நேற்று அதே சி.என்.என் தொலைக்காட்சிக்கு முற்றிலுமாக மாறுபட்ட கருத்தை இராணுவ செய்தித் தொடர்பாளர் கூறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சி.என்.என். தொலைக்காட்சிக்கு பாக். மேஜர் ஜெனரல் ஆசிப் கபூர் அளித்த பேட்டியின் முழு விவரம் வருமாறு:

**கேள்வி:-** தாக்குதலுக்குப் பிறகு இருநாடுகளும் போரை எதிர்நோக்குகிறதா?

**பதில்:-** நாங்கள் போருக்கு நெருக்கமாக இருப்பதாகத்தான் சொல்வேன். ஏனெனில் அவர்கள் இந்தியா வான்வழித் தாக்குதல் மூலம் விதி மீறியுள்ளார்கள். நாங்கள் அதற்கு பதிலடி தந்தோம்.

**கேள்வி:-** சர்வதேச எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் உள்ள சூழ்நிலை எப்படி உள்ளது?

**பதில்:-** பதற்றமாகத் தான் உள்ளது. நாங்கள் அங்கே நேருக்கு நேர் மோதிக் கொண்டோம். பல ஆண்டுகளாக இராணுவம் அங்கு நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்தியப் படை நிறுத்தமும் எங்கள் பதிலும் இருந்தது. இரு தரப்பிலும் பாதுகாவலர்கள் நிறுத்தப்பட்டனர்.

ஒரு நாட்டில் இராணுவ திட்டம் என்பது இயல்பான ஒன்றுதான். அவ்வகையில் தான் இராணுவத் துருப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய சூடான சூழ்நிலையில் தான் இரு பக்கத்திலும் பாதுகாப்புகள் உள்ளன.

**கேள்வி:-** வான்வழித் தாக்குதலில் ஏராளமான தீவிரவாதிகள் இறந்ததாக இந்தியா சொல்லிக்கொண்டிருக்கிறதே?

**பதில்:-** ஒரு செங்கல் கூட கண்டுபிடிக்கப்படவில்லை. அங்கே ஒரு உயிரிழப்பும் ஏற்படவில்லை. அவர்கள் (இந்தியா) சொல்வது அவ்வளவும் பொய். மேலும், புல்வாமா தாக்குதலுக்கு பொறுப்பேற்ற ஜெய்ஷ் இ முகம்மது இயக்கம், பாகிஸ்தான் உள்ளே இருந்து செயற்படவில்லை.

**கேள்வி:-** என்னது ஜெய்ஷ் இ முகம்மது பாகிஸ்தானில் இல்லையா?

**பதில்:-** ஆம் ஜெய்ஷ் - இ-முகமது இயக்கம் பாகிஸ்தானில் இருந்து செயற்படும் இயக்கம் இல்லை. இது ஒரு தீவிரவாத இயக்கம். இவ்வியக்கம் ஐக்கிய நாடுகள் மற்றும் பாகிஸ்தானில் கூட த்டை செய்யப்பட்டுள்ளது".

**கேள்வி:-** அடுத்து என்ன செய்வதாக முடிவு?

**பதில்:-** அது இந்தியாவின் நடவடிக்கையில்தான் உள்ளது. அவர்கள் சமாதான முயற்சிகள் எடுப்பார்களா என்றுதெரியவில்லை. மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதும் அமைதியை ஏற்படுத்துவதும் இனி இந்தியாவின் கையில்தான் உள்ளது.

இப்போது பந்து இந்தியாவின் பக்கத்தில் விழுந்துள்ளதாக நாங்கள் கருதுகிறோம். இச்சூழ்நிலை இன்னும் அதிகரிக்குமேயானால் நிலைமை மோசமான திசையை நோக்கித்தான் செல்லும்.

இவ்வாறு இராணுவ செய்தித் தொடர்பாளர் சி.என்.என்.பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (7)

# ரபேல் விமான விவகாரம்

# பிரதமர் மோடி உட்பட அனைவரிடமும் விசாரணை நடத்துங்கள் -ராகுல்

(சென்னை)

ரபேல் விவகாரத்தில் பிர்தமர் மோடி உட்பட எல்லோரிடமும் விசாரணை நடத்துமாறு ராகுல் காந்தி தெரிவித்தார்.

ரபேல் விமானக் கொள்முதல் ஒப்பந்த விவகாரம் பூதாகரமாக வெடித்துள்ள நிலையில், இதுகுறித்து நேற்று வியாழக்கிழமை டில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்தார் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி. அப்போது அவர் பேசியதாவது,



"பிரதமர் குற்றமற்றவர் என்றால் ஏன் ரபேல் விவகாரத்தில் தன்னிடம் விசாரணை நடத்திக்கொள்ளலாம் ஏன்று கூற மறுக்கிறார்?

ரபேல் ஒப்பந்தத்தில் விசாரணை வேண்டும்என்று பலமுறை கூறியும் எந்த விசாரணையும் தொடங்கப்படவில்லை. பிரதமர் மோடியைக் காப்பதற்காக மத்திய அரசு, நிறுவனங்களைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

ரபேல் ஒப்பந்த விவகாரத்தில் பிரதமரும் சம்பந்தப்பட்டுள்ளார். இதில் தொடர்புடைய அனைவரையும் விசாரியுங்கள் பிரதமர் உட்பட ரபேல் போர் விமான ஒப்பந்த ஆவணங்கள் காணாமல் போய்விட்டதாம். 2 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, விவசாயிகளின் உற்பத்திக்கு நியாயமான விலை, அனைவரின் வங்கிக் கணக்குகளிலும் ரூ.15 லட்சம் உள்ளிட்ட வாக்குறுதிகள் காணாமல் போனதுபோல, ஆவணங்களும்மறைந்துவிட்டன. ஆவணங்களை அழிக்கும் முயற்சியாகவே இது தெரிகிறது" என மேலும் தெரிவித்தார். (7)

# சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தை உடன் நிறுத்த ஜனாதிபதி உத்தரவு



(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் "சுரக்ஷா" காப்புறுதித் திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கல்வி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு எடுத்துரைத்துள்ளார்.

அத்துடன் உள்ளூரில் எவருக்கும் "சுரக்ஷா" காப்புறுதித் திட்டத்தைக் கொடுக்காமல் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு இதனை கொடுத்த நோக்கம் என்ன எனவும் இதன்போது ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

சரியான கேள்விமனு கோரியே இந்தக் காப்புறுதித் திட்டம் ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு அது அமுலுக்கும் வந்துள்ளது.

அதனால் இதனை இரத்துச் செய்வது கடினமென கல்வியமைச்சரும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

### அம்பாந்தோட்டையில்

# ஒரு பில்லியன் டொலர் முதலீட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை



(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் ஒரு பில்லியன் டொலர் முதலீட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அமைச்சர் சாகல ரத்நாயக்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் அம்பாந்தோட்டை துறைமுகத்தை ஒட்டியதாக, கைத்தொழில் வலயத்தை அமைக்கும் திட்டம், அரசியல் உள்நோக்கத்துடன் நடத்தப்பட்ட போராட்டங்களால் தாமதமாகியுள்ளது என்றும் அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார். (இ-7)

### எதிர்க்கட்சியை இல்லாமலாக்கும் வரவு–செலவுத்திட்டம்

# எந்தச் சவால்கள் எதிர்வந்தாலும் மின் பாவனையாளர்களுக்கு சலுகை



## அமைச்சர் ரவி உறுதி

(கெரவலப்பிட்டிய)

நிறைவேற்றக்கூடிய விடயங்களையே வாக்குறுதிகளாக வழங்குவதாகத் தெரிவித்த அமைச்சர் ரவி கருணாநாயக்க, எந்தச் சவால்கள் வந்தாலும் மின் பாவனையாளர்களுக்கு சலுகைகள் வழங்கப்படுமென்றும் தெரிவித்தார்.

கெரவலப்பிட்டிய இரட்டை சுழற்சி அனல் மின்நிலைய சுற்றாடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற கண்காணிப்பு விஜயத்தின் போது ஊடகங்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றும் எண்ணம் எமக்கில்லை. குறைகள் இருந்தால் அதுபற்றி கட்சிக்குள்ளேயே பேசித் தீர்வு காண்போம். இது தேர்தல் வரவு-செலவுத் திட்டமென எதிர்க்கட்சியினர் கூறினாலும் இது எதிர்க்கட்சியை இல்லாமலாக்கும் வரவு-செலவுத் திட்டமாகும்.

மின்சாரத்தை குறைந்த விலைக்கு உற்பத்தி செய்து பாவனையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கவே நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

குறைந்த வளத்தை அதிகளவு தேவைக்கு பயன்படுத்தி இம்முறை வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கமாக மக்களுக்கு முடிந்தளவு சலுகைகளை வழங்கவே எதிர்பார்க்கின்றோம். இதைவிட வழங்க முடிந்தால் நல்லது. குறைகள் இருந்தால் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்போம். நாம் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை நீக்க வேண்டுமென்றால் புரிந்துணர்வுக்கு வர வேண்டும். ஜனாதிபதியும் பிரதமரும் தற்போது இணைந்து வேலை செய்கின்றனர். எங்கோ சிறு விரிசல் ஏற்பட்டுள்ளது. அதனை நிவர்த்தி செய்து ஒன்றாகப் பயணிக்க நாம் முயற்சி செய்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மைத்திரி- மகிந்த- ரணில் இணைந்து முன்மாதிரியாகத் திகழ வேண்டுமாம்



## விஜித் விஜயமுனி சொய்சா விருப்பம்

(கொழும்பு)

ஜனாதிபதியும்-பிரதமரும் இணைந்து இந்த ஆண்டில் நாட்டை சரியான திசைக்குக் கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா, இதற்கு மேலதிக ஒத்துழைப்பு வேண்டும் என்றால் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவையும் இணைத்துக்கொண்டு நாட்டுக்கு ஒரு முன்மாதிரியான அரசியலை முன்னெடுத்துக்காட்ட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவு-செலவுத்திட்டம் மீதான முதல் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் மங்கள சமரவீர முன்வைத்துள்ள வரவு-செலவுத்திட்டம் இந்த நாட்டை சரியான திசைக்குக் கொண்டு செல்லும் மிகச் சிறந்த வரவு-செலவுத் திட்டமாகும். சகல துறைகள் குறித்து அவர் தூரநோக்கு சிந்தனையில் ஆரோக்கியமான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளார்.

ஆகவே இந்த வரவு-செலவுத்திட்டத்தின் மூலமாக மிகச்சிறந்த வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புரியாத புதிர்

அமெரிக்காவிலே ஒரு தொழில் அதிபர். ஜோர்ஜ் டி பிரைசன் (George.D.Bryson) என்று பெயர். சில வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அவர் செயின்ட் லூயிஸ் (St.Lousis) இலேயிருந்து நியூயோர்க் போய்க் கொண்டிருந்தார். வழியிலே லூயிஸ் வில்லி (Louis Ville) என்று ஒரு நகரம். ஒரு நாள் அங்கே தங்கிவிட்டுப் போக வேண்டிய சூழ்நிலை. இதற்கு முன்னால் அவர் அந்த ஊருக்குப் போனதே இல்லை. அதுதான் முதல் தடவை. "இந்த ஊரிலே கொஞ்சம் சௌகரியமாக தங்க வேண்டும் என்றால் எங்கே தங்கலாம்?" என்று விசாரித்தார்.

பிரவுன் ஹோட்டலுக்குப் போங்கள் என்று சொன்னார்கள். அது எங்கே இருக்கு என்று கேட்டுத் தெரிந்து கொண்டு அங்கே போய் சேர்ந்தார். ரூம் ஒன்று வேணும் என்றால் கேட்டார்...கிடைத்தது. ரூம் நம்பர் 307 என்று சொல்லி சாவியையும் கொடுத்தார்கள்.

வாங்கிக்கொண்டு இவர் நேராக ரூமுக்குத்தானே போக வேண்டும். அங்கே போகவில்லை. கடிதங்கள் கொடுக்கின்ற கவுண்டருக்குப் போனார். சும்மா ஒரு தமாஷ் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டு "என் பெயர் ஜோர்ஜ் டி பிரைசன். ரூம் நம்பர் 307. எனக்கு ஏதாவது கடிதங்கள் உண்டா?" என்று கேட்டார். அங்கே நின்றுகொண்டிருந்த பெண் பொறுமையாக உண்டு என்று சொல்லிவிட்டு ஒரு கடிதத்தை எடுத்து இவரிடம் நீட்டினார்! தமாசாகக் கேட்டால் இவருக்கு நிஜமாகவே அதிர்ச்சியாகப் போச்சு! அவசரம் அவசரமாக அந்த கடிதத்தை வாங்கிப் பார்த்தார். அதிலே இவர் பெயர் சரியாக எழுதியிருக்கு! ரூம் நம்பர் 307 என்றும் சரியாக போட்டிருக்கு! இவர் பரபரப்பாக மேற்கொண்டு விசாரிக்க ஆரம்பித்தார். கடைசியிலேதான் விடயம் புரிந்தது!

இவருக்கு முன்னாடி அந்த ரூமிலே தங்கியிருந்தவர் பெயரும் பிரைசன் தான். இனிசலும் அதேதான்! அவர் மொண்ட்ரியல் (Montreal) இல் ஒரு நிறுவனத்திலே வேலை பார்க்கின்றவர். இவர் நேராக அவரைப் போய் பார்த்து பேசி அதை உறுதிபடுத்திக் கொண்டாராம்.

"அதுசரி...இது தற்செயலாக நடந்த ஒரு ஒற்றுமை என்பதா?" அல்லது இதிலே வேறு ஏதாவது விடயம் இருக்கின்றதா?

இது மாதிரி ஒன்று இரண்டு நடந்தது என்றால் தம் செயல் என்று சொல்லி விடலாம். ஆனால் உலகம் பூராகவும் இது மாதிரி அதிசய நிகழ்ச்சிகள் இடையிடையில் நடந்து கொண்டுதான் இருக்கின்றது! 1900 ஆம் ஆண்டு ஜூலை 28 ஆம் திகதி இத்தாலியிலே ஒரு ராஜா கிங் அம்பர்டோ ஐ ( King umberto I ) அப்படி என்று பேர். அவரும் அவருடைய உதவியாளர் ஒருத்தரும் மிலன் (Milon) நகருக்குப் பக்கத்திலே உள்ள மோன்சா (Monza) என்கின்ற ஊருக்கு வந்திருக்கின்றார்கள். மறுநாள் அங்கே நடக்க இருக்கின்ற விளையாட்டுப் போட்டியிலே பரிசு கொடுப்பதற்காக ராஜா அங்கே வந்திருக்கின்றார். முதல் நாள் ராத்திரி அவர் ஒரு உணவு விடுதிக்கு சாப்பிடப் போனார். அங்கேதான் இவருக்காக ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த விடுதி சொந்தக்காரரை பார்த்தவுடனே ராஜாவுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி! ஏன்? இவர் மாதிரியே அவரும் இருக்கின்றாராம்! கண்ணாடியிலே பார்த்தது மாதிரி! முகம்– உடம்பு எல்லாம் ஒரே அச்சிலே போட்டு எடுத்தது மாதிரி இருக்கின்றது! ராஜா மெதுவாக அவரிடம் பேச்சுக் கொடுத்தார். உங்க பேர் என்ன என்று கேட்டிருக்கின்றார். இவர் பேரையே அவரும் சொன்னாராம். உங்கள் பிள்ளை பேர் என்ன என்று கேட்டிருக்கின்றார். இவர் பிள்ளை பெயரை அவரும் சொன்னாராம்–விட்டோரியோ (Vittorio) அப்படி என்று!

இரண்டு பேரும் ஒரே வருடம், ஒரே மாதம், ஒரே திகதி, ஒரே ஊரில பிறந்திருந்தார்கள். மார்ச் 14, 1844 ஆம் ஆண்டு இரண்டு பேருக்கும் ஒரேநாளில் திருமணம் ஆகியிருக்கிறது. ஏப்ரல் 22, 1863 ஆம் ஆண்டு இரண்டு பேரும் ஒரே பெயருள்ள பெண்களையே திருமணம் செய்திருக்கின்றார்கள். மார்க்ரிட்டர் (Margherita).

அந்த ராஜாவுக்கு எந்தத் திகதியிலே முடிசூட்டு விழா நடந்திருக்கின்றதோ அதே திகதியிலேதான் இவர் ஹோட்டல் திறப்பு விழாவும் நடந்திருக்கின்றது. ராஜாவுக்கு ஒரே ஆச்சரியமாகப் போச்சு, நாளைக்கு நடக்கப் போகின்ற பரிசளிப்பு விழாவுக்கு இவரையும் வரச் சொல்லிவிட்டு போனார். மறுநாள் விழா நடந்தது. இவர் வரவில்லை. ராஜா விசாரித்தார் எங்கே அவர்? ஒரு Shooting Accident நேற்று இராத்திரி அவர் செத்துப் போயிட்டார் என்று சொன்னார்கள். ராஜாவுக்கு இன்னமும் அதிர்ச்சி. சரி அவருடைய ஈமச்சடங்கு எப்போது நடக்கும் என்று விசாரியுங்கள். நானும் வருகின்றேன் என்றார் ராஜா. இப்படி சொல்லிக் கொண்டிருக்கின்ற பொழுது ஒரு கொலைகாரன் ராஜாவை சுட்டுவிட்டான். மூன்று தடவை சுட்டான். முதல் குண்டு தவறிப் போச்சு. அடுத்த இரண்டு குண்டும் நெஞ்சிலே பாய்ந்து ராஜா செத்துப் போய்விட்டார். இதுக்கு என்ன சொல்கின்றீர்கள்?

இவ்வளவும் தற்செயலான ஒற்றுமை என்று சொல்லிவிட முடியுமா? அப்படி நினைத்து பல அதிசய சம்பவங்களை நாம் அலட்சியமாக ஒதுக்கி விடுகின்றோம். ஆனால் இது அதைவிட பெரிதாக உள்ள இரகசியம். இன்னமும் முழுதாக அதை நாம் கண்டு பிடிக்கவில்லை.

ஒருத்தருடைய மன நிலை– ஊழ்வினை இது எல்லாம் சம்பந்தப்பட்ட ஒரு விடயமாகும் அது. கீழை நாட்டு மனோதத்துவ சாஸ்திரம் அப்படித்தான், சொல்கின்றது. The psychic and subjective state of a person determine them அப்படி என்கிறது! "இதுவரைக்கும் தினமும் தகவலைத்தான் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். இப்பொழுது எங்கள் காதிலே பூச்சுத்தவும் ஆரம்பித்து விட்டதா?" என்று கேட்காதீர்கள். இதெல்லாம் ஆதாரத்தோடு உள்ள விடயங்கள்தான்.

நீங்கள்கூட கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள். உங்கள் வாழ்க்கையிலே கூட சில சின்னச் சின்ன அதிசயங்கள் நடந்திருக்கும். இதெல்லாம் தீவிரமான ஆராய்ச்சிக்குரிய விடயங்கள். அவ்வளவுதான் இப்போதைக்குச் சொல்ல முடியும். இந்தத் தகவலை தெரிந்து கொண்ட பின்பும் நம் வாசகர்கள் நிலைமை எப்படி இருக்கும் என்பதைப் பற்றி ஒரு சின்ன கற்பனை. ஒரு வாசகர் தன்னுடைய அறைக்குள் இருந்து அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடி வருகின்றார். என்ன விடயம் என்று விசாரிக்கின்றார்கள் வீட்டுக்கார அம்மா.

"அந்த அறைக்குள் யாரோ ஒரு ஆள் நிற்கின்றான்; நிஜத்திலே பார்த்தால் என்னை மாதிரியே இருக்கின்றான் என்கின்றார் இவர். அந்த அம்மா கொஞ்சம் கூட அலட்டிக்காமல் திரும்பி அடுப்பங்கரைக்குப் போகின்றார். "என்ன இது? நான் எப்பேர்ப்பட்ட விடயத்தை சொல்கின்றேன்! நீ பாட்டுக்குப் பேசாமல் போகின்றாய்! என்று அலருகின்றார் இவர். உங்கள் அறைக்குள் புதிதாக ஒரு நிலைக்கண்ணாடியை நான் தான் வாங்கி வைத்தேன்! என்கிறார்கள் இவர்கள்.

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


# அறுங்கோணவாழிடம்



பொதுவாக உலகில் அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்ட இனம் பூச்சி இனமாகும். இந்த பூச்சி இனங்களில் மனிதனுக்கு பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் இனங்களே அதிகம். மனிதனுக்கு பயன்படும் தேனை உற்பத்தி செய்து, பல்வேறு நோய்களுக்கு மருந்தாக இருக்கும் தேனை அளிக்கும் தேனீக்கள், ஈவகையைச் சேர்ந் தவையாகும். தேனீக்கள் ஆப்ரிக்காவில் தோன்றியுள்ளன. அப்படியே ஒவ்வொரு கண்டமாகப் பரவி தற்போது பூமியில் அன்டார்டிகாவைத் தவிர மற்ற அனைத்துப் பகுதிகளிலும் பரவி வாழ்ந்து வருகின்றன.

விவசாயத்தில் அதிகவிளைச்சலை ஏற்படுத்த மகரந்த சேர்க்கையானது முக்கியமானஒன்றாகும். அவ்வகையில் தேனீக்களின் பங்கு அளப்பெரியது.






தேனீக்களினால் மட்டுமே மகரந்தச் சேர்க்கை செய்யப்படக் கூடிய தாவரங்கள், பல உண்டு. இன்றைய காலகட்டத்தில் விவசாய பயிர்ச்செய்கையில் அதிகளவான பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்தபடுகின்றன. பீடைதாக்கத்தை கட்டுப்படுத்தவே இவை பயன்படுத்தப்பட்டாலும் காலப் போக்கில் இவைகளினால் சூழலுக்கும் பாதிப்பு உண்டாகின்றது. சூழல் என்று சொல்லும் பொழுது மனிதன் விலங்குகளையும் இது குறிக்கும். சுற்றாடலை சென்றடையும் பூச்சிகொல்லி இரசாயனங்கள் இலகுவில் நுண்ணங்கிகளால் அழிக்கப்படாது விடத்து அவற்றின் உடலில் சேர்ந்து விடுகின்றன. காலப்போக்கில் உணவுச் சங்கிலியின் வழியே கடத்தப்படும் பொழுது ஒவ்வொரு மட்டத்திலும் அவற்றின் பருமன் அதிகரித்துச் செல்லும் இதனை ஆங்கிலத்தில் Bio Accumulation எனஅழைப்பர். பூச்சிக்கொல்லிகளின் வீரியத்தை பொறுத்தே அவற்றின் விளைவுகள் உயிரினங்களில் தென்படும்.

ஆனால் தேனீக்கள் விவசாய நிலங்களில் விசிறப்படும் பூச்சி கொல்லிகளினால் நேரடியான தாக்கத்துக்கு உள்ளாகின்றன. பூச்சிகளை குறிவைத்து இரசாயனங்கள் விசிறப்படுகின்றமையினால், தீமை தருபூச்சிகள் மட்டுமல்லாது நன்மை தரும் பூச்சிகளும் அங்கு அழிவடைகின்றன, தேனீக்கள் மகரந்தச் சேர்க்கை செய்யும் பகல் நேரங்களில் மருந்துவிசிறல் மற்றும் அண்டைவயல் வெளிகளில் விசிறப்பட்ட இரசாயனங்களின் எச்சங்களின் மறைமுகமான தொடர்பு என்பவைகளே தேனீக்கள் இரசாயனங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சந் தர்ப்பங்கள் ஆகும்.

பூச்சி கொல்லிகளின் பல வகைகள் உண்டு. காற்றிலே விசிறப்படுகின்றவை மற்றும் தாவரத்தின்




உள்ளே செலுத்தப்படுகின்றவை சில உதாரணமாகும். பொதுவாக காற்றிலே விசிறப்படுகின்ற பூச்சி கொல்லிகள் நிச்சயிக்கப்பட்ட இடத்தையம் தாண்டி அருகில் இருக்கும் ஏனைய இயற்கை வாழிடங்களிலும் சென்றடைகின்றன. இவ் வகை பூச்சிக்கொல்லிகளுடன் நீராடி தொடர்ப்பு ஏற்படுத்தும் எந்த வகை பூச்சியும் மரணத்தை தழுவும் என்பதால் இவற்றின் வீரியத்தையும் விசிறப்படும் அளவை பொருத்தும் பாதிப்புக்கள் பல மடங்காக மாறி விடுகின்றது.

தேனீக்கள் இயற்கையாகவே இரசாயனகொல்லிகளுக்கு அதீத உணர்ச்சி கொண்டவையாகும். தேனீக்களுக்கு இரசாயன பாதிப்பு ஏற்படும் இடது அது அந்த தேன் கூட்டிற்கே பாரிய பாதிப்பை ஏற்படுத்தி விடும். இதனை ஆங்கிலத்தில் **Colony Collapse Disorder** என அழைப்பர்.

பூச்சி கொல்லி நச்சுத்தன்மை பொதுவாக கடுமையான தொடர்பு நச்சுத் தன்மை மதிப்புகள் மூலம் அளவிடப்படுகிறது. அவற்றை இதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தமுடியும்

- மிகவும்நச்சு -(50 சதவீத மான தேனீக்களை கொள்ளக் கூடிய இரசாயனக்கொல்லியின் அளவு <2µg/bee)
- மிகவும்நச்சு (50 சதவீதமான. தேனீக்களைகொள்ளக்கூடிய இரசாயனக்கொல்லியின் அளவு 2 - 10.99µg/bee)
- சற்றுநச்சு (50 சத வீத மான தேனீக்களை கொள்ளக் கூடிய இரசாயனக்கொல்லியின் அளவு 11 - 100µg/bee)
- நச்சுத்தன்மையற்றது.

நியோநிகோட்டினாய்டு எனப்படும் ஒருவகை பூச்சிக்கொல்லிகள் தேனீக்களுக்கு உயிராபத்தை விளைவிக்கின்றன என சூழல் பாதுகாப்பு சபை விஞ்ஞான ஆய்வுகளின் மூலமாக கண்டறிந்துள்ளது. இந்த இரசாயனம் சமீபத்தைய தரவுகளின் படி ஏறத்தாழ 7 வ்கை பெயர்களில் உலக வர்த்தக சந்தையில் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஐரோப்பிய உணவு பாதுகாப்பு சபையின் தரவுகளின் படி ஐரோப்பிய யூனியன் ஏப்ரல் 2013 இல் இருந்துதனதுநாடுகளில் இவ் வகை நியோநிகோட்டினாய்டு பூச்சிக் கொல்லி இரசாயனங்களை பயன்படுத்துவதை முற்று முழுதாகவே தடை செய்து சட்டம் நிறைவேற்றியுள்ளது. எனினும் ஐக்கிய நாடுகள் இதற்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை. உணவு உற்பத்தியை இந்த தடை சட்டம் பாதிக்கும் என்பதே அவர்கள் முன்வைத்த பிரதிவாதம் ஆகும்.

இவற்றை தவிர நம்நாட்டில் பயன்படுத்தப்படுகின்ற தற்போது பயன்பாட்டில் இருக்கின்ற பல வகை பூச்சிநாசினிகளும் தேனீக்கல் மீதுதாக்கம் புரிகின்றனஎன



கூறினால் நம்பவாபோகின்றீர் கள். Malathion, Sevin, Bay gon, Imidan, Fenthion, Sumi thion ஆகியவை அவற்றில் சில உதாரணங்களாகும்.

தேனீக்கள் மகரந்தச்சேர்க்கையில் முக்கிய பங்கு வகிக்கின்றன விவசாயா உற்பத்தி தேனீக்களை நம்பியே உள்ளது அவை எமது உயிர் நாடியாகும் இவற்றை பாதுகாக்க வேண்டியது எம் ஒருவர் கடமையாகும். தேனீவளர்ப்பின் மூலம் அழிந்து வரும் தேனீக்களை பாதுகாக்க முடியும். எனினும் இந்த பற்று ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். இலங்கையில் தேனீக்களை பற்றிய ஒரு விழிப்புணர்வு எம்மவர்கள் மத்தியில் வர தொடங்கியுள்ளது. பல இளைஞர்கள் தேனீக்களை வளர்ப்பதை தொழிலாக மேற்கொண்டு வெற்றியும் கண்டுள்ளனர் சமீபத்திய சமூக வலைத்தள செய்தியில் பொறியியல் பீடத்தில் கல்வி கேட்கும் மாணவர்கள் இருவர் காரை நகர் பிரதேசத்தில் மேற்கொண்டு வரும் தேனீவளர்ப்புபற்றிய ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. அந்த மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் பலருக்கு இலவச கருத்தரங்குகளை கூட எமது திருநெல்வேலி விவசாய பண்ணை யில் நடத்திவருகின்றனர். அந்த மாணவர்களை நான் சந்தித்த பொழுது அவர்கள் தேனீவளர்ப்பு பற்றி கொடுள்ள ஈடுபாடு என்னை மிகவும் கவர்ந்தது தேனீக்களின் முக்கியத்துவத்தை அந்த அளவிற்கு அவர்கள் தெரிந்துவைத்து உள்ளார்கள். வெறுமனே சூழலை காப்பாற்றுவோம் வாருங்கள் என கூறினால் எம்மவர்கள் வரமாட்டார்கள். அதையே ஒரு தொழிலாக செய்யுங்கள் என்றால் சற்று அனுசரித்து வருவார்கள் அது மனித இயல்பு என்றே கூற முடியும்.

அந்தவகையில் தேனீக் களை பராமரித்து அவற்றின் விளை பொருளான தேனை வியாபாரப்படுத்துவதை நோக்கமாக கொண்டே தேனீ வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது .

ஆரம்பத்தில் தேனீக்களை கண்டாலே பலருக்கு பயமும் திகிலும் வருமே அன்றி அவற்றில் இருந்தது வரும் பயன் கண்ணுக்கு தென்படுவது இல்லை.

காரணம் அவற்றின் கொடிய விஷமுள்ளகொட்டுதல் ஆகும். கொட்டு வாங்கியவருக்குதான் அதன் வழியும் கொடுமையும் புரியும் என நீங்கள் கூறுவதும் கேட்கத்தான் செய்கின்றது. எனி




னும் தேனீக்கள் தமது தேன் கூட்டை பாதுகாப்பதற்காகவே கொட்டுகின்றன. ஒரு தேனீ கொட்டிய பின்னர் தனது உயிரையே இழந்து விடுகின்றது என சொன்னால் பலர் நம்பமாட்டார்கள் .

தேனீக்கள் தேனை சேகரிக்கவென 33000 பூக்களை தேடி செல்கின்றன ஏறத்தாழ 100000 தொடக்கம் 200000 வரை யான தேனீக்கள் 10 தொடக்கம் 20 நாட்கள் கடுமையாக உழைத்து




10 – 20 kg வரையானதேனை கூட்டில் சேகரிக்கின்றன. இந்த தேனை சேர்க் கும் செயற்பாட்டில் மறைமுகமாக அவை மகரந்தச் சேர்க்கையையும் நடத்துகின்றன.

இலவசமாக எமக்கு சேவையா செய் யும் செயற்பாடு மெச்சத்தக்க ஒன்றாகும். அவற்றின் ஒற்றுமை, சுறுசுறுப்பு என்பவற்றையும் நாம் பார்த்து கற்றுக் கொள்ளவே வேண்டிய சூழ் நிலையில் இன்று நாம் இருக்கின்றோம். தேன் என்பது மிகவும் மகத்தான ஒரு இயற்கையின் வரப்பிரசாதம் ஆகும். மருத்துவ குணம் மிகவும் நிறைந்துள்ள ஒருபானம் இதுவாகும்.

இவ்வாறு பல இருக்கும் இவை மனிதனுடைய கட்டுப்பாடற்ற பூச்சி நாசினிவிசிறலால் சந்தித்து கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும். இலங்கையில் கூட தேனீக்களின் அளவு கணிசமானளவு குறைந்தே காணப்படுகின்றது. ஆர்வலர்களும் பூச்சியியல் நிபுணர்களும் இவற்றை பாதுகாக்க பல முயற்சிகள் எடுத்த வண்ண மேயுள்ளனர்.

ஆனா லும் பொது மக்களின் பங்களிப்பு இதில் முக்கியமாக உள்ளது.விவசாய நண்பர்கள் இந்த விடயத்தில் குறிப்பாக அக்கறை கொள்ள வேண்டும். தேனீக்கள் அதிக மாக உலாவும் நேரங்களில் மருந்து விசிறலை தவிர்த்தல் மற்றும் மாலை நேரங்களில் பூச்சி கொல்லிகளை பயன்படுத்துதல் போன்ற திட்ட மிட்ட செயற்பாடுகளின் மூலம் தேனீக்களுக்கு நேரடியாக ஏற்படும் தாக்கங்களை குறைக்க முடியும்.

அதுமட்டுமல்லாமல் தேனீ வளர்ப்பு பற்றி யவிழிப்புணர்வு அனைவருக்கும் ஏற்பட வேண்டும். தேனீவளர்ப்பினால் சூழலும் பயன்அடைகின்றது.தேன் உற்பத்தியும் அதிகரிக்கின்றது. அதன் மூலம் வருமானமும் அதிகரிக்கும். இவ்வாறான சுய தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதன் மூலம் தேனீக்களை எம்மாலும் பாதுகாத்திடமுடியும்.

தேனீக்கள் அழிகின்றன என்றால்
நாம் எம்மை நாமே அழித்துக் கொள்கின்றோம் என்பதே அதன் அர்த்தம்.
விழித்து கொள்வோம் தேனீக்களை காப்போம்.

M.ஜோன் பிரியந்
B.Sc (Hons) in Zoology

# கைப்பற்றப்பட்டுள்ள போதைப்பொருட்களை ஏப்ரல் முதலாம் திகதி அழிக்க நடவடிக்கை

(கொழும்பு)

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களைப் பலப்படுத்துவதற்கும் நாட்டின் சிறுவர்களின் எதிர்காலத்திற்காகவும் போதைப்பொருள் பாவனையிலிருந்து விலகியிருப்பதற்கு அனைத்துப் பிரஜைகளும் தமது மனச்சாட்சியின்படி அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதனை நினைவுபடுத்தி போதைப்பொருள் பாவனையிலிருந்து விலகியிருப்பதாக முழுநாடும் ஒன்றாக மேற்கொள்ளும் உறுதிமொழி வழங்கும் நிகழ்வு ஏப்ரல் 3 ஆம் திகதி காலை 8 மணிக்கு "சித்திரை உறுதிமொழி" என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலைக் கூட்டத்தின் போது அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் இதில் இணைத்துக்கொள்ள உள்ளதுடன், பல்கலைக் கழக மாணவர்கள், நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க அதிகாரிகள் மற்றும் தனியார் துறையினர் உள்ளிட்ட அனைவருக்கும் இதற்காக திறந்த அழைப்பொன்றை விடுப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, ஏப்ரல் 3 ஆம் திகதி காலை 8 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்திற்கு வருகைதந்து அந்த உறுதிமொழி வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இதுவரையில் கைப்பற்றப்பட்டுள்ள சட்டவிரோத போதைப்பொருட்கள் ஏப்ரல் முதலாம் திகதி நீதிபதிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் முன்னிலையில் கட்டுநாயக்கவில் வைத்து அழிக்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேநேரம் சட்டவிரோத போதைப்பொருட்களை கண்டறிவதற்காக பயன்படுத்தும் நவீன தொழில்நுட்ப உபகரணங்களை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்காக தற்போது கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளதாகவும் இன்னும் சில மாதங்களில் அவ் உபகரணங்களை நாட்டுக்கு கொண்டு வர முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாக பதிலளித்த ஜனாதிபதி, அத்தீர்மானம் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் எந்தவொருவரும் போதைப்பொருட்களால் நாட்டுக்கு ஏற்படும் அழிவை தவிர்ப்பதற்கு உதவுவதில்லை என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, யார் எதிர்த்த போதும் நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்திற்காக அந்த பொறுப்பை நிறைவேற்றுவதாக தெரிவித்தார். (இ-7)

# ரணில்- சஜித் இடையே மீண்டும் பிரிவினையை ஏற்படுத்த முயற்சி

(பொரளை)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும். கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குமிடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தி பிரிவினையை ஏற்படுத்த ஐ.தே.கவின் சில எம்.பிக்களும் எதிர்க்கட்சியின் சில உறுப்பினர்களும் திட்டமிட்டு வருவதாக ஐக்கிய தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

தேவையற்ற காரணங்களை தெரிவித்து ரணில் விக்கிரமசிங்கவையும் சஜித் பிரேமதாஸவையும் பிரிக்க வேண்டிய தேவை பலருக்கு இருப்பதாகவும். ஐக்கிய தேசிய பிக்குகள் முன்னணி சுட்டிக் காட்டியுள்ளது.

பொரளையில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசிய பிக்குகள் முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் மதுரட்ட தம்மாலங்கார தேரர் இதனை தெரிவித்துள்ளார்.

குரோதங்களை ஒரு புறம் வைத்து ஒற்றுமையாக செயற்படுமாறு ஐக்கிய தேசிய கட்சியின் அனைத்து உறுப்பினர்களிடமும் வேண்டுகோள் விடுப்பதாகவும் ஐக்கிய தேசிய பிக்குகள் முன்னணியின் தம்மாலங்கார தேரர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 2 துப்பாக்கிகள் குறித்து விசாரணைகள் ஆரம்பம்


கொள்ளையிடப்பட்ட 700 கோடி ரூபாய் பெறுமதியான நீல வைரத் துடன் கைதான கெவுமா என அறியப்படும் கெலும் இந்திக்கவிடமிருந்த இரண்டு துப்பாக்கிகள் குறித்து விசேட பொலிஸ் குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த நபரைக் கைது செய்ததன் பின்னர் பெரும்பாலான பாதாள உலகக் குழுவினர் அச்சமடைந்துள்ளனர் என பொலிஸ் புலனாய்வுத் தகவல்கள் ஊடாக அறிய முடிவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கெவுமா என அறியப்படும் கெலும் இந்திக்கவை 7 நாட்கள் தடுத்து விசாரணை செய்ய நீதிமன்றத்தால் பொலிஸாருக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கெவுமா என அறியப்படும் கெலும் இந்திக்க தற்காலிகமாக தங்கியிருந்த இரண்டு வீடுகளில் இருந்து தோட்டாக்கள் உள்ளிட்ட சில பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்த-பாக். தூதுவர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் ஷஹீத் அஹ்மத் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளார்.

குறித்த சந்திப்பின் போது இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவருக்கு இலங்கையின் அரசியல் நிலைமைகள் குறித்து மகிந்த ராஜபக்ஷ விளக்கியுள்ளார்.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன்னர் இந்திய தூதுவரும் மகிந்தவை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1664

Search for people, places and things


### ஆரோன்

ஒருவனிடம் துக்கமும் தூக்கமும் எப்போது குறையுமோ அப்போதே அவன் மேதையாகிறான்




### பிரகலாதன்

யாரையும் அற்பமாக நினைத்து விடாதீர்கள்.. சிறிய தீக்குச்சியின் எளிமைதான் பெரும் இரும்பையே கிழித்தெறிகிறது



### கவிஷ்னா

கலங்கிய நீரும் குழம்பிய மனமும் ஒருநாள் தெளிந்தே தீரும்... கவலை வேண்டாம்.. இதுவும் கடந்து போகும்



### யாதவன்

மரியாதைக்கு விலை இல்லை. ஆனால் அது எல்லாவற்றையும் விலைக்கு வாங்கிவிடும்



### உலகநாதன்

பணிவு என்பது தாழ்மையின் சின்னம் அல்ல... அது உயர்ந்த பண்பின் அறிகுறி



### கிருஷ்ணா

காதல் வரமா, சாபமா வயோதிபத்திலும் மனைவியை சுற்றிச் சுற்றி ரசித்திடும் காதல் வரம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

189



“ இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புகையிரதப் பாதை கள் திறக்கப்பட்டபோது இந்த இடங்களில் சனத்தொகைப் பெருக்கம் ஏற்பட்டது.1901 குடிசன மதிப்பின்படி யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் மக்கள் தொகைச் செறிவு சதுர மைல் ஒன்றுக்கு 200 இற்கும் அதிகமாகவிருந்தது. 1871 ஆம் ஆண்டு குடிசன மதிப்பு யாழ்ப்பாணக் கிராமங்களை நான்கு அல்லது ஐந்து பிரிவுகளாகக் கணித்தது. ஒவ்வொரு பிரிவும் சராசரி 75 குடும்பங்களைக் கொண்டிருந்தன ”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

பெருந்தோட்டத்துறையில் வேலை செய்வதற்காக இலங்கைக்குக் குடிபெயர்ந்த இந்தியர்களின் தொகை காரணமாக மலைநாட்டு மாவட்டங்களில் சனத்தொகைப் பெருக்கம் அதிகரித்தது.

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கு யாழ்ப்பாணத் தமிழர் விவசாயம் செய்வதற்காக இடம் பெயர்ந்ததனால் இந்த இடங்களில் சனத்தொகைப் பெருக்கம் அதிகரித்தது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் சனத்தொகை குறைவாகவே காணப்பட்டது. மலேரியா நோயும் போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி, போதுமான நீர்ப்பாசன முறைமைகள் இல்லாமை என்பன இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

ஆயினும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புகையிரதப் பாதைகள் திறக்கப்பட்டபோது இந்த இடங்களில் சனத்தொகைப் பெருக்கம் ஏற்பட்டது.

1901 குடிசன மதிப்பின்படி யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் மக்கள் தொகைச் செறிவு சதுர மைல் ஒன்றுக்கு 200 இற்கும் அதிகமாகவிருந்தது. 1871 ஆம் ஆண்டு குடிசனமதிப்பு யாழ்ப்பாணக் கிராமங்களை நான்கு அல்லது ஐந்து பிரிவுகளாகக் கணித்தது. ஒவ்வொரு பிரிவும் சராசரி 75 குடும்பங்களைக் கொண்டிருந்தன.

1872 இல் வடமாகாணத்தில் காணப்பட்ட தமிழர் சனத்தொகையையிட்டு மோணிங் ஸ்ரார் எமக்குத் தேவையான தகவல்களைத் தருகின்றது. இந்தப் புள்ளிவிபரங்கள் இலங்கையின் மக்கள் தொகை புள்ளிவிபரங்கள் பற்றிய எந்தவொரு இரண்டாம் நிலை ஆதாரங்களிலும் காணப்படவில்லை.

மிஷன்கள் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் தமது வேலைகளுக்காக ஒழுங்கு முறையான புள்ளிவிபரச் சேகரிப்பை மேற்கொண்டிருந்தன.

மோணிங்ஸ்ரார் இந்த மிஷன் அறிக்கைகளிலிருந்து மேற்படி புள்ளிவிபரங்களைக் பெற்றிருக்கலாம். இவை மிஷன்களுடைய சமய, கல்வி ஆர்வங்களுடன் மட்டுமே தொடர்புடையவையாய் இருக்காது. நாம் அத்தியாயம் மூன்றில் பார்த்து போன்று பொதுவான சனத்தொகையையும் உள்ளடக்கியுள்ளன.

இக்கணிப்பின்படி யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் சனத்தொகை 265,880 ஆகவும் மன்னாரில் 21,561 ஆகவும் முல்லைத்தீவில் 7;636 ஆகவும் வவுனியாவில் 7,634 ஆகவும் காணப்பட்டது. மொத்தச் சனத்தொகை 302,711 ஆகவிருந்தது.

1901 குடிசனமதிப்பின் படி மக்கள்தொகை யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் 300,851, மன்னாரில் 24,926, வவுனியாவில் 15,159 என்ற அளவில் காணப்பட்டது.

1901 ஆம் ஆண்டு குடிசன மதிப்பில் முல்லைத்தீவின் சனத்தொகைப் புள்ளிவிபரம் எதுவும் இல்லை. மட்டக்களப்புச் சனத்தொகை 145,161 ஆகவும் திருகோணமலையில் 28,441 ஆகவும் இருந்தது.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் தமிழர் இலங்கையின் ஏனைய பாகங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் இடம்பெயர்ந்தபோதிலும் 1901 இல் அங்கு சனத்தொகை 34,971 ஆல் அதிகரித்தது.

வவுனியாவின் சனத்தொகை இரு மடங்காகியதை இப்புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இதற்கு விவசாயச் செழிப்பு, தொழில் முயற்சி என்பன காரணமாக இருக்கலாம்.

பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு காலங்களில் இலங்கையின் பொதுவான சனத்தொகை அதிகரிப்பில் தமிழரும் ஒரு பாகமாக இருந்தபோதிலும் இலங்கையின் சனத்தொகை வள்ர்ச்சி நாடு முழுவதும் பரம்பலிலோ, வளர்ச்சி விகிதத்திலோ ஒரே தன்மையாக இருக்கவில்லை.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் சனத்தொகை வருடமொன்றுக்கு 0.7 இலிருந்து 0.9 சதவீதத்தினால் அதிகரித்தபோதும் இலங்கை முழுவதற்குமான சதவீத சனத்தொகை அதிகரிப்பிலும் பார்க்கக் குறைவாகவே இருந்தது. மக்கள் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்தமையாலே தான் பெரும்பாலும் இவ்வாறிருந்தது.

மக்கள் அடர்த்தி மிக அதிகமாகக் காணப்பட்ட பிரதேசங்களில் சனத்தொகை சதுரமைல் ஒன்றுக்கு 1700 பேராகவிருக்க, ஏனைய சில பிரதேசங்களில் சதுரமைல் ஒன்றுக்கு 15 பேர் மட்டுமே காணப்பட்டனர். பழைய கிராமப் பிரதேசங்கள் மிகவும் அதிக சனநெருக்கம் கொண்டவையாக இருந்தன.

இலங்கை முழுவதிலுமே யாழ்ப்பாண நகரில்தான் மக்கள் அடர்த்தி மிகவும் அதிகமாகவிருந்தது. 1921 குடிசனமதிப்பின்படி இது பயிர்ச்செய்கைக்கு உட்பட்ட சதுரமைல் ஒன்றுக்கு ஐந்தாயிரம் பேராக இருந்தது.

இவ்வகையான மேலதிக சனத்தொகை இந்தப் பிரதேசத்தின் பொருளாதார, சமூக முறைமைகளின் மேல் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தி அதன் காரணமாக அங்கு வாழ் மக்களுக்கு நேரடியானதும் சாதகமற்றதுமான விளைவுகளை ஏற்படுத்தியது.

இந்த மேலதிக சனத்தொகையும் நிலம் மற்றும் ஏனைய வளங்களின் மட்டுப்படுத்தப்பட்ட தன்மையுமே யாழ்ப்பாணத்தின் தொழில்முயற்சி மிக்கவர்களை கிழக்கிற்கும் தெற்கிற்கும் இடம்பெயர வைத்தன.

இவர்கள் முதலில் கொழும்புக்கும் பின்னர் அங்கு நிலவிய அதிகரித்த பொருளாதாரப் போட்டி காரணமாக ஏனைய சிங்களப் பிரதேசங்களுக்கும் மத்திய மலைநாட்டுப் பெருந்தோட்ட நகரங்களுக்கும் இடம்பெயர்ந்தனர்.

(தொடரும்)

# வரவு-செலவுத்திட்டம் - 2019

## "என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா – மக்களை வலுவூட்டலும் வறியோரைப் பராமரித்தலும்" 02



❖ இலங்கை கறுவா, அதன் உற்பத்திகளின் தனித்தன்மையினைப் பேணும் வகையில் நாட்டின் உற்பத்தி அடையாளத்தினை பாதுகாத்தல் என்ற கொள்கைக்கிணங்க புவியியல் தனித்தன்மை அடையாளத்தினை (Geographical Indications) பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அதனைப் பேணுவதற்காக ஆதரவளிக்கப்படும்.

❖ சிறந்த நீர் முகாமைத்துவத்தினை உறுதி செய்யும் முகமாக விவசாய மற்றும் பெருந்தோட்டத் தொழில்துறை என்பவற்றுக்கு வசதியேற்படுத்திக் கொடுக்கும் முகமாக நடைமுறைப்படுத்தப்படும் மொரகஹகந்த களுகங்கை பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம்.

எதிர்வரும் 2020 இல் நிறைவுபடுத்தப்படும். வயம்ப கால்வாய், மினிப்பே மற்றும்வடமத்திய மாகாண கால்வாய்கள் என்பன மூலம் மொரகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து நீர் பற்றாக்குறையுள்ள பிரதேசங்களுக்கு நீரைக் கொண்டு செல்வதற்கான செயற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இதன் மூலம் சிறு போக மற்றும் பெரும்போக நெற்செய்கை உறுதிப்படுத்தப்படும். இச்செயற்பாடுகளை ஆரம்பிக்கும் முகமாக நாம் ஏற்கெனவே ரூபா 12,000 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளோம். தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தேயிலைச்சபையுடனான கலந்துரையாடல் மூலம் உடனடித் தீர்வொன்று பெற்றுக் கொடுக்கப்படும்.

❖ "நங்வமு லங்கா" எனும் தொனிப்பொருளில் நுண் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்திச் செயற்றிட்டத்தினை நான் முன்மொழிகின்றேன்.

❖ தெதுறு ஓயா செயற்திட்டம், மாணிக்க கங்கை நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் மொரான நீர்த்தேக்கத் திட்டம் என்பன உள்ளடங்கலாக 7 பிரதான கருத்திட்டங்களில் கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டு நிர்மாணப் பணிகளை பூரணப்படுத்துவதற்காக 2019 இல் மேலும் ரூபா 2,410 மில்லியன்களை ஒதுக்கியுள்ளேன். இவற்றின் மூலம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சுமார் 21,000 குடும்பங்கள் நேரடிப் பயனைப் பெறுவார்கள்.

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் மீன்பிடி உற்பத்திகளுக்கான அதன் சந்தையைத் திறந்துள்ளதுடன் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மொத்த கடல் உணவு ஏற்றுமதிகளானது 14 சத வீதத்தினால் அதிகரித்து 2018 இல் அதன் பெறுமதி 290 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகும். அதேவேளை வேண்டப்படும் தரத்தினைப் பேண முடியாமையானது தொடர்ந்தும் நிரம்பலுக்கான தடையாகக் காணப்படுகிறது.

❖ நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் துறைமுக புனர்நிர்மாண வேலைத்திட்டம், நங்கூரத்தளம் மற்றும் இறங்கு தளங்கள் ஆகிய வேலைத்திட்டங்களை நிறைவு செய்வதற்காக ரூபா 1,300 மில்லியன் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பருத்தித்துறை மற்றும் பேசாலை ஆகிய 2 புதிய துறைமுகங்களை அமைப்பதற்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கும் மண்டைதீவில் நங்கூரத்தளத்தினை அமைப்பதற்குமான வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

❖ நீண்ட வரிசைப் படகுகள் மற்றும் பல்தின படகுகளின் களஞ்சிய வசதிகள் மற்றும் பாதுகாப்பு நியமங்களை மேம்படுத்துவதற்கான உதவிகள் வழங்கப்படும். இதற்காக "என்டர்பிறைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் "ரண் அஸ்வன்ன" சகாய கடன் திட்டத்தின் கீழ் அரசாங்கம் 50 சதவீத செலவினை ஏற்றுக்கொள்கின்றது. (விளக்கக் குறிப்பு III(ஆ)-1.1) இதற்கு மேலதிகமாக குளிரூட்டப்பட்ட கடல் நீரை பேணுவதற்கான பொறியினைக் கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்துதல் மற்றும் அதிகுளிரூட்டப்பட்ட கடல்நீர் முறைமையைப் பொருத்துவதனூடாக பிடிக்கப்படும் மீன்களின் தரத்தினைப் பேணுதல், கப்பல் கண்காணிப்பு முறைமை, படகிலுள்ளவர்களைக் கண்டு பிடிப்பதற்கான நுண்ணிய தேடுதல் கருவிகள் போன்ற பாதுகாப்புக் கருவிகளை பெற்றுக்கொள்வதற்கு மிகுதி 50 சதவீத நிதியினை இத்திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்.

### சமூகப் பராமரிப்பு முன்னெடுப்புகள்

❖ நாம் ஆரம்பப் பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கு இலவசமாக பால் வழங்குவதன் மூலம் அவர்களின் ஊட்டச்சத்தினை மேம்படுத்துவோம். இச் செயற்றிட்டம் இலங்கை முழுவதுமுள்ள கிராமிய பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படும்.

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, நாம் வலுவிழந்த மற்றும் சமூகத்தில் பின்தள்ளப்பட்டவர்களின் உரிமைகளை வலுப்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தும் அதேவேளை, அனைத்து மக்களினதும் உரிமைகளையும் உறுதிப்படுத்துவோம். அதேநேரம் எமது சமூகத்தில் பொருளாதார சுதந்திரம் மற்றும் மக்களின் வலுவூட்டலினை தடுக்கும் சமத்துவமின்மையை நீக்குதல் வேண்டும்.

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நாடு நடுத்தர வருமானம் பெறும் நாடு என்ற அந்தஸ்தினை அடைந்திருக்கும் நிலையில், அதிநவீன அதிவேக நெடுஞ்சாலைகள் அமைப்பதில் பல மில்லியன்களை முதலீடு செய்து கொண்டிருக்கும் அதேவேளை எமது நாட்டில் சுமார் 260,000 வீடுகள் அடிப்படை துப்புரவேற்பாடுகளற்ற நிலையில் காணப்படுகின்றன. உதாரணமாக அம்பாந்தோட்டை மாவட்டமானது கலிபோர்னியா பாணியில் பாரிய கருத்திட்டங்கள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகள், சீன பாணியில் மாநாட்டு மண்டபங்கள் மற்றும் விளையாட்டுத் தொகுதிகள் என்பவற்றைக் கொண்டிருந்த போதிலும் 15,000 இற்கும் மேற்பட்ட மக்கள் அடிப்படை துப்புரவேற்பாடுகளற்ற நிலையில் வாழ்கின்றனர். ஆகவே, நாட்டில் காணப்படும் துப்புரவேற்பாடுகளற்ற அனைத்து வீடுகளுக்கும் இரண்டு வருடங்களுக்குள் மலசலகூட வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படும். இதன் மூலம் ஒரு மில்லியன் மக்கள் பயன் பெறுவர். (விளக்கக் குறிப்பு III (இ)

❖ பேருந்து நிலையங்கள் மற்றும் புகையிரத நிலையங்களில் காணப்படும் துப்புரவேற்பாட்டு வசதிகள் மிகவும் சீரற்ற நிலையில் காணப்படுகின்றன. ஆண்கள், பெண்கள் மற்றும் அங்கவீனர்களுக்கென பிரத்தியேகமான வசதிகளுடன் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இவ்வசதிகள் மேம்படுத்தப்பட்டதன் பின்பு இவற்றைப் பராமரிப்பதற்காக தனியார் துறையினர் அழைக்கப்படுவர்.

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது பல்கலைக்கழகங்களில் 50 சதவீதம் அல்ல, அதற்கு மேற்பட்டோர் பெண் மாணவிகளாகக் காணப்படுவதையிட்டு நாம் பெருமைப்படும் அதேவேளை, தொழிற்படையில் பெண்களின் வீதமானது 30 சதவீதமாகவே காணப்படுகின்றது. இது அவர்களை நிதி ரீதியில் தங்கியிருப்போராகவும் மற்றும் வலுவிழந்தவர்களாகவும் மாற்றியுள்ளது. பொருத்தமான சிறுவர் மற்றும் முதியோர் பராமரிப்பு வசதிகள் மற்றும் நெகிழ்ச்சியற்ற தொழில் சட்டங்கள் என்பன பெண்கள் தொழிற்படையிலிருந்து வெளியேறுவதற்கு அல்லது நுழைவதற்கு தடையான பிரதான காரணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

❖ இந்நிலைமையைத் தவிர்க்கும் முகமாக 250 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டுள்ள வர்த்தக நிறுவனங்களில் குழந்தைப் பராமரிப்பு வசதிகளை உருவாக்குவதை ஊக்குவிக்கின்றேன். அதேபோல் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் பாடசாலைக்கு பின்னரான விடுமுறை நிலையங்களை உருவாக்குவதற்கு உதவியளிக்கப்படும். "என்டர் பிறைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் "ரக்கவர்ண" சலுகைக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குழந்தைப் பராமரிப்பு வசதிகளை உருவாக்குவதற்கு தனியார் துறையினருக்கு வசதியளிக்கப்படும்.

❖ மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சானது குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள், பாடசாலை நேரத்திற்குப் பிந்திய விடுமுறை பராமரிப்பு நிலையங்கள் மற்றும் அது போன்ற ஏனைய வசதிகளின் உருவாக்கம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை வெளியிடும்.

❖ தொழிற்படையில் பெண்களின் வரையறுத்த பங்குபற்றலானது பொருளாதார வளர்ச்சிக்கான இடையூறொன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. தனியார்துறையில் பணியாற்றும் பெண்களுக்கு வசதியளிப்பதனை நாங்கள் ஊக்குவிப்போம் மூன்று மாதங்களுக்கான கட்டாய பிரசவ விடுமுறை காலத்திற்கான சம்பளத்தில் 50 சதவீதத்தினை நிறுவன வரியினை கணிப்பீடு செய்யும் போது மேலதிகமாக கழித்துக் கொள்வதற்கு இடமளிக்கப்படுவதோடு, ஊழியரொருவருக்கு உயர்ந்த பட்சமாக மாதத்திற்கு 20,000 ரூபாவினைக் கழிப்பதற்கு அனுமதிக்கப்படும். 4 ஆவது மாதத்திற்கான பிரசவ விடுமுறைக்கு இம் மேலதிகக் கழிப்பனவினை 100 சதவீதமாக நாங்கள் அதிகரிப்போம். இச்சலுகையானது 5 வருட காலத்திற்கு ஏற்புடையதாகும்.

❖ நாட்டின் சனத்தொகையில் பெண்கள் 50 சதவீதத்திற்கு மேற்பட்டதாகக் காணப்படினும், வியாபாரத்துறை உயர் பதவிகளில் அவர்களின் தோற்றமானது மிகவும் வரையறுக்கப்பட்டதாகும். இது பல்வேறுபட்ட சமூகக் கட்டமைப்பு மற்றும் வியாபார நடைமுறைகளால் உருவாக்கப்பட்டதாகும். அதனால் பெண்ணானவள் சமூகத்தில் முக்கிய தீர்மானமெடுக்கும் வகிபாகத்திலிருந்து தடுக்கப்படுகின்றாள். ஆகவே பங்குச் சந்தையில் நிரல்படுத்தப்பட்ட கம்பனிகளின் இயக்குநர் சபைகளில் பெண்களின் அதிகளவான பங்குபற்றுதலினை ஊக்குவிப்பதற்காக தொடர்ச்சியான அணுகுமுறை ஒன்றினை முன்மொழிகின்றேன். பிணையங்கள் மற்றும் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு இம்முன் மொழிவினை செயற்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படும்.

❖ பெண்கள் பெருமளவில் பொருளாதார நடவடிக்கைகளில் பங்குபற்றக் கூடியவகையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு அவர்கள் பகுதி நேர வேலை, நெகிழ்ச்சியான வேலை நேரம் மற்றும் வீட்டிலிருந்து வேலையாற்றல் போன்றவற்றிற்கு இடமளிக்கும் வகையில் தொழில் சட்டத்தினை திருத்துவதற்கு இச்சபையின் ஆதரவினை வேண்டிக் கொள்கின்றேன்.

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டில் முதியோர் பாதுகாப்பு நிலையங்களின் தரமானது பொருத்தமான ஒழுங்குபடுத்துதல் வேலைச் சட்டகம் மற்றும் போதியளவான சேவை வழங்கல் காணப்படாமையினாலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. ஆகவே, தேசிய முதியோர் செயலகமானது வலுப்படுத்தப்படுவதோடு பொருத்தமான ஒழுங்குபடுத்தல் சட்டகத்தினை உருவாக்குமாறும் வேண்டிக் கொள்கின்றோம். மேலும் "என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் "ரக்கவர்ண" சலுகைக் கடன் திட்டத்தினூடாக தனியார் துறையினர் முதியோர் பராமரிப்பு வசதிகளில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிப்பு அளிக்கப்படும்.

❖ தற்போது மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக ரூபா 3,000 வழங்கப்படுகின்றது. இம்மாதாந்த கொடுப்பனவை 5,000 ரூபாவாக அதிகரிப்பதோடு மேலதிகமாக தகுதிபெற்ற குறைந்த வருமானம்பெறும்72,000 பேரை உள்வாங்குவதற்கும் ரூபா 4,320 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும். இவ்வொதுக்கீடு மூலம் காத்திருப்புப் பட்டியல் நீக்கப்படும்.

❖ அனைவரையும் உள்ளடக்கிய தொழில் வாய்ப்பினை ஊக்குவிக்கு முகமாக குறைந்தபட்சம் 5 மாற்றுத்திறனாளிகளுக்கு தொழிலில் வழங்கும் நிறுவனங்களுக்கு ஒரு நபருக்கு 50 சதவீதமான சம்பளம் மானியமாகப் பெற்றுக் கொடுக்கப்படும்.

இது ஆளொருவருக்கு ஆகக்கூடியது 15,000 ரூபாவாக 24 மாதங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

# பெண்கள் பொருளாதார நடவடிக்கையில் பங்கேற்பு

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

❖ அதேபோன்று தற்போது 21,000 தீராத சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்தம் ரூபா5,000உதவித்தொகையாக வழங்கப்படுகின்றது. மேலும் 5,000 நோயாளிகளை உள்வாங்கும் வகையில் இத்திட்டமானது விரிவுபடுத்தப்படும். இதன் மூலம் உதவித் தொகைக்காகக் காத்திருப்போர் பட்டியல் நீக்கப்படுவதோடு இதற்காக ரூபா 1,840 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ எமது சிறைச்சாலைகளானது போதைப்பொருள் கடத்தல்காரர்களன்றி போதைப்பொருள் மாபியாக்களினால் பாதிக்கப்பட்ட அப்பாவிகளினால் நிரம்பி வழிகின்றன. இவர்களில் பெரும்பாலானோர் 30 வயதிற்குக் குறைவானவர்களாகும். இவர்களை பாரிய குற்றவாளிகளுடன் அடைத்து வைப்பது அவர்களை போதைப்பொருள்பாவனையிலிருந்து தடுப்பதற்கான சிறந்த முறையாகாது. இவ்வாறான கைதிகளுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான வசதிகளுடன் சிறைச்சாலை திணைக்களத்தின் மேற்பார்வையில் அம்பேபுஸ்ஸ மற்றும் வீரவில ஆகிய இடங்களில் 2 "கிப்புட்ஸ்" முறையிலான பண்ணைகள் உருவாக்கப்படும். இம்முயற்சியில் தனியார்துறை மற்றும் சிவில் சமூகம் பங்குபற்றுவது ஊக்குவிக்கப்படும்.

❖ தற்போது சிறிய குற்றங்களுக்காக தண்டனை வழங்கப்பட்ட பெண்களினால் சிறைச்சாலைகள் நிரம்பிக் காணப்படுகின்றது. அவர்கள் தனிமையில் விடப்படுவதுடன் எவ்வித கவனிப்புமற்று புனர்வாழ்வளிக்கப்படாத நிலையில், அவர்களும் பாரிய குற்றவாளிகளாக மாற்றப்படலாம். ஆகவே, சிறந்த வசதிகளுடன் தொழிற்பயிற்சி மற்றும் அபிவிருத்தி துறைகளான கலை, கைவினை மற்றும் வினைத்திறன்மிக்க வாழ்வாதார திறன்களுடன் பயிற்சி வசதிகளைக்கொண்ட நிலையமொன்றினை தொம்பே பிரதேசத்தில் உருவாக்கப் பொருத்தமான இடத்தினை அடையாளங் காண்பதற்கு முன்மொழிகின்றேன்.


❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, 2018 ஆண்டுக் காலப்பகுதியில் மக்களின் வீட்டுத் தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதில் குறிப்பிடும்படியான முன்னேற்றத்தினை நாம் அடைந்துள்ளோம். எமது முயற்சியானது விசேடமாக சமூகத்தின் வலுவிழந்தவர்களுக்கான வீட்டு வசதிகளை பெற்றுக் கொடுப்பதுடன், அனைவரினதும் வீட்டுப் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு வசதியளிப்பதுமாகும். விசேடமாக குறைந்த வருமானம் பெறும்நகர, கிராமிய, பெருந்தோட்டத் தொழிலாளர் மற்றும் வடக்குக் கிழக்கு ஆகிய வீடமைப்புப் பிரச்சினைகளை தீர்ப்பதாகும். இது பிரதானமாக நகர மீள் உருவாக்கும் கருத்திட்டம் மற்றும் மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றினூடாக அமுல்படுத்தப்படும். இதற்காக ரூபா 24,500 மில்லியன் ஏற்கனவே 2019 இல் ஒதுக்கப்பட்டுள்ளன.

❖ அதேவேளை, 2019 ஆம் ஆண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 15,000 செங்கற்களிலாலான வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும். இதற்காக ரூபா 4,500 மில்லியன் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக மேலும் ரூபா 5,500 மில்லியன் பெற்றுக் கொடுக்கப்படும். வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளானது தொடர்ந்தும் அமுல்படுத்தப்படுவதுடன், தேவையான வளங்களும் பெற்றுக் கொடுக்கப்படும்.

❖ பல நியாயமாக விலையிடப்பட்ட நடுத்தர வருமான வீடமைப்புத் திட்டங்கள் ஏற்கனவே பூரணப்படுத்தப்பட்டுள்ளன. 2019ஆம் ஆண்டில் வாத்துவை, ராகமை, யக்கல, குண்டசாலை, பொரளை மற்றும் பன்னிப்பிட்டிய போன்ற இடங்களில் தேசிய வீடமைப்பு அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேலும் சில வீடமைப்புத் திட்டங்கள் பூரணப்படுத்தப்படவுள்ளதுடன் ஆரம்பிக்கப்படவுமுள்ளன.

❖ எவ்வாறாயினும், விசேடமாக நடுத்தர வருமானம் பெறும் முதற் தடவையாக வீட்டினைக்கொள்வனவு செய்யும்புதிய இளம் தம்பதிகளுக்கு வீடொன்றினைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது தங்களது முதல் வீட்டினை நிர்மாணித்துக் கொள்வதற்கு "என்டர்பிறைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இக் கடன் திட்டத்தின் கீழ் "ஹோம் ஸ்வீட் ஹோம்" கடன் திட்டமானது ரூபா. 10 மில்லியன் வரை 6 சதவீத வட்டியில் 25 வருட காலத்தில் திருப்பிச் செலுத்தல் என்றவகையில் பெற்றுக் கொள்ளலாம். இக் கடன் திட்டமானது தனியார் துறையினால் நிர்மாணிக்கப்படும் வீடுகள் அல்லது நடுத்தரத்திலான மாடி வீடுகளை கொள்வனவு செய்வதற்கும் பெற்றுக் கொடுக்கப்படும்.

❖ எமது வெளிநாட்டுத் தொழிலாளர்கள் வீடொன்றினைக் கட்டிக் கொள்வதில் பெரும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். ஆகவே, அவர்களது வீடொன்றினைக் கட்டிக் கொள்ளும் கனவினை நிறைவேற்றக் கூடிய வகையில் "என்டபிறைஸ் ஸ்ரீலங்கா"



நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் "சிகின மாளிகா" சலுகைக் கடன் திட்டமானது அறிமுகப்படுத்தப்படும். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து தற்போது வெளிநாட்டில் வேலை செய்பவர்கள் இக் கடன் திட்டத்தின் கீழ் ரூபா 10 மில்லியன் வரை 15 வருட காலத்தில் திருப்பிச் செலுத்தல் என்றவகையில் பெற்றுக் கொள்ளலாம். இக் கடனுக்கான வட்டிச் செலவீனத்தில் 75 சதவீதத்தினை அரசாங்கம் பொறுப்பேற்கும். (விளக்கக் குறிப்பு III (ஆ)-1.17) வெளிநாட்டில் வேலை புரியும் குடும்பங்களுக்கு உதவியாக சர்வதேச தொலைத் தொடர்பு அறவீடானது நீக்கப்படும்.

### உலக சந்தையுடன் இணைதல்-ஏற்றுமதி

❖ ஏற்றுமதி மற்றும் ஏனைய வெளிநாட்டு வருமான மூலங்களைத் துரிதப்படுத்துதல்நிலைபேரான பொருளாதார வளர்ச்சி மற்றும் கடன் மீள் கொடுப்பனவு இயலுமை என்பவற்றிற்கு மிக முக்கியமானதாகும் 2018ஆம்ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் நாங்கள் ஏற்றுமதிச் சந்தைப் பிரவேச நிகழ்ச்சித் திட்டம் மற்றும் தேசிய ஏற்றுமதி உபாயத் திட்டம் என்பவற்றின் வெளியீட்டினை அறிவித்தோம். இவ்வருடமும் அவற்றிற்கான ஆதரவுகள் தொடரப்படுவதுடன், ஏற்றுமதி சந்தை பிரவேச நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 400 மில்லியன்களும், தேசிய ஏற்றுமதி உபாயத் திட்டத்திற்கு ரூபா. 250 மில்லியன்களும் ஒதுக்கப்படும். தேசிய ஏற்றுமதி உபாயமானது தேசியத் தரத்திலான உட்கட்டமைப்பு உபாயத்தினை அமுல்படுத்துவதினையும் உள்ளடக்கியதாகும். இது ஏற்றுமதி உற்பத்திப் பொருள் அபிவிருத்தி மற்றும் இறக்குமதித் தர பரிசோதனை என்பவற்றிற்கான தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதற்கான அரச தனியார் பங்களிப்பாகும்.

❖ அரசாங்கமானது பல வர்த்தக உடன்படிக்கைகளின் வலைப்பின்னல் உபாயத்திற்கு அர்ப்பணித்துள்ளது. இவை பிராந்திய பெறுமதிச் சங்கிலிகளுடன் தொடர்புபட்டதாகும். சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் வெற்றிகரமான பூரணப்படுத்தலுடன், இதன்செய்முறையின்போது கற்றுக் கொண்ட பாடங்களானது தற்போது கலந்துரையாடப்பட்டு வரும் இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்துடனான சுதந்திரமான வர்த்தக உடன்படிக்கைகளின் கலந்துரையாடலின் போது கவனத்திற் கொள்ளப்படும்.

❖ ஒரு "இந்தியச் சந்தைக்கான நுழைவு" மற்றும் "சீன சந்தைக்கு நுழைவதற்கான உபாயம்" இச் சந்தைகளில் இலங்கை தொழில் முயற்சியாளர்களின் வெற்றிகரமான வரலாறுகளின் அடிப்படையில் இவ்வுபாயங்கள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இச்செயற்பாடானது தனியார் துறையின் பங்களிப்புடன் முக்கிய சந்தைகளின் முன்னுரிமைத் துறைகளுக்கான வர்த்தக இல்லங்கள் உருவாக்கப்படுவதினூடாக ஆதரவளிக்கப்படும். இவ்வர்த்தக இல்லங்களானது இலங்கை நிறுவனங்கள் அச்சந்தைகளில் விநியோக வலையமைப்புக்களை தேடிக்கொள்ளுதல், கொள்வனவாளர்கள் தொடர்புகள் மற்றும் ஏனைய தள உதவிகளை பெற்றுக்கொள்வதில் உதவிகளைப் பெற்றுக் கொடுக்கும்.

❖ வாழ்க்கைச் செலவினைக் குறைத்தல் மற்றும் பொருளாதாரத்தில் ஒப்பீட்டு அனுகூலத்தினை மேம்படுத்தும் ஒரு அளவுகோளாக கடந்தவருட வரவு-செலவுத் திட்டத்தில் அனைத்து துணைத் தீர்வைகளையும் கட்டம் கட்டமாக நீக்குவதற்கு முன்மொழியப்பட்டது. இது 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 1200 துணை வரிகளை நீக்குவதுடன் ஆரம்பமாயிற்று. இச்செயற்பாடானது அனைத்து இயைபு முறைக் குறியீடுகளும் ஒரு இறக்குமதி செஸ்வரி மூலம் இல்லாதொழிக்கப்படுகின்ற வகையில் 2019ஆம் ஆண்டிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். கைத்தொழில்கள் இதற்கு இயைபாகுவதற்கு அவசியமான காலஅவகாசத்தினைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் துணைத் தீர்வை இல்லாதொழித்தலானது ஐந்து வருடங்களுக்கு இடம்பெறும்

❖ வியாபாரங்கள் மற்றும் முதலீடுகளின் மீதான ஆரம்பச் செலவினை குறைக்கும் முகமாக பொறிகள் மற்றும் உபகரணங்கள்மீதான (இயைபு முறைக் குறியீடு அத்தியாயம் 84 மற்றும் 85) துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடுகளை உயர்ந்த பட்சம் 2.5 சதவீதமாக குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். மேலும் நிர்மாணத் துறை, சுற்றுலா மற்றும் தயாரிப்புத் துறைகளின் கிரயத்தினை அதிகரிக்கச் செய்யும் இடைநிலைப் பொருட்கள் மீதான செஸ் வரியினை குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்தினைத் துரிதப்படுத்துவதற்கும் நான் முன்மொழிகின்றேன். இப்பொருட்கள் மீதான செஸ் வரியானது மூன்று வருட காலத்தின் போது இல்லாதாக்கப்படும்.

❖ இச்செயன்முறையின் போது இறக்குமதிகளின் மூலம் பாரிய போட்டித் தன்மையினை எதிர்கொள்ளும் உள்ளூர் கைத்தொழில்களுக்கு ஆதரவளிப்பது இன்றியமையாததாகும். மிகைப் பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான சட்டவாக்கம் இச்சபையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வர்த்தக சீராக்கல் நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது வலுவிழுந்த நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்கள் தமது தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் பயிற்சிகள் மீதான செலவுகளை ஈடுசெய்வதற்கு நிதியுதவிகளை பெற்றுக் கொடுக்கும். அனைத்து இயைபு நிலைக் குறியீடுகளிலும்10 வீதமானவை மிகவும் உணர்வுபூர்வமானபொருட்களாகும் இவை முழுமையான துணைத் தீர்வை ஒழிப்பிற்கு உட்பட மாட்டாது என்பதனை நாம் உறுதிப்படுத்துகின்றோம். இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களினதும் தர நிர்ணயத்தினை உறுதி செய்யும் முகமாக தேசிய தர உட்கட்டமைப்பிற்குத்தேவையான மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ வர்த்தக சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்கும் முகமாக உபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் கீழ் ஒரு வர்த்தக மற்றும் உற்பத்தித் திறன் ஆணைக் குழுவினை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். வர்த்தக சீராக்கல் நிகழ்ச்சித்திட்டத்தினை இரண்டு வருடங்களில் அமுல்படுத்துவதற்கு ரூபா 500 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

❖ நாங்கள் தொழில் முயற்சி புத்தாக்க நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பிக்கவுள்ளோம். இது இலங்கை நிறுவனங்களினால் புதுமையான புதிய பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்வதற்கு மற்றும் கண்டுபிடிப்பதற்கு உதவியளிக்கும். இத்திட்டமானது 3 வருட காலப்பகுதியில் அமுல்படுத்தப்படும். கருப்பொருளுக்கான ஆதாரம், ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும்தொழில்நுட்ப உள்வாங்கல் என்பன மீதான பொருத்துகை மானியம் பெற்றுக் கொடுக்கப்படும். **(தொடரும்)**




# வட்டிக்கு சேர்த்த பணம்



கண்ணனூர் என்னும் ஒரு ஊரில் குஞ்சம்மாள் என்னும் பாட்டி வாழ்ந்து வந்தார். பாட்டிக்கு எப்பொழுதும் பயம் தான். தன்னுடைய எதிர்கால வாழ்க்கைக்கு நிறைய சேமித்து வைக்க வேண்டும் என்று அந்த ஊரில் உள்ள ஏழைகளுக்கு அநியாய வட்டிக்கு விட்டு சம்பாதித்தாள். சரியான முரட்டுப் பேர்வழியாக இருந்தாள். ஒரு நாள் வட்டி கொடுக்க தாமதமானாலும் உடனே அபராத வட்டி போட்டு வாங்கி விடுவாள். இதனால் அங்குள்ள ஏழைகள் மிகுந்த துன்பப்பட்டனர்.

அங்குள்ள ஏழை மக்கள் மிகவும் வருத்தப்படுவார்கள். இந்தப் பாட்டிக்கு ஏன் இந்த பேராசை, ஏழை மக்களிடம் வட்டி வாங்கி யாருக்கு சேமிக்கிறாள் என்று வருத்தப்படுவார்கள்.

ஒரு நாள் அந்த ஊருக்கு எத்தன் ஒருவன் வந்தான். அவன் பாட்டியை பற்றி கேள்விப்பட்டவன், பாட்டியை ஏமாற்ற வேண்டும் என்று முடிவு செய்தான்.

அதற்காக அவனுடைய கூட்டாளிகள் இருவரை மாறு வேடத்தில் ஜமீந்தார் போல செல்லச் சொன்னான்.

இந்த வீட்டில யார் இருக்காங்க? வாசலில் யாரோ இருவர் வந்து கேட்கவும், வீட்டிற்குள் இருந்த பாட்டி வெளியே வந்தாள். நல்ல உடையணிந்த இருவர் வெளியில் நிற்பதை பார்த்தவள் நீங்கள் யார்? எதற்கு வந்திருக்கிறீர்கள் என்று கேட்டாள். நான் பக்கத்து ஊர் பொன்னையாபுரம் ஜமீந்தார், இந்த ஊரில் கொஞ்சம் நிலம் வாங்கி போட ஆசைப்படுகிறேன், அதற்கு உங்களை மாதிரி பெரிய மனிதர்கள் இரண்டு பேரிடம் இங்கெல்லாம் என்ன விலை விற்கிறது என்று கேட்பதற்காக வந்திருக்கிறேன்.

பாட்டிக்கு ஒரே மகிழ்ச்சி, இரண்டு பெரிய மனிதர்கள் தன்னிடம் வந்து விபரம் கேட்கிறார்கள் என்றவுடன் வாங்க உள்ளே என்று மரியாதையுடன் வீட்டிற்குள் அழைத்து சென்றாள். உள்ளே சென்ற இருவருக்கும் குடிப்பதற்கு நீர் மோர் கொடுத்து மற்ற விபரங்களைப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அம்மா அம்மா, என்று வெளியே ஒரு குரல் கேட்டது. வெளியே வந்த பாட்டி, அங்கு எத்தன் கையில் சிறு மூட்டையுடன் நின்று கொண்டிருந்தான்.

யாரப்பா நீ? உனக்கு என்ன வேண்டும்? பாட்டி கேட்க அம்மா நான் வெளியூர்க்காரன், என் பெண் திருமணத்திற்கு கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது, அதனால் என் மனைவியின் நகைகளை வைத்து உங்களிடம் பணம் பெற்றுச் செல்லலாம் என்று வந்தேன்.

அவன் தான் கொண்டு வந்திருந்த பையை விரித்து அதற்குள் இருந்த நகைகளை காட்டினான். நகைகள் பளீரென்று மின்னின.

பாட்டிக்கு உடனே நம்பிக்கை வரவில்லை, நான் பணம் கொடுப்பதாக உனக்கு யாரப்பா சொன்னார்கள்? இந்த ஊரில் எல்லோரிடமும் கேட்டுப்பார்த்தேன், அவர்கள் எல்லோரும் உங்களை பார்க்கச் சொன்னார்கள் என்று பேசிக் கொண்டிருக்கும் போதே வீட்டிற்குள் இருந்த இருவரும் வெளியே வந்தனர்.

இவன் கையில் இருந்த நகைகளை, வெளியே வந்த இருவரும் இங்கே கொடப்பா பார்க்கலாம் என்று வாங்கிப் பார்த்து தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

பாட்டிக்கு அதை பார்த்தவுடன், விட்டால் பணம் கொடுத்து இவர்களே வாங்கிக் கொள்வார்கள் போலிருக்கிறது என்று நினைத்தாள்.

ஏம்பப்பா இதை விலைக்கு கொடுக்கிறாயா? அந்த இருவரில் ஒருவன் கேட்க,

இவன் யோசித்தான், பணம் அடகு வைக்க கட்டுப்படியாகலையின்னா வித்துடுறது அப்படீன்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன்.

நகைகளை கையில் வாங்கி பார்த்தவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர், எப்படியும் குறைச்சு பேசி எல்லாத்தையும் வாங்கிடலாம், அவர்கள் பேசிக்கொள்வதை கேட்டுக் கொண்டிருந்த பாட்டிக்கு உடனே சபலம் தட்டியது, தானே அந்த நகைகளை வாங்கிக்கொள்ளலாம் என்று முடிவு செய்தவள், இதற்கு எவ்வளவு ஆகும் என்று அவர்களை கேட்டாள், அவர்கள் திரும்பி ஏம்பா இந்த நகைகளை பத்தாயிரத்துக்கு வாங்கிக்கிறோம், அப்படியே கொடுத்திடுறியா? அவன் சற்று நேரம் யோசித்தவன் கொஞ்சம் கூட போட்டுக் கொடுங்க என்று கெஞ்சினான், அதெல்லாம் முடியாது, அந்தப் பணத்துக்கு கொடுக்கிறதுன்னா கொடு. இல்லையின்னா கிளம்பு என்று விரட்டவும், சரிங்க என்று தலையாட்டினான்.

பாட்டிக்கு ஒரே சந்தோசம் உள்ளே ஓடிச் சென்று சேர்த்து வைத்திருந்த பணத்தில் பத்தாயிரத்தை எடுத்து வந்து கொடுத்தவள் அந்த நகைகளை வாங்கி பார்த்து ஆனந்தப்பட்டாள்.

நகைகளை விற்றுவிட்ட எத்தன் மெல்ல நடையைக் கட்டினான், சற்று நேரத்தில் பாட்டியிடம் பேசிக்கொண்டிருந்த இருவரும், தாங்கள் வந்து பார்க்கிறோம் என்று சொல்லி விட்டு கிளம்பினர்.

பாட்டி அவர்களை அனுப்பி விட்டு அந்த நகைகளை மீண்டும் எடுத்துப் பார்த்தாள், உற்று உற்றுப் பார்த்தவளுக்கு அப்பொழுதுதான் சற்று சந்தேகம் வர அதை கொஞ்சம் தேய்த்து பார்த்தாள், உள்ளிருந்த ஈயம் பல்லை காண்பித்தது.

தான் ஏமாந்து விட்டதைத் தெரிந்தவுடன் குய்யோ முய்யோ என்று கூக்குரலிட்டாள்.

பாட்டியின் சத்தம் கேட்டு ஓடி வந்த மக்கள், பாட்டி ஏமாந்ததற்காக வெளியில் வருத்தப்பட்டதாகக் காண்பித்துக் கொண்டாலும் உள்ளுக்குள் சந்தோசப்பட்டுக் கொண்டனர்.

பிறரை துன்புறுத்தி சம்பாதித்து சேர்த்து வைக்கும் பணம் அவர்களை வேதனைப்படுத்தி விட்டோ அல்லது ஏமாற்றி விட்டோ, அடுத்தவரிடம் சென்று விடும்.

அங்கும் அந்த பணம் நிற்காமல் அடுத்தவர் மாற்றி அடுத்தவர்களிடம் பறந்து கொண்டே இருக்கும்.

நேர்மையாகவோ, அல்லது உழைத்தோ சம்பாதிக்கும் பணம் என்றென்றும் உண்மையுடன் நம்மிடம் இருக்கும்.

## பொது அறிவு

• இயேசு கிறிஸ்துவின் தாய் மொழி என்ன?

**அராமைக் (Aramaic)**

• யார் நெடுங்கணக்கு வரிசையின் அடிப்படையில் தமிழ் அகராதி தொகுத்தவர்?

**வீரமாமுனிவர்**

• பலுசிஸ்தானில் உள்ள மக்கள் பேசும் ஒரு திராவிட மொழி எது?

**பிராகுயி, இது திராவிட மொழி**


• எந்த நாடுகளின் தேசிய கொடியில் சூரியன் உள்ளது?

**ஆர்ஜென்டீனா மற்றும் உருகுவே**

• ஆசியாவில் தற்போது உள்ள எந்த ஒரு நகரம் மிகவும் பழைமையான நகரம்?

**பெஷாவர்**

## மழை வருது



மழை வருது மழை வருது
நெல்லு அள்ளுங்க

முக்காப்படி அரிசி போட்டு
முறுக்கு சுடுங்க

ஏரோட்டும் மாமனுக்கு
எண்ணி வையுங்க

சும்மா இருக்குற மாமனுக்கு
சூடு வையுங்க

## பழமொழியும் விளக்கமும்

• பந்திக்கு முந்து! படைக்கு பிந்து!!

**பொருள்:-**

பந்திக்கு முதலில் போய் உட்கார்ந்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் பலகாரம் நமக்கு முழுமையாகக் கிடைக்காது. போருக்கு செல்பவன் படைக்கு பின்னால் நின்று கொள்ள வேண்டும். அப்படி செய்தால், உயிருக்கு ஆபத்து வராது.

**உண்மையான பொருள்:-**

பந்திக்கு முந்து என்பது சாப்பிட போகும் போது நமது வலது கை எப்படி முன்னோக்கி செல்கிறதோ, அது போல போரில், எவ்வளவு தூரம் வலதுகை வில்லின் நாணலை பிடித்து பின்னால் இழுக்கிறதோ, அந்த அளவுக்கு அம்பு வேகமாய் பாயும். இது போருக்கு போகும் வில் வீரருக்காக சொல்லியது.

பெண்கள் நாட்டின் கண்கள்.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசியல் விவகாரங்களில் பெண்களின் வகிபங்கு போதாமை

இன்று மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம். பெண்களின் உரிமை சார் விடயங்களிலும் பெண்களுக்கான சமத்துவம் தொடர்பிலுமாக சர்வதேச மகளிர் தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

உலகம் முழுமையிலும் பெண்களுக்கு ஏற்படுத்தப்படும் வன்முறைகளும் பெண் அடிமைத்தனமும் பால் நிலை சமத்துவத்தைக் கடுமையாகப் பாதித்தன.

இதன்காரணாக பெண்களுக்கான அமைப்புகள் சர்வதேச ரீதியில் உருவாக்கப்பட்டன.

இதற்கு மேலாக, பெண்ணியவாதிகளின் பிரவேசமும் பெண்களின் உரிமைசார் விடயங்களில் கணிசமான வகிபங்கைக் கொண்டிருந்தது.

எனினும் பெண்களைத் தெய்வமாகப் போற்றுகின்ற பண்பாடு எங்கள் தமிழினத்துக்கு உரித்தானது என்பதில் நாம் பெருமையடைய முடியும்.

பெற்ற தாயை, பிறந்த மண்ணை, கடலை, கங்கையை தெய்வமாகப் போற்றிய தமிழன் தாய்க்கு வழங்கிய முதன்மை எங்கும் காணுதற்கரியது. அதனால் எந்தத் தமிழ்க் கவிஞனும் பெண்களின் பெருமையைப் பேசத் தவறவில்லை.

வள்ளுவன் முதல் கம்பன், இளங்கோ, பாரதி என, அத்தனை புலவர்களும் பெண்களின் பெருமையை உன்னதமாகப் போற்றினர்.

தவிர, ஆண்களின் சிறப்புக்கு காரணமாக பெண்கள் இருப்பதை எடுத்துக் கூறுவதிலும் தமிழ் இலக்கியங்கள் பின்னிற்கவில்லை.

அதேநேரம் பெண்ணடிமைத்தனத்தை முற்றாக வேரறுப்பதற்காக பாரதி போன்ற புரட்சி கவிஞர்கள் வீறு கொண்டெழுந்தனர்.

நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் என்று பாடிய பாரதி; மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்றான்.

இவ்வாறாக பெண்களுக்கு மோசம் செய்யும் சமூக வன்மத்துக்கு எதிராகக் குரல் கொடுத்த பாரதியின் சிந்தனை வேறெங்குள.

ஆக, பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க வேண்டுமென இந்த உலகம் சிந்திப்பதற்கு முன்னதாகவே தமிழினம் சிந்தித்தது.

இந்தச் சிந்தனையின் தோற்றுவாய்க் கவிஞனாகப் பாரதியைப் பார்க்க முடியும்.

பெண்ணடிமை இல்லாதுபோக வேண்டுமாயின் அதனை இரண்டு வழிகளில் செய்தாக வேண்டும். அதில் ஒன்று மக்கள் சமூகம் பெண்களுக்கான மதிப்பை உரியவாறு கொடுக்க வேண்டும்.

மற்றையது தங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அநீதியை வெட்டிச்சரிக்க பெண்களே போராட வேண்டும்.

இந்த இயங்கு நிலைகளின் மூலமாகப் பெண்களின் உரிமையை, அவர்களுக்கான சமத்துவத்தை நிலைநிறுத்த முடியுமென பாரதி முன்மொழிந்தான்.

பாரதியின் புரட்சி மிகப்பெரும் வெற்றியை தந்தது எனலாம். எனினும் அரசியல் விவகாரங்களில் ஈழத் தமிழ்ப் பெண்களின் வகிபங்கு போதாமல் இருப்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதாவது அரசியல் விவகாரங்கள் மற்றும் அரசியலில் பங்கேற்பு என்பதில் தமிழ்ப் பெண்களின் வகிபாகம் போதாமல் இருப்பதன் காரணமாக மிகப்பெரும் பின்னடைவுகளைச் சந்திக்க நேரிடுகிறது.

எனவே இன்று மார்ச் 8 சர்வதேச மகளிர் தினமானது தமிழ்ப் பெண்களின் அரசியல் பிரவேசத்துக்கு வழிகோலுவதாக அமையட்டும்.

# சவால்களை எதிர்கொள்பவர்களாக பெண்கள் எழுச்சி கொள்ளவேண்டும்

(யாழ்ப்பாணம்)

பல வழிகளிலும் பிரச்சினைகளைச் சந்தித்து சமூகத்தில் ஒடுங்கி வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களை வறுமையிலிருந்தும், சமூகத்தின் பிற்போக்குத்தனமான பரிகாசங்களிலிருந்தும் மீண்டு வர செய்வதும், அவர்களுக்கு நம்பிக்கையான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுமே எமது கடமையாகும். பெண்கள் சவால்களை வெற்றி கொள்வார்களாக வாழும் சூழலைத் தோற்றுவித்து பெண்கள் தினத்தை அர்த்தமுள்ளதாக்க அனைவரும் பாடுபட வேண்டும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (இ-7)

## சிரியாவில் தப்பிச் செல்ல முயன்ற 400 ஐ.எஸ்.போராளிகள் கைது

(டமாஸ்கஸ்)

சிரியாவின் பாக்ஹூஸ் பகுதியில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற ஐ.எஸ்.போராளிகள் 400 பேரை சிரிய இராணுவம் கைது செய்துள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டிலிருந்து சிரிய இராணுவத்துககும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையே சிரியாவில் மோதல இடம்பெற்று வந்தது. இந்நிலையில் மேற்குலக நாடுகளின் உதவியுடன் சிரிய அரசாங்கம் போரை இறுதிக் கட்டத்துககு கொண்டுவந்துள்ளது.

யுத்தம் இறுதி கட்டத்தை அடைந்துள்ள நிலையில் ஐஎஸ் அமைப்பினர் சிரியாவின் பாக்ஹூஸ் பகுதியினை மாத்திரம் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர்.

இந்நிலையில் போராளிகள் அங்கிருந்து தப்பி செல்வதாக கடந்த வாரங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தப்பியோட முயன்ற 400 போராளிகளை சிறை பிடித்திருப்பதாக சிரியா தெரிவித்துள்ளது.

இதேவேளை 100 போராளிகள் இராணுவத்திடம் சரணடைந்துள்ளனர். (7)

## யானை கடத்தல் விவகாரம்

## அலி ரொஷான் உள்ளிட்ட ஏழு பேரும் விடுதலை!

சட்டவிரோதமான முறையில் யானை கடத்தலில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்படும் அலி ரொஷான் என அறியப்படும் நிராஜ் ரொஷான் உள்ளிட்ட ஏழு பேரையும் விடுவிக்க கொழும்பு விசேட நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது சம்பந்தமான வழக்கை விசாரிப்பதற்கு கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை என்ற காரணத்தால் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு சம்பத் அபேகோன் (தலைவர்), சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

முன்னதாக இந்த வழக்கை விசாரிப்பதற்கு கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று பிரதிவாதிகள் சார்பான சட்டத்தரணி நீதிமன்றில் ஆட்சேபனை தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ் பிரதேசத்தில ஊரணி, இலந் தைக்காடு, நாச்சிமார் கோவி லடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, பொலிகண்டி ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் வற்றாப்பளை, கேப்பாப்புலவு, முல்லைத்தீவு நகரம், உண்ணாப்பிலவு, கள்ளப்பாடு, செல்வபுரம், முல்லைத்தீவு விமானப் படை-I மற்றும II, 59வது படைப்பிரிவு (14ESR- 01 மற்றும் 14ESR- 02), SFHQ வற்றாப்பளை, Mari Time Pattu 14 ESR, 12 VIR, 16 ESR, FMA, SLASC, 11 ESR, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அலுவலகம், ஓஷன் Park ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பட்டாணிச்சூர் கிராமம், ஆண்டியப் புளியங்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் நானாட்டான் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

## மாணவர்களுக்கான விசேட அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நிலவும் வெப்பமான கால நிலை தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்குரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு மாகாணக் கல்வியமைச்சின செயலாளர் எஸ். சத்தியசீலன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு அறிவுறுத்தும் வகையிலும் எடுக்கப் பட வேண்டிய முன்னாயத்தங்கள் தொடர்பிலும் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்படடுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-10)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### விரிவடையும் மெய்யுணர்வே அமைதி

நம் மெய்யுணர்வு உடலளவில் இருக்கும் போது கிளர்ச்சி-தூண்டுகோல்; அது மனமகிழ்வைத் தருகினறது. மெயயுணாவு சுருஙகுும (குறுகும) போது வேதனை, கவலை ஏற்படுகிறது. கவலை என்பது மெய்யுணர்வின் சுருக்கம்.

மெய்யுணர்வானது உடலில் வரையறைக்குட்பட்ட வழியாகச் செல்லும் போது இன்பம் அனுபவிக்கப்படுகிறது. கிளர்ச்சிகளால் திரும்பத் திரும்ப அனுபவிக்கும் இன்ப உணர்வு செயலற்ற நிலைக்கும் மந்தமான நிலைக்கும் காரணமாகிறது. பெரும்பாலும் சமையல்காரர்கள் தான் சமைத்த உணவை அனுபவித்துச் சாப்பிடுவதில்லை. ஒரே இசை திரும்பத் திரும்பக் கேட்கப்படும் போது அது அதன் கவர்ச்சியை இழந்து விடுகிறது.

கிளர்ச்சிகள் கூர்ந்து கவனிக்கப்பட்டால் மெய்யுணர்வு விரிவடைந்து அமைதி உண்டாகிறது. விழிப்புணர்வால் களாசசிகள தஙகள முககியததுவததை இழநது விடுகினறன. அவை இருநதாலும இலலாவிடடாலும எநத மாறறததையும ஏறபடுததுவதிலலை. எலலா விதமான இன்பங்களும் வெறும் கிளர்ச்சிகள் தான். அவற்றை விட நீ மேலானவன் என்பதை உணர்வது சுதந்திரத்தைத் தருகிறது.

வேதனை என்பது மெய்யுணர்வு விரிவடைய வேண்டும், விடுபடவேண்டும் என்று விரும்புவதைத் தவிர வேறில்லை. களாசசிகளின பேராவலலிருநது விடுதலை அடைவதே முக்தி, வேதனை நிரந்தரமான நிலை அல்ல. மெய்யுணர்வு விரிவடைநது பேரானநதமாக விழைவது அதன இயலபு.

நீரின் இயல்பு கீழ் நோக்கிப் பாய்வது; காற்றின் இயல்பு அழுத்தமின்றி இருப்பது; அது போன்று இயற்கையான மெய்யுணர்வின் இயல்பு விரிவடைந்து அமைதியில் இருப்பது. தூக்கமின்மை நோயுடையவர், எப்படித் தூங்குவது என்பதை மறந்திருப்பது போல், நம்மில் பலர் எப்படி அமைதியில் இருப்பது, பேரானந்தத்தில் இருப்பது என்பதை மறந்து விட்டிருக்கின்றோம்.

கேள்வி: சத்சங்கத்தில் உள்ள மகிழ்ச்சி பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ஸ்ரீஸ்ரீ: சத்சங்க மகிழ்ச்சி உன்னை விரிவடையச் செய்கிறது.

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

பசுவுக்கு அகத்திக்கீரை, பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை, பசும்புல் இவைகளை வாயிலே தருகின்றோம். மடியில் படிக்கணக்காகப் பால் பெறுகின்றோம். தந்தது வாயில்; பெற்றது மடியில். அதுபோல் வறியவர்க்குப் பயன் கருதாமல் சிவார்ப்பணமாகச் செய்தது, ஒன்று கோடியாகப் பெருகி வரம் என்று உணர்க.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உங்கள் இராசியில் இராகு-கேது ஒன்றாக சஞ்சரித்தால் என்ன செய்ய வேண்டும்?

**தனுசு**

தனுசு இராசிககாரரகளுககு நநதி யோகததால உறவினர்களுடன் பிரச்சினைகள் ஏற்படலாம். குறிப பாக உடன பிறந்தவர்களுடன் பெரிய பிரச்சினைகள் ஏற்படலாம். சனிககிழமைகளில கருபபு பருபபை தானம செயவது உஙகளுககு ஏறபடும பாதிபபின அளவை குறைககும.

**மகரம்**

நந்தி யோகம் காரணமாக மகர இராசிக்காரர்களுக்கு மருத்துவ பிரச்சினைகள் ஏற்படலாம். சிலசமயம் மரணம் ஏற்படும் ஆபத்துகள் கூட ஏற்படலாம். "ஓம் சம் சனீஸ்வராய நமஹ: என்ற மந்திரத்தை தினமும் காலை கூறி சனிபகவானை வழிபடுங்கள்.

**கும்பம்**

கும்ப இராசிககாரகளுககு நநதி யோகம சடடவிரோதமான காரியங்களில் ஈடுபடவும், மர்மமான செயல்களில் ஈடுபடவும் தூண்டும். இது அவர்கள் வாழ்க்கையையே பாதிக்கும். இதனை சமாளிக்க சிவபெருமானிடம் சரணடையுங்கள்.

**மீனம்**

நநதி யோகததின காரணமாக மன இராசிககாரரகளுக்கு பணப்பிரச்சினைகள் ஏற்படும், வழக்கமான ஊதியத்தில் கூட பிரச்சினை ஏற்படலாம். தண்ணீரில் மஞ்சளை கலந்து சூரியபகவானுக்கு வைத்து வழிபடுங்கள். அதேசமயம் சனிக்கிழமைகளில் கடன் வாங்குவதையோ, கொடுப்பதையோ தவிருங்கள்.(முற்றும்)

# மாகாண மட்ட உதைபந்தாட்டம்
# தெல்லிப்பழை மகாஜன சம்பியன்



இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலைகளின் 12 வயதுப்பிரிவு ஆண், பெண் கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டி அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இத் தொடரில் பெண்கள் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரியின் பெண்கள் அணி சம்பியனாகியுள்ளது.

குழுநிலைப் போட்டிகளில் மகாஜனக் கல்லூரி அணி கிளிநொச்சி வலைப்பாடு அ.த.க.பாடசாலையை 3:0 என்ற கோல்கணக்கிலும் அரியாலை ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தை 4:0 என்ற கோல்கணக்கிலும் வெற்றி பெற்றதுடன் நாவற்குழி மகா வித்தியாலயத்துடனான போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

அரையிறுதி யாட்டத்தில் கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தை 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இறுதியாட்டத்தில் மானிப்பாய் மகளிர் கல்லூரியை எதிர்கொண்டது. மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இறுதியாட்டத்தின் முதல்பாதியாட்டத்தில் 1:0 என மகாஜன முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதியாட்டம் கோல்கள் எதுவுமின்றி முடிவடைய மகாஜன 1:0 என வெற்றிபெற்று மாகாண சம்பியனானது. தேசியமட்டப் போட்டி மே மாதம் நடைபெறவுள்ளது.

கடந்த வருடமும் 12 வயது பெண்கள் அணி மாகாண சம்பியனாகி தேசிய மட்டத்தில் காலிறுதிப்போட்டி வரை முன்னேறியமையும் குறிப்பிடத்தக்கது. (க-26-105)

# நல்லூர் பிரதேச சம்பியனானது அரியாலை சரஸ்வதி இளைஞர்



நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடர் கடந்த திங்கட்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது. தொடரின் இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சரஸ்வதி இளைஞர் கழகம் களத்தடுப்பை தேர்வு செய்ய முதலில் துடுப்பெடுத்தாடிய காந்தி இளைஞர் கழகம் 27 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது. 28 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு ஆடிய சரஸ்வதி இளைஞர் கழகம் 5 இலக்குகளால் வெற்றி பெற்று சம்பியனாகியது. (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378
என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# போராடி வென்றது அரியாலை கில்லாடிகள் 100




73 ஓட்டங்களை விரட்டிய அரியாலை கில்லாடிகள் 100 அணி, 9.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளைப் பறிகொடுத்து வெற்றியிலக்கை அடைந்தது. நெல்லை பிளாஸ்டர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம், குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. அரியாலை கில்லாடிகள் 100 அணியை எதிர்த்து லைட்னிங் கோக்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற லைட்னிங் கோக்ஸ் அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. திருபரன் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும், ஜெனி 18 ஓட்டங்களையும், துவாரகன் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். அரியாலை கில்லாடிகள் 100 அணி சார்பில் பந்து வீச்சில் அலன், கபில் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள். 73 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்து ஆடிய அரியாலை கில்லாடிகள் 100 அணி, 9.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. செல்ரன் 21 ஓட்டங்களையும், அயன் 12 ஓட்டங்களையும், அஜித் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

லைட்னிங் கோக்ஸ் அணி சார்பில் பந்து வீச்சில் ஜனா, சந்திரன், ஜெனி மூவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினார்கள். ஆட்டநாயகன் விருதை அரியாலை கில்லாடிகள் 100 அணி வீரர் செல்ரன் பெற்றுக் கொண்டார். சகல துறை ஆட்டநாயகன் விருதை லைட்னிங் கோக்ஸ் அணி வீரர் சந்திரன் பெற்றுக் கொண்டார். சிறந்த நன்னடத்தை அணியாக கொக்குவில் கிங்ஸ் அணி தெரிவு செய்யப்பட்டது.

அதிக ஓட்டங்களைக் குவித்த வீரருக்கான விருதை ஸ்ரைகஸ் அணி வீரர் அனோசன் பெற்றுக் கொண்டார். அதிகூடிய இலக்குகளைச் சரித்த வீரருக்கான விருதை ஸ்ரைகஸ் அணி வீரர் அஜந்தன் பெற்றுக் கொண்டார். அதிகூடிய ஆறு ஓட்டங்களைப் பெற்ற வீரருக்கான விருதை ஸ்ரைகஸ் அணி வீரர் அனோசன் தட்டிச் சென்றார். (க)

# தேசிய சம்பியன் ஆகியது யாழ்.மத்திய கல்லூரி அணி



இலகு வெற்றியுடன் பிரிவு III சம்பியனான யாழ். மத்திய கல்லூரி அணி 15 வயதுக்கு உட்பட்ட பிரிவு III பாடசாலை அணிகளுக்கு இடையிலான சிங்கர் கிண்ணத்திற்கான கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் நிட்டம்புவ, ஸ்ரீ சங்கபோதி கல்லூரி அணியை கவிதர்சனின் பந்துவீச்சு கஜன், பெல்சியன் ஆகியோரது துடுப்பாட்டத்தினதும் துணையுடன் போட்டியில் இலகு வெற்றி பெற்று யாழ்.மத்திய கல்லூரியினர் சம்பியன்களாக முடிசூடிக் கொண்டனர்.

ஒரு நாள் நான்கு இன்னிங்சுகளை கொண்டதான இந்தப் போட்டி கடந்த 5 ஆம் திகதி யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றிருந்தது. இறுதிப்போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கம்பஹா ஸ்ரீ சங்கபோதி கல்லூரியினர் முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு தீர்மானித்திருந்தனர். ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஹிருச லக்சான் சிறந்த ஆரம்பத்தினை வழங்கியபோதும் தொடர்ந்து வந்த வீரர்கள் விரைவாக விக்கெட்டுக்களை பறி கொடுக்க 36 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை பறிகொடுத்தனர். ஐந்தாம் இலக்கத்தில் களமிறங்கிய பபசறடில்கறவின் 17 ஓட்டங்களுடன் கம்பஹா வீரர்கள் 66 ஓட்டங்களை எட்டினர். ஆறாவது விக்கெட்டிற்காக கவிஷ்க மல்ஷான், திசாத்ய உதால ஜோடி விரைவாக 41 ஓட்டங்களை பெற்றுக் கொடுக்க வருகைதரு அணியினர் 46 ஓவர்களில் 107 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

கவிதர்சனின் சுழல் பந்துவீச்சில் அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட 119 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தனர். அரையிறுதிப் போட்டியிலும் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்த கவிதர்சன் நேற்றைய இறுதிப்போட்டியில் 7 விக்கெட்டுக்களை தன்வசப்படுத்தியிருந்தார்.

பதிலுக்கு தமது முதலாவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மத்திய கல்லூரியினர் இரண்டாவது ஓவரிலேயே முதலாவது விக்கெட்டினை பறிகொடுத்தனர். ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் பெல்சியனின் 30 ஓட்டங்கள், சன்சஜனின் 19, கஜன் 46 ஓட்டங்கள் பெற 26 ஓவர்களில் வெறுமனே 3 விக்கெட்டுக்களை மாத்திரம் பறிகொடுத்து சங்கபோதி கல்லூரியை விட முன்னிலை பெற்று போட்டியில் வெற்றி பெற்றனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக கவிதர்சன் தேர்வு செய்யப்பட்டிருந்தார். 600 இற்கும் மேற்பட்ட அணிகள் 10 மாதங்களுக்கும் மேலாக மோதியிருந்த இந்தப் போட்டித் தொடரின் சம்பியன்களாக மத்திய கல்லூரி முடிசூடியுள்ளது. (க)

# அரையிறுதியில் ஆனைக்கோட்டை யூனியன்

யாழ்ப்பாணம் லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, யாழ்.மாவட்டத்திலுள்ள லீக்குகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் கால்ப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெற்று, தற்போது காலிறுதி யாட்டங்கள் நடைபெறுகின்றன.

நான்காவது காலிறுதி யாட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதியது. இதில், ஆனைக்கோட்டை யூனியன் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் வென்று அரையிறுதிக்குள் நுழைந்தது. (க-26)

# மடுவலய பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பம்

மடு.வலயமட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகள் நேற்று 7 ஆம் திகதி ஆரம்பமாகி 8, 9,10 ஆம் திகதிகளில் நடைபெறுகின்றன.

இதில் முதலாம் நாள் நிகழ்வு நேற்று மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் தலைமையில்நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக, வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற் றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெ.ஜெனிற்றன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தடகளப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வு நாளை மறுதினம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில்பிரதம விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கே.சுவர்ணராஜா, சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) ஆர்.ராஜசீலன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-5)

## போர்க்குற்ற விசா...

களில் குறைந்தது 40 ஆயிரம் தமிழ் பொது மக்கள் அரச படைகளால் கொல்லப்பட்டதாக குற்றம்சாட்டப்படுகிறது.

இந்த நிலையில், போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக நம்பகமான விசாரணைகளை நடத்தக் கோரி, 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மீளாய்வு செய்யுமாறு ஐ.நா மனித உரிமைகள் பேரவையிடம் முறைப்படி கோரவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

போர் முடிந்து பத்தாண்டுகளாகி விட்டன. நாங்கள் நாட்டில் அமைதியை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று கொழும்பில் நேற்று முன்தினம் தமது வதிவிடத்தில் செய்தியாளர்களிடம் ஜனாதிபதி கூறினார்.

எமக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டாம் என்று அவர்களிடம் (ஐ.நா) நான் கூறவுள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தை .தோண்டியெடுத்து பழைய காயங்களை மீண்டும் கிளற வேண்டாம். கடந்த காலத்தை மறந்து நாம் சமாதானத்தில் வாழ்கிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம் என்று நான் அவர்களிடம் கூற விரும்புகிறேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2015இல் அதிகாரத்துக்கு வந்ததும், இலங்கை போர்க்கால மீறல்களுக்கு பொறுப்புக்கூறுவதை உறுதிப்படுத்துவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

சரியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், போர்க்குற்றவாளிகள் நீதியின் முன்கொண்டு வரப்படுவதில் எந்த முன்னேற்றமும் எட்டப்படாத நிலையில் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட முன்னைய கால அவகாசம் முடிவுக்கு வந்திருந்தது.

2015இல், நம்பகமான விச்ாரணைகளை நடத்த 18 மாத கால அவகாசத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவை அளித்திருந்தது.

எனினும், எந்த விளைவுகளும் இல்லாத நிலையில், இரண்டு ஆண்டு கால அவகாசம் இந்த மாதத்துடன் நிறைவடைகிறது.

இந்த நிலையில், தமது சார்பில், கோரிக்கைகளை முன்வைப்பதற்காக ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு கட்சியின் மூன்று மூத்த உறுப்பினர்களை ஜெனிவாவுக்கு அனுப்பவுள்ளதாக, ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அவர்கள், (ஐ.நா) சாதகமான பதிலைத் தருவார்கள் என்றும் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐ.நாவுக்கு முன்னர் வாக்குறுதிகளை அளித்திருந்த போதும், ஜனாதிபதி எந்த விசாரணைகளையும் ஆரம்பிக்கவில்லை. .

இந்த நிலையில், கொழும்பு மெதுவாகவே செயற்படுகிறது என்று ஐ.நாவின் உயர்மட்ட இராஜதந்திரிகள் கவலை வெளியிட்டுள்ளனர் என்றும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## அரசியலமைப்பு...

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா பி டெப்ளிட்ஸ் மற்றும் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆர்னோல்ட் உடனான சந்திப்பு நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்றது.

இச்சந்திப்பில், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் மக்களின் நிலைப்பாடுகள் குறித்து அமெரிக்கத் தூதுவர் முதல்வரிடம் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது முதல்வர் தெரிவிக்கையில், மக்கள் பெரும் அச்சத்தோடு இருக்கின்றனர். இலங்கை மீதான ஐ.நாவின் 30.1 தீர்மானம் மற்றும் 34.1 தீர்மானங்கள் ஊடாக மக்கள் எதிர்பார்த்திருந்த நீண்டகால அரசியல் அபிலாசைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு குறைந்துவிட்டது.

கடந்த ஒக்டோபரில் நடைபெற்ற அரசியல் புரட்சியுடன் பாராளுமன்றில் 2/3 பெரும்பான்மை இல்லாது போனதன் பின்னர் நம்பிக்கை இழக்கப்பட்டுவிட்டது.

மக்கள் 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஏகோபித்த உரிமையைத் தந்தார்கள். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்பொறுப்பிலிருந்து விலகிச் செல்லமுடியாது என்று தெரிவித்தார்.

இதையடுத்து அமெரிக்கத் தூதுவர் குறிப்பிடுகையில், புதிய அரசியலமைப்பு முயற்சிகள் குறித்து அமெரிக்காவின் கண்காணிப்பு தொடர்ந்து கொண்டிருப்பதாகவும், அதற்கான ஒத்துழைப்புக்கள் தொடர்ந்தும் இருக்கும் என்ற கருத்தினையும் பதிவு செய்தார்.

அத்துடன், ஜெனிவாவில் இம்முறை இலங்கைக்கு வழங்கப்படுகின்ற கால அவகாசத்தினால் மாத்திரமே இலங்கையின் நிகழ்ச்சி நிரலை தொடர்ந்துகொண்டு இலங்கையின் நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணிக்க முடியும் என்றும் இல்லாவிட்டால் ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான நிகழ்ச்சி நிரல் இல்லாது போய்விடும் என்ற கருத்தையும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## பொருளாதார...

கடந்த 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாறியிருக்காவிட்டால் இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் பொருளாதார தடையினை விதித்திருப்பார்கள் என சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு-செலவு திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாது போனதன் காரணமாகவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷ தேர்தலை நடத்தினார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## எழுத்து மூலம்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 40ஆவது கூட்டத்தொடர் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இறுதிப் போரில் இடம்பெற்ற .போர்க்குற்ற மீறல்கள் குற்றச்சாட்டு தொடர்பான விடயம் வரும் 20ஆம் திகதி விவாதத்துக்கு வருகிறது.

மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கை அரசின் சார்பில் கலந்து கொள்வதற்காக வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவனை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

ஜெனிவாவுக்கு அடுத்த வாரம் பயணமாகவுள்ள வடக்கு மாகாண ஆளுநர், மக்கள் சார்பில் முன்வைக்கப்படவேண்டிய கோரிக்கைகளை எழுத்துமூலம் தருமாறு கேட்டுள்ளார் என்று அவரது ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் முன்வைக்க வேண்டுமென கருதும் தமது கோரிக்கைகளை பொதுமக்கள் அல்லது பொது அமைப்புகள், எதிர்வரும் புதன்கிழமை 13ஆம் திகதி யாழ்ப்பாணம் கைதடியில் அமைந்துள்ள வட மாகாண முதலமைச்சர் அமைச்சு அலுவலகத்தில் இடம்பெறவுள்ள ஆளுநரின் பொதுமக்கள் சந்திப்பின்போது எழுத்து மூலமாக நேரடியாக கையளிக்க முடியும் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-3)

## அமெரிக்க தூது...

ஒன்றில் நேற்று இடம்பெற்றது. இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் போது தற்போதுள்ள அரசியல் நிலைமைகள் மற்றும் ஜெனிவா கூட்டத் தொடர் குறித்து கலந்துரையாடப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். (ம-3)

# டாக்டர் சிவராஜா காலமானார்



(யாழ்ப்பாணம்) வைத்திய கலாநிதி என்.சிவராஜா நேற்று முன்தினம் புதன் கிழமை காலமானார்.

மருத்துவத் துறையில் மிக நீண்ட காலம் சேவையாற்றிய அவர் யாழ்ப் பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவப் பிரிவின் தலைவராகவும், சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர்.

ஓய்வுகாலத்துக்குப் பின்னர் உலக சுகாதார ஸ்தாபனத்தின் சேவைகளை யாழ்ப் பாணத்தில் முன்னெடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

### கிளிநொச்சி கொலை தொடர்பில்

# சந்தேகநபரை தடுப்புக்காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

கிளிநொச்சி உதய நகர் பகுதியில் காப்புறுதி நிறுவனப்பணியாளர் ஒருவரை வெட்டிக் கொலை செய்த சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை இன்று வரை பொலிஸ் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி உதயநகர் கிழக்கு பகுதியில் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை காலை வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

குறித்த நபரை அவரது உறவினர் ஒருவரே வெட்டியதாகவும் வெட்டிய நபர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார் என்றும் தெரியவந்தது. இதனையடுத்து மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று குறித்த சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து சந்தேக நபரை இன்றையதினம் வரை பொலிஸ் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-315)

### திருக்கேதீஸ்வர அலங்கார வளைவு

# நீதிமன்ற தீர்ப்புக்கமைவாக நேற்று அகற்றப்பட்டது

கடந்த சிவராத்திரி தினத்திற்கு முதல் நாள் திருக்கேதீஸ்வரத்தின் ஆலய வீதியில் அலங்கார வளைவு நிர்வாகம் மற்றும் தொண்டர்களால் அமைக்கப்பட்டுக்கொண்டிருந்த போது பங்குத் தந்தையர் சகிதம் சில கத்தோலிக்கர்களால் அகற்றப்பட்டது.

பின்னர் நிர்வாகத்தினர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். அதற்கு அமைவாக வழக்கினை விசாரித்த மன்னார் பதில் நீதவான் கயஸ் பல்டானோ திருவிழா நடைபெறுவதனால் திருக்கேதீஸ்வரம் ஆலய வீதியில் மீண்டும் அலங்கார வளைவு அமைப்பதற்கு நான்கு நாட்களுக்கு மன்னார் பதில் நீதவான் அனுமதி அளித்திருந்தார்.அந்த வகையில் நேற்று மாலை 5 மணியளவில் திருக்கேதீஸ்வரம் ஆலய நிர்வாகத்தினரும் தொண்டர்களும் இணைந்து அலங்கார வளை வினை அகற்றினார்கள்.

இதன்போது கருத்து தெரிவித்த சிவ தொண்டர்கள், அன்பே சிவம் என்னும் நாமத்திற்கு இசைவாக நீதிமன்ற தீர்ப்பை மதித்து திருக்கேதீஸ்வரம் வீதியில் அமைத்திருந்த அலங்கார வளைவை தற்காலிகமாக அகற்றுவதாக தெரிவித்தனர்.

கடந்த 4ஆம் திகதியில் இருந்து நேற்று வரை அவ்விடத்திற்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது இது சம்பந்தமான வழக்கானது இன்றைய தினம் மன்னார் நீதிமன்றத்தில் நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது (ம-285)

### இராணுவத்தினரின் ஏற்பாட்டில்

# தருமபுரத்தில் இன்று இலவச மூக்குகண்ணாடி வழங்கி வைப்பு

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கண்பார்வை குறைபாடுடைய 500 வயோதிபர்களுக்கு இலவசமாக கண் பரிசோதனைகளை மேற்கொண்டு மூக்குக்கண்ணாடிகளை இலங்கை இராணுவத்தின் 52ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் 52ஆவது படைப்பிரிவின் கண்டாவளை இராணுவ கட்டளைப் பணியகத்தினால் வழங்கி வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் ஆரம்பமாகி தருமபுரம் மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள இலங்கை திருச்சபையின் புனித லூக்கா ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு இலங்கை இராணுவத்தின் 52ஆவது படைப்பிரிவின் கண்டாவளை கட்டளைப் பணியகத்தின் மேஜர் திசாநாயக்கா கலந்து கொண்டு பயனாளிகளுக்கு மூக்கு கண்ணாடிகளை வழங்கி வைக்கவுள்ளார்.

இன்றைய இந்த நிகழ்வுக்கு தருமபுரம் பகுதியில் வசிக்கும் கண் பார்வை குறைபாடு உடைய முதியவர்களை கலந்து கொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள். (ம-15)

மஹஜன சம்பத
திகதி 2019/03/07
சீட்டிழுப்பு இலக்கம் 3870
ஆங்கில எழுத்து U — வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 1 9 9 2 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.03.07
சீட்டிழுப்பு இலக்கம் 2056
ஆங்கில எழுத்து O — வெல்லப்பட்ட இலக்கங்கள் 28 31 33 43
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1534 திகதி 2019/03/07
M C Q
வெற்றி இலக்கங்கள் 04 30 39 40 — போனஸ் இலக்கம் 62
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/03/07
சீட்டிழுப்பு இலக்கம் 521
லக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 15 21 23 32 — 35
தேசிய லொத்தர் சபை

## வெப்பமான...

மும் அதிக வெப்பத்துடனான வானிலை நிலவக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள செய்திக்குறிப்பொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த பகுதிகளில் உள்ள மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அந்த திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

வெப்பமான வானிலையால்,. அதிக களைப்பு உள்ளிட்ட உடலியலில் மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்பதனால், போதுமான அளவு நீரை அருந்துமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை கோரியுள்ளது.

மேலும், பொதுவெளிகளில் கடின உழைப்பில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும், இயன்றளவு நிழலான இடங்களை நாடுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ம-3)

## அட்மிரல் வசந்தவை...

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவை, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்வதற்கு உச்ச நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

அட்மிரல் வசந்த கரன்னகொட தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை வழக்கை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட, உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்களைக் கொண்ட அமர்வு, இந்த தடை உத்தரவைப்பிறப்பித்துள்ளது.

அதேவேளை, இந்த வழக்கில் 14 ஆவது சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள்ள அட்மிரல் வசந்த கரன்னகொட எதிர்வரும் மார்ச் 11ஆம் நாள் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகி வாக்குமூலம் அளிக்க வேண்டும் என்றும், உச்சநீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

நேற்றைய வழக்கு விசாரணையில் அட்மிரல் வசந்த கரன்னகொட சார்பில் முன்னிலையான சட்டவாளர், தமது கட்சிக்காரருக்கு எதிராக அரசசார்பற்ற நிறுவனங்கள் சதி செய்வதாக குற்றஞ்சாட்டியிருந்தார். (ம-3)

## மன்னார் புதைகுழி...

புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட 335 எலும்புக்கூடுகளில், தெரிவு செய்யப்பட்ட 6 எலும்புக்கூடுகளின் மாதிரிகள் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டு, புளோரிடாவில் உள்ள ஆய்வகத்தில் கார்பன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுமுடிவுகள் அதிகாரபூர்வமாக மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் புதைகுழி அகழ்வைத் தொடருவதா நிறுத்துவதா என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்றும், முடிவு எடுக்கப்படும் வரையில் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்படும் என்றும் சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-285)

## இலங்கை அரசா...

கோரிக்கை விடுத்துள்ளது.

அதற்கமைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் புதிய தீர்மானத்திற்கு இலங்கை ஆதரவளிக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

2019ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தின் மீதான இரண்டாம் நாள் விவாதம் நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனை குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், ஐ.நா. 34-1 தீர்மானத்திற்கமைய எழுத்துமூலமான அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், சொந்த விவகாரங்களை தாமே கையாள்வதற்கு ஐ.நா விடம் வேண்டுகோள் விடுக்கும் வகையில் 3 பிரதிநிதிகளை ஐ.நா விற்கு அனுப்பி வைக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குழப்பமான அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

உள்நாட்டு விவகாரங்களை தாமே கையாள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படாத நிலையிலேயே சர்வதேச விசாரணைக்கு கட்டளையிடப்பட்டது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளின் தாமதம் எம்மை ஏமாற்றமடையச் செய்துள்ளது. காணாமல் போனோர் அலுவலகம் நியமிக்கும் பணிகளிலும் பாரிய தாமதம் நிலவியது. ஆனால், இந்த தாமதங்களுக்கான காரணம் கூட முன்வைக்கப்படவில்லை.

இந்நிலையில், ஐ.நா வின் புதிய தீர்மானம் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அத்தீர்மானத்தை ஏற்று அதற்கு இணை அனுசரணை வழங்க வேண்டும் அது இலங்கையின் கடப்பாடு.

இது தொடர்பாகவும் கூட்டமைப்பிற்கு எதிராக பொய் பிரசாரங்கள் பரப்பப்பட்டு வருகின்றன. அதாவது நாம் அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்குவதாக தெரிவிப்பது முற்றிலும் பொய்யான பரப்புரை. புதிய தீர்மானம் நிறைவேற்றப்படாவிடின் இந்த விடயங்களை சர்வதேச சமூகம் கையாள முடியாது. இதனையே ஜனாதிபதி கோருகிறார். ஆனால், இதற்கு இடமளிக்காது உலகத்திற்கு இலங்கை கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (ம-3)

## 35 இலட்சம் ரூபாய் பணம் கேட்டு...

வந்த 8 வயது சிறுவன் ஒருவர் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் காணா மல் போயுள்ளார். பாடசாலை சென்று வீடு திரும்பிய குறித்த சிறுவன் தனது தாயாருடன் ரியூசன் சென்று வீடு திரும்பியிருந்தார்.

அதன் பின் தனது வீட்டில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள தனது அப்பப்பா வீட்டிற்கு தோட்டத்தினூடாக சென்றிருந்தார். இருப்பினும் சிறுவன் அப்பப்பா வீடு செல்லவில்லை.

சிறுவன் செல்லும் போது அவுஸ்திரேலியாவில் உள்ள தனது கணவருடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த தாயார் உரையாடி முடித்த பின் சிறுவன் சென்ற வீட்டிற்கு சென்றபோது அங்கு சிறுவன் வரவில்லை என சிறுவனின் அப்பப்பா தெரிவித்துள்ளார். அதன்பின் இரவிரவாக உறவினர்கள் இணைந்து தோட்டம் மற்றும் தோட்ட கிணறுகள் எல்லாம் தேடிய நிலையில் சிறுவனை காணவில்லை.

இதன்பின் நேற்றுக் காலை கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் தாயார் முறைப்பாடு செய்திருந்தார். இந்நிலையில், சிறுவனை சிறுவனின் தந்தை வெளிநாடு செல்ல காரணமான ஏஜென்சி கடத்தி வைத்திருப்பதாகவும் 35 இலட்சம் தந்தால் சிறுவனை விடுவிப்பதாகவும் தாயின் தொலைபேசிக்கு காலை அழைப்பு ஒன்று வந்திருந்ததுடன், கடத்தப்பட்ட சிறுவனும் தொலைபேசியில் பேசியுள்ளார்.

சிறுவன் தன்னை கூட்டிச் செல்லுமாறு தனது தாயாரிடம் தெரிவித்துள்ளார். மாலையும் பிறிதொரு தொலைபேசியில் இருந்து 35 இலட்சம் பணம் தருமாறு கோரி தாயாருக்கு அழைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறித்த தொலைபேசி இலக்கங்களையும் பெற்றுக் கொண்ட கனகராயன்குளம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-250)

## வடக்கின் தற்போதைய நிலைமை...

இந்த சந்திப்பின் போது வடமாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டதுடன் யாழ் மாவட்டத்தில் உள்ள மக்களின் பொருளாதார நிலைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்கள் எதிர்நோக்கியுள்ள பொருளாதார ரீதியிலான பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநர் விளக்கமளித்ததுடன் இந்த மக்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்கு சாத்தியமான நடவடிக்கைகள் குறித்து அவதானம் செலுத்துமாறும் இரு நாட்டு தூதுவர்களிடமும் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் வடமாகாணத்தை கட்டியெழுப்ப வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் மற்றும் நிபுணர்களின் தேவைகள் குறித்தும் ஆளுநர் இதன் போது சுட்டிக்காட்டினார். (ம-3)

## 232 ஏக்கர் தனி...

வலி. வடக்கு, காங்கேசன்துறை பகுதியில், காங்கேசன்துறை மத்தி மற்றும் நகுலேஸ்வரம் ஆகிய கிராமசேவகர் பிரிவில் உள்ள 232 ஏக்கர் காணிகளே சுவீகரிக்கப்படவுள்ளன.

கடற்படை முகாமிற்கு 167 ஏக்கர் காணியும், சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்காக சுற்றுலா அதிகாரசபைக்கு 65 ஏக்கர் காணியும் சுவீகரிக்கப்படவுள்ளது. சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்காக சுவீகரிக்கப்படும் காணியிலேயே, காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகையும் உள்ளடங்குகிறது.

சுவீகரிக்கப்படவுள்ள காணிகளில் பெரும்பாலானவை தனியாருக்கு சொந்தமானவை. சத்தமில்லாமல் ஆரம்பிக்கப்பட்ட இந்த காணி சுவீகரிப்பு முயற்சி, கணிசமான படிமுறையை கடந்துவிட்டது. அந்த பகுதியில் அளவை செய்வதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டு, தனியார் காணி உரிமையாளர்களுக்கும் பிரதேச செயலகத்தில் இருந்து கடிதம் மூலம் தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. காணி சுவீகரிப்பு படிமுறையின் செக்சன்- 2 பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

கடற்படை மற்றும் சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்காக சுவீகரிக்கப்படவுள்ள காணிகளில் பெரும்பாலானவை தனியாருக்கு சொந்தமானவை. காங்கேசன்துறை துறைமுகத்தை அண்டிய இந்த பகுதி எதிர்காலத்தில் சுற்றுலாத்துறைக்கு மிக உகந்த பகுதியாக கணிக்கப்பட்ட பகுதியாகும். அத்துடன், தமிழர்களின் பாரம்பரிய, புராதன வழிபாட்டிடங்களையும் கொண்ட பகுதியாகும். சுவீகரிக்கப்படும் பகுதிக்குள் சுமார் 7 வழிபாட்டிடங்கள் உள்ளடங்குகின்றன.

சுவீகரிக்கப்படும் காணியில் ஸ்ரீமத் நாராயண ஆலயத்திற்கு (கிருஷ்ணர் ஆலயம்) சொந்தமான 47 ஏக்கர் காணி, கதிரையாண்டவர் ஆலயத்தின் 25 ஏக்கர் காணி, சோலை வைரவர் மற்றும் சில ஆலயங்களின் 25 ஏக்கர் காணி, சடையம்மா சமாதி ஆலயத்தின் 20 ஏக்கர் காணி மற்றும் புராதன நல்ல தண்ணீர் கிணறு மற்றும் தனியார் காணிகள் இதில் உள்ளடங்குகின்றன.

அத்துடன், பழைய தெல்லிப்பழை வைத்திய சாலை காணியும் இதற்குள் உள்ளடங்குகிறது. காணி சுவீகரிப்பு படிமுறையில், செக்சன் - 2 படிமுறையென்பது, காணி உரிமையாளர்களிற்கு தகவல் வழங்கி, அளவீட்டுக்கான படிமுறையாகும். சுவீகரிக்கப்படவுள்ள காணிகள், நிலஅளவை திணைக்களத்தினால் எந்த சமயத்திலும் அளவீடு செய்யப்படலாம். அளவீடு செய்யும்படியான அறிவித்தல், நில அளவை திணைக்களத்திற்கும் வழங்கப்பட்டு விட்டது. எந்த சமயத்திலும் காணி அளவீட்டு பணிகள் நடக்கலாமென தெரிகிறது.

இதேவேளை, இந்த காணி சுவீகரிப்பு முடிவு வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணி கூட்டத்தில் எடுக்கப்பட்டதாவும், அந்த செயலணியின் அறிவித்தலின் படியே தாம் நடப்பதாகவும், தொடர்புடைய அரச அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-3)


டுபாய் வேலைவாய்ப்பு
விற்பனை பிரதிநிதிகள் (ஆண்/பெண்)
இம்மாதமே பயண ஏற்பாடு...
(C-5717)
Emerald Isle
License No. 2268
077 00 38 215
021 221 9 221
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி- 700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

கட்டார் வேலைவாய்ப்பு
கார்ப்பென்றர், காவன்றர் ஹெல்ப்பர், ஜிப்சம் கார்ப்பென்றர், பெயின்றர்
Emerald Isle
License No. 2268
077 00 38 215
021 221 9 221
இம்மாதமே பயண ஏற்பாடு... (C-5717)
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்
இருபாலை சந்திக்கு அண்மையில் (கிழக்கு வீதி)
திருமணத்தடை, புத்திரபாக்கியம் / புத்திரபாக்கியதடை, தொழில் வியா பாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்புதோஷங் கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக் குளத்திலும்... (புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு – யாழ்ப்பாணம்) (திங்கள், செவ்வாய் – வவுனியா)
தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:-
076 328 7119 (C-5714)

போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்
நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர்
பிரதி சனி 10.00 – 2.30 மணி
வரிமதிப்பீட்டாளர் பதிவாளர் சட்டமாணி
புள்ளி விபரவியலாளர்
பிரதி சனி 9.00 – 3.00 மணி
பல்கலைக்கழக விசேடகற்கை பொது உளச்சார்பு
பிரதி சனி 11.00 மணி
SLAS SLEAS
பிரதி ஞாயிறு 9.00 – 3.30 மணி
0766883394
(C-5718)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

ராஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623

ஸ்ரீ கொல்லிமலை மாந்திரீக ஜோதிடர்
மாந்திரீக சித்தர் யாழ்ப்பாணம் வருகை

ஜாதகம், குறிப்பு, கைரேகை ஆண்,பெண் வசியம். தொழில் கணவன் மனைவி பிரபலம் மற்றும் குழந்தை பாக்கியம், வெளிநாட்டுயோகம் ஆகிய அனைத்தும் சிறந்த முறையில் சொல்லப்படும்.

நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 8.00 மணி வரை
076 495 1787, 077 897 1672
யாழ்ப்பாணம் ஓட்டுமடம் வீதி
(7779)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.